கல்கி


KALKI 8.12.2002
ரூ. 6.00

சீஸன் சிறப்புப் பக்கங்கள்





சும்மா, விளையாட்டுக்கு!


Zircon
Stone
Jewellery
ZIRCON NECKLACE
Total cost Rs. 23, 200/-
(Inclusive of stone cost and making charges)
SWARNALAYA
Jewellery
5, Bazulla Road, T.Nagar, Chennai - 17 Tel : 8156386, 8157787 Cell : 9841035305
e-mail : asukumaran@eth.net www.swarnalayajewellery.com





கைவசம் ஒரு ஹீரோ!

தரமான கதைகளையும், திறமையான புதிய இயக்குனர்களையும் கண்ணை மூடிக் கொண்டு ஊக்கப்படுத்தும் தயாரிப்பாளர் ஆர்.பி. சௌத்ரி வீட்டிலிருந்து, ஓர் அறிமுகம்!

யெஸ்! ரவிமரியா இயக்கும் 'ஆசை ஆசை யாய்..' படத்தின் நாயகன் ஜீவா, சௌத்ரியின் மகன். மீசைகூட முளைக்காத ஜீவா, பார்ப் பதற்குப் படு சாந்தம். படிப்பில் ரொம்பவே பாந்தம். பிறகெதற்கு நடிப்பு?

"சென்னை ஆதர்ஷ் பள்ளியில் ப்ளஸ் டூ முடித்துவிட்டு, கனடா போய் மாயா எனும் கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ் சாப்ட்வேர் படிக்கத் திட்டமிட்டிருந்தேன். ஆனால் 'ஆசை ஆசை யாய்' படத்தின் கதையைக் கேட்ட பிறகு, நான் மெஸ்மரைஸ் ஆன மாதிரி ஆகி விட்டேன். அப்பாகூட ஆரம்பத்தில் நடிப்பு வேண்டாம் என்றுதான் சொன்னார். கதையைக் கேட்ட பிறகு அவரும் ஓகே சொல்லிட் டார்" என்கிறார் ஜீவா. அப்போர்ப்பட்ட கதையா?

"ஆமா! துளிக்கூட ஹீரோயிசம் கிடை யாது. இளைஞர்கள், பெண்கள்கிட்டே உடனே அங்கீகாரம் கிடைக்கும். சரியான வெஜிடேரியன் கதை. ஆனா எல்லார் மனசையும் பிழியற கதை" என்று சொல்லும் ஜீவாவுக்கு ஜோடி, ஜெயா தொலைக்காட்சி யின் 'காக மேலே' நிகழ்ச்சி புகழ் ஷர்மிளி!

மகனை ஹீரோவாக்கியது குறித்து சௌத்ரி யின் கருத்தைக் கேளுங்கள்!

"நம்ம கையில் ஒரு ஹீரோ இருந்தால், நாம் நினைப்பதை அப்படியே திரையில் கொண்டு வரலாம். ஹீரோயிசம் விரும்பும் நாயகர்களுக் காகக் கதையில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியமில்லை. தரமாக, வருஷத்திற்கு இரண்டு படம், கால்ஷீட் பிரச்னையில்லாமல் எடுத்துக் கொண்டிருக்கலாம் பாருங்க" அட!


இதெப்படி இருக்கு?

- ஸ்ரீ சக்கரம்

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com

ஈ மெயில் முகவரிகள் :

எடிடோரியல் : kalki@kalkiweekly.com சந்தா : subscription@kalkiweekly.com பிற தகவல்கள் : info@kalkiweekly.com



• கங்கூலி



• ஸ்ரீகாந்த்



• ராகுல்

வெல்வோமா?

பழைய குருடி கதவைத் திறடி கதை யாகி விட்டது இந்திய கிரிக்கெட் அணியின் நிலை. விஜயவாடா ஒரு நாள் போட்டியில் இந்திய வீரர்கள் ஆடியதைப் பார்த்தால் இப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது.

"இந்த மாதிரி ஆடினால், உலகக் கோப்பையின் போது திணறிப் போய் விடுவார்கள்" என்கிறார் ஸ்ரீகாந்த்.

சவுரவ் கங்கூலி சமீபத்திய பேட்டியில், 'நமது போலிங் சிறப்பாக இல்லாததுதான் தோல்விகளுக்குக் காரணம்' என்று கூறி இருக்கிறார். அப்படியானால் பேட்டிங்கில் நமது வீரர்கள் ஏன் சோபிக்கவில்லை?

"பெரிய ஸ்கோர்களை எட்ட வேண்டிய நிர்ப்பந்தத்தில் ஆடும் போது, விக்கெட்டுகள் வேகமாகச் சரியத்தான் செய்யும். அப்போது ரன் ரேட்டைக் காப்பாற்ற, அடுத்து வரும் ஆட்டக்காரர்கள் கவனமாக ஆட வேண்டும்" என்று சொல்லுகிறார் ராகுல் டிராவிட். ஆனால், அடுத்தடுத்துக் களம் இறங்கியவர்கள், தங்கள் பொறுப்பை உணர்ந்து ஆடியதாகத் தெரியவில்லையே?

முந்தைய மாட்சுகளில் 95 எடுத்த அகர்கரும், 99ம் 71ம் எடுத்த லக்ஷ்மணனும், 57 எடுத்த பங்கரும், எப்படியாவது ஜெயித்தே ஆக வேண்டும் என்ற நிலையில் இருந்த கடைசிப் போட்டியில், பொறுப்பாக நின்று ஆடி, ரன்கள் குவிக்காமல் போனது தோல்விக்கு இன்னொரு காரணம்!

"அதிக டெஸ்ட்டுகளில் ஆடாத போதும் சரண்தீப் சிங் கச்சிதமாகப் பந்து வீசி, அதிக ஓட்டங்கள் கொடுக்காமல் இருந்தபோது, அனுபவம் நிறைந்த ஸ்ரீநாத்தும், அஜித் அகர்கரும் இப்படிப் பந்து வீசலாமா?" என்று வருந்துகிறார் ஸ்ரீகாந்த்.



• அகர்கர்

"நமது போலிங்கும், ஃபீல்டிங்கும் இன்னும் சிறப்பாக இருந்தால், நாம் நிச்சயம் உலகக் கோப்பையை வெல்லலாம்!" என்று கூறியிருக்கிறார் யுவராஜ் சிங். பேட்டிங் மட்டும் பிரமாதமா? என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா?

டெஸ்ட் தொடரை நாம் கைப்பற்றியவுடன், இப்போதைய மேற்கிந்திய அணி அப்படியொன்றும் பலமானது அல்ல என்றார்கள். ஒரு நாள் தொடரில் மிகவும் போராடியே நாம் மூன்று பந்தயங்களில் வென்றதைப் பார்த்தால் அப்படித் தோன்றவில்லை.

உலகக் கோப்பைக்காக ஆடும் போதாவது, வெற்றி பெற வேண்டும் என்ற மன உறுதியோடு ஆடட்டும்!

— எஸ்.வி.என்.

கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை

அன்புடன் அழைக்கிறது



அமரர் கல்கி எழுதிய
திரைப்பட விமர்சனங்களின் தொகுப்பு

மனிதன் எப்படி உயர்கிறான்?

நூல் அறிமுகம்

தலைமையுரை: **பூர்ணம் விசுவநாதன்**

முதல் பிரதி பெறுபவர் : குமாரராணி **மீனா முத்தையா**

ஜெயா ஸ்ரீனிவாசன்

நிகழ்த்தும் உபந்நியாசம்

குசேலோபாக்கியானம்

டிசம்பர் 5, 2002 வியாழக்கிழமை

மாலை 6:00 மணி.

ஹிந்தி பிரசார சபை அரங்கம்,
தி. நகர், சென்னை - 17

வாசகர்களையும் கல்கி அன்பர்களையும் வரவேற்கிறோம்.

மீண்டு





வீழ வீழ எழுவோம்;
ஒன்று விழ ஒன்பதாய் எழுவோம்.
— ஒரு நக்ஸலைட் கோஷம்

தமிழக காவல் துறையின் 'க்யூ' பிரிவு போலீஸுக்கு, செப்டெம்பர் மாதம் வந்தால் பதற்றம் தொற்றிக் கொண்டு விடும்.


காரணம் செப்டெம்பர் ஒன்றாம் தேதியன்று தொடங்கி, அடுத்து இரண்டு மூன்று மாதங்கள் வரை மறைந்த 'நக்ஸலைட்டுகளுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக, தலைமறைவு இயக்கத்தினர் ஆங்காங்கே கூடுவார்கள். மழை, மற்றும் பனிக்காலமாதலால், கிராமங்களின் ஒதுக்குப் புறங்களில் மக்கள் நடமாட்டம் குறைந்த அளவில்தான் இருக்கும். எனவே இயக்கத் தோழர்கள் சந்திப்பதில் அவ்வளவாக ரிஸ்க் இருக்காது. பல கிராமங்களில், மக்கள் இதைப் பற்றித் தெரிந்தும் கண்டும் காணாமல் இருந்து விடுவார்கள். சில சந்தர்ப்பங்களில் போலீஸ் மோப்பம் பிடித்து விடும். அந்த நிலையில் சந்திப்புகள் இடையிலேயே பாதிக்கப்படும்.

தர்மபுரி மாவட்டம் ஊத்தங்கரை பகுதியில் உள்ள சின்ன கனகம்பட்டி கிராமத்தில், மாந்தோப்பில் புரட்சிகர இளைஞர் முன்னணி என்ற தலைமறைவு இயக்கம் பயிற்சிகளை நடத்திக் கொண்டிருப்பது பற்றிய செய்தி, 'க்யூ' பிரிவு



நக்ஸலைட்!





போலீஸுக்குச் சென்றது. அதன் பிறகு நடந்த அதிரடி தாக்குதலில் தான் சிவா என்ற நக்ஸலைட் இறந்து போனார். தீவிரவாதிகளின் எதிர்த்தாக்குதலில் பல போலீஸ்காரர்களுக்குக் காயம். கூடுதல் காவல் படையைக் கொண்டு தேடியதில் பெண்கள் உட்பட நக்ஸலைட்டுகள் பலர் கைது. வேட்டை தொடர்கிறது. தமிழக நக்ஸலைட்டுகளுக்கு ஆந்திர மக்கள் குழுவுடன் தொடர்பு உண்டா? என்றும் விசாரணை நடக்கிறது. அல் – உம்மா நட்பு உண்டா என்றும் ஆராயப்படுகிறது.

தர்மபுரி மலைப் பகுதிகளில் நக்ஸலைட்டுகளின் நடமாட்டம் போலீஸாரின் கவனத்துக்கு வந்து நடவடிக்கை துவங்கியிருக்கிறது.

''நக்ஸலைட்டுகள் பிரச்னை என்பது சட்டம் ஒழுங்கு பிரச்னையல்ல; அது ஒரு சமூகப் பிரச்னை'' என்கிறார் மூத்த வழக்கறிஞரான பி.வி. பக்தவத்சலம். திருப்பத்தூரைச் சேர்ந்த இவர், மக்கள் உரிமைகளுக்காகப் போராடி பல முறை சிறை சென்றவர். தவிர பல நக்ஸலைட்டுகளுக்காக வழக்குகளில் ஆஜரானவர். ''சமூகத்தின் புறக்கணிப்பு, சமூக அநீதி, சமூகக் கொடுமைகள் போன்றவைகளே ஒரு இளைஞனை தலைமறைவு இயக்கத்துக்கு துரத்துகின்றன. குறைந்த பட்ச கூலி சட்டம், நில உச்சவரம்பு சட்டம் ஆகிய சட்டங்களை அரசு ஒழுங்காக அமுல் நடத்தினாலே இந்த இயக்கங்



• பி.வி. பக்தவத்சலம்

களின் வளர்ச்சி முடக்கப்படும். மேலும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க வேண்டும். இட ஒதுக்கீட்டுச் சலுகைகளை அரசு முறைப்படி அமுல்படுத்தினால் கிராமத்துப் படித்த இளைஞர்கள் பார்வை திரும்பும். எனக்குத் தெரிந்து ஓர் ஏழை இளைஞர் ஆசிரியர் வேலைக்கு முயற்சி செய்தார். பணவசதி படைத்த மற்றொரு இளைஞர், ஓர் அரசியல்வாதி உதவியுடன் அந்த வேலையில், அமர்ந்துவிட்டார். அந்த ஏழை இளைஞன் தீவிரவாத இயக்கத்தில் சேர்ந்து விட்டான். இது போல அந்த இயக்கங்களில் சேரும் ஒவ்வொரு இளைஞனுக்கும் ஒரு பின்னணி இருக்கிறது. இது மட்டுமல்லாமல், நன்கு படித்த இளைஞர்கள் கம்யூனிஸ சித்தாந்த அடிப்படையில் இதில் இணைகிறார்கள்."

"தர்மபுரி, வட ஆற்காடு மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் மட்டும் நீறுபூத்த நெருப்பாக இந்த இயக்கம் இருந்து கொண்டேயிருக்கிறதே?"

"அதற்கு காரணம் அந்தப் பகுதியில் வறுமையின் கொடுமை அதிகம். விவசாயத் தொழிலாளர்கள் கொத்தடிமை போல நடத்தப்படுகிறார்கள். மேலும் கந்து வட்டிக்காரர்களின் சாம்ராஜ்யம் அங்கே நடக்கிறது. கூடுதலாக, அந்தப் பகுதி அரசாங்கத்தால் புறக்கணிக்கப்படுவதால் தலைமறைவு வாழ்க்கை சுலபமாகிப் போகிறது.


"கொலை செய்வதாலும், குண்டு வைப்பதாலும் பிரச்னை தீர்ந்து விடுமா?"

"தலையெடுப்பது" என்பது கம்யூனிஸ சித்தாந்தத்துக்கு முற்றிலும் எதிரானது. அது போல பிறர் பொருளை கையாடுவதும் கூடாது. எனவேதான் உண்மையான தீவிர கம்யூனிஸ்ட் ஏதாவது சதி வேலைகளில் ஈடுபடும் போதும், "எதற்காக இதைச் செய்கிறோம்" என்பதை எழுதி வைத்துவிட்டுச் செய்கிறான்" என்கிறார் பக்தவத்சலம்.

"தேர்தல் பாதை திருடன் பாதை" என்று சொல்கிறார்கள் நக்ஸலைட்டுகள். பாராளுமன்ற ஆட்சி முறையைத் தகர்த்து மக்கள் ஜனநாயக குடியரசு அமைத்தால் மட்டுமே தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோர்களுக்கு விடிவுகாலம்" என்பது நக்ஸலைட்டுகளின் லட்சியம்.

— ப்ரியன்

ஈழத்து ஹீரோவும் இருபது கோடியும்!



பாலசந்தரின் 'ரோஜாவனம்' படத்தில் இரண்டாவது கதாநாயகனாக அறிமுகமான ஆகாஷ் எங்கேயென இரண்டு வருடமாக தேடிக் கொண்டிருந்தார்கள். "இங்கேதான் ஹைதராபாத்தில் தெலுங்குபேசி நடித்துக் கொண்டிருக்கிறேன்" என்று உள்ளேன் ஐயா சொல்கிறார் ஈழத்திலிருந்து நடிக்க வந்திருக்கும் இந்தக் கொழு கொழு தமிழர்!

"ரோஜாவனம் படத்திற்குப்பிறகு, தமிழில் வாய்ப்புகள் எதுவும் வரவில்லை. ஆனால் தெலுங்குப்பட உலகிலிருந்து உடனே ஹீரோ சான்ஸ் வந்தது. பிரபல பட அதிபர் ராமோஜி ராவ் தயாரிப்பில் வெளிவந்து வெள்ளி விழா கண்ட 'ஆனந்தம்' படத்தில் நான்தான் ஹீரோ. இந்தப் படம் இருபது கோடி ரூபாய் லாபம் சம்பாதித்துக் கொடுத்தது. இந்தப் படத்துக்காக சிறந்த புதுமுக நடிகர் விருது, வம்சி விருது, என்.டி.ஆர். விருது என்று அள்ளிக் கொடுத்து ஆனந்த கண்ணீர் விட வைத்து விட்டார்கள்" எனும் ஆகாஷ், தனது பெயருடன் இப்போது ஜெய்யையும் சேர்த்து ஜெய் ஆகாஷ் ஆகி விட்டார். தாய்மொழியான தமிழில் நடித்து முன்னணி நாயகனாவதே தமது விருப்பம் என்கிறார். 'இனிது இனிது காதல் இனிது' படம் மூலம் இது நிறைவேறும் என்று எதிர்பார்க்கிறார்.

— ஸ்ரீ

கதை

எழுபது எம்.எம். வெள்ளித்திரையில் பிரம்மாண்டமாய்க் காட்டப்படும் கலர்ஃபுல் கனவுகள் உற்பத்தியாவது இங்கேதான்!

இருபதுக்கு இருபதடி அகலமேயுள்ள டிஸ்கஷன் ரூம். இயக்குனர்களும், உதவி இயக்குனர்களும் அனுபவங்களை விதைத்து, காட்சிகளாய் அறுவடை செய்யும் கதை வயல்! விவாதம் களை





* சரண் டீம்





* முருகதாஸ் டீம்

கட்டும் பிரபல இயக்குனர்களின் டிஸ்கஷன் அறைகளுக்குள் முன்னறிவிப்பின்றி நுழைந்து தகவல்களை அள்ளி வந்தோம்.

சென்னை சேத்துப்பட்டு பல மாடிக் குடியிருப்பொன்றில் இயக்குனர் சரணின் அலுவலகம். மிதமான வெள்ளை வண்ணத்தில் பளிச் சென்றிருக்கும் அவரின் பிரத்யேக அறைக்குள் நுழைகிறோம். கறுப்பு நிறக் கண்ணாடி. மேசையின் பின்னால் கறுப்பு நிறச் சட்டையோடு அமர்ந்திருக்கிறார். மேசையின் முன்னால் இரண்டு வெள்ளை நிற ஃபைபர் நாற்காலிகள்.

"எனக்கு கறுப்பும், வெள்ளையும் ரொம்பப் பிடிக்கும்" என்று வரவேற்றார். அறையின் கதவு தானாய் மூடிக் கொண்டது பாறை இடுக்கிலிருந்து கசியும் ஒரு சின்னஞ்சிறு சுனையிலிருந்து நீர்த் திவலைகள் கசியும் ஒலி. அறையின் ஈசான மூலை நோக்கிச் சுட்டினார் சரண். அங்கே சின்னதாய் ஒரு வாட்டர் பவுண்டன். "இந்த ஒலி நம் சிந்தனையை ஒருமுகப்படுத்த உதவுகிறது. இதில் வாஸ்துவும் உண்டு" என்றவரின் மேஜையில் நீல நிறத்தில் ஒரு விலையுயர்ந்த ஆஷ்டிரே!

"இது வருகிறவர்களுக்காக. இதன் கலையழகைக் கண்டாவது, இங்கே புகைக்காமல் இருப்பார்களே அதற்காக" என்று அவர் புன்னகைக்க, நமது கண்கள் டேபிளின் மீதிருந்த உயிருள்ள போன்சாய் மூங்கிலுக்குத் திரும்பி, அதன் அருகிலிருந்த டி.வி.டி. மீது தாவியது. "இப்போதெல்லாம்

...வயல்!

டிஸ்கஷன் ரூம் பற்றி டிஸ்கஷன்

ஹாலிவுட்டில் வெளிவரும் படங்களின் 'மேக்கிங் ஆஃப் த மூவி' டாகுமெண்டரியாகக் கிடைக்கிறது. இவற்றை டி.வி.டி.யில் விரும்பிப் பார்ப்பேன்" என்றவர் டி.வி.டி.யின் அருகிருந்த மைக்ரோ டேப் ரிக்கார்டரின் பயன்பாட்டையும் சொன்னார்.

"எனது அறைக்கு வருபவர்களிடம் படம் குறித்தோ, வேறு விஷயங்களையோ, உணர்ச்சி வசப்பட்டுப் பேசிக் கொண்டிருப்போம். அப்போது நம்மையும் அறியாமல் நல்ல வசனத் தெறிப்புக்கள் வந்து விழும். பேச்சு வாக்கில் மறந்து போகும். அவற்றை உடனே குறித்துக் கொள்வது இயலாத காரியம்.







• ஸ்டேன்லி டீம்

• மாதேஷ் டீம்



பகலில் பதிவு செய்யப்படும் எங்கள் பேச்சுக்களை இரவில் போட்டுப் பார்த்து, தேவையானவற்றை எனது டிஸ்கஷன் நோட்டில், குறித்துக் கொள்வேன். எனது வலக்கரம் போன்றது இந்த டிஸ்கஷன் நோட். இந்த நோட்டில், தயாராகிக் கொண்டிருக்கும் திரைக்கதை பற்றி, பாத்திரங்கள் பற்றி, சிறு சிறு குறிப்புகள் நிறைய இருக்கும். இணை இயக்குனர்களும், உதவி இயக்குனர்களும் கதை தொடர்பாக விவாதித்த விஷயங்களை எனக்குக் குறிப்புகளாக எழுதித் தருவார்கள். அவற்றில் தேவையானவற்றை மட்டும் எனது டிஸ்கஷன் நோட்டில் குறித்துக் கொள்வேன்" என்கிறார் சரண்.

அப்படியானால் டிஸ்கஷன் அறைக்குச் சென்று உதவி இயக்குனர்களோடு கதை விவாதம் செய்வதில்லையா இவர்?"

"கதை விவாதத்தில் எனது ஸ்டைல் வேறு" என்கிறார் இயக்குனர்.

"ஒரு படம் முடிந்து ரிலீஸ் ஆன பிறகு முற்றிலுமாக அதை மறந்து விடுவேன். அதன் பிறகு புதிதாக உருவாகும் ஒரு சிந்தனையையொட்டி கதையை யோசிக்கத் தொடங்குவேன். கதைக்கு ஓரளவு ஓர்

உருவம் கிடைத்த பிறகு, அதை முதலில் எனது ஒளிப்பதிவாளர் வெங்கடேஷுக்குத் தான் சொல்வேன். காட்சி ரீதியாக அந்தக் கதையை உள் வாங்கும் அவர் என்னோடு விவாதிப்பார். பிறகு இணை இயக்குனர்களுக்குக் கதையைச் சொல்லி, உதவி இயக்குனர்களோடு விவாதிக்கச் சொல்வேன். படப்பிடிப்பு நெருங்கிவிட்டால், அந்த நெருக்கடி தரும் டென்ஷனிலேயே திரைக் கதை மேலும் மேலும் முழுமை பெற்றபடி இருக்கும்" என்று சொல்லும் சரண், "படப் பிடிப்புக்கு முன்பு முழுத் திரைக் கதையையும் பேப்பரில் கொண்டு வந்து விடுவேன் என்றாலும் நடிகர், நடிகையருக்கு ஏற்ப படப்பிடிப்புத் தளத்தில் தேவையான மாற்றங்களைச் செய்து கொள்வேன்" என்கிறார். சரணுக்கு பாலமுருகன், ராஜ்குமார் ஆகிய இரண்டு இணை இயக்குனர்களும், இளங்கோ, வெங்கட், பாபு ஆகிய மூன்று உதவி இயக்குனர்களும் பக்கபலமாக இருக்கிறார்கள்.

அசோக் நகரில் தனி வீட்டின் முதல் தளத்தில் 'ஜெய்' பட இயக்குனர் ஆர். மாதேஷின் அலுவலகம். கண்களை வருடிக் கொடுக்கும் மெல்லிய ஐவரி நிறச் சுவர்கள் பனிச்சென்ற மஞ்சள் மின்னொளி சுறுசுறுப் பூட்டுகிறது. அதிகபட்சமாய் ஏழு பேர் அமர்ந்து விவாதிக்க வசதியாக விலையுயர்ந்த குஷன் சோபாக்கள். டி.டி.எஸ் ஒலியமைப்பு சூழ்ந்த டிஜிட்டல் ஹோம் தியேட்டர், மாதேஷின் மேஜை மீது ஒரு லேப்டாப் கம்ப்யூட்டர் என்று அமர்க்களமாக இருக்கிறது டிஸ்கஷன் அறை.

''கதைக்குரிய பொறி கிடைத்ததும் அதைச் சுற்றிய சில விஷயங்களை மனம் தேடத் தொடங்கும். அப்போது கற்பனைகள் தோன்றியவண்ணம் இருக்கும். தூங்கும் போது கனவிலும், சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதும், குளித்துக் கொண்டிருக்கும் போதும், திடீர் திடீரென தோன்றும் இந்தக் கற்பனைகள் கலவையான உணர்ச்சிகளைக் கொண்டதாக இருக்கும். இவற்றை நமக்குள்ளேயே அசை போட்டுக் கொண்டிருந்தால் பயன் இல்லை. உதவியாளர்களிடம் இவற்றைச் சொல்லும்போது, அதை உள் வாங்கி வெளியிடும் அவர்களின் எதிரொலிப்பு பல சமயங்களில் நாம் எதிர் பார்த்ததைத் தரலாம். எனவே கதை விவாதம் என்பது சினிமாவுக்கு இதயம் மாதிரி" எனும் மாதேஷ் தமது டிஸ்கஷன் அறையில் கடிகாரத்தை அனுமதிப்பதில்லையாம்.

செல்வராஜ் என்றொரு இணை இயக்குனர். ஜெகதீஷ், ஜெய கிருஷ்ணன் ஆகிய இரண்டு உதவி இயக்குனர்கள்.

"ஒரு முழு படத்தின் படப்பிடிப்புக்கு எண்பது நாட்கள் போதும். ஆனால் கதை விவாதம் குறைந்த பட்சம் ஆறு மாதங்கள் நடைபெற வேண்டும். கதை விவாதத்தில் கவனம் செலுத்தி விட்டால், ரிலீஸ் டென்ஷன் என்பது துளிகூட இருக்காது. எங்களின் ஜென்டில்மேன் பட வெளியீட்டு தினத்தன்று காலை பதினோரு மணிக்குத் தான் தூங்கியே எழுந்தோம். மாலைதான் தியேட்டருக்குச் சென்று ரசிகர்களின் உற்சாகத்தைப் பார்த்தோம். காரணம் வெற்றியை நாங்கள் உறுதி செய்திருந்தோம்'' என்கிறார் மாதேஷ்.

ஆஸ்கர் பட நிறுவனத் தின் அலுவலகத்தில் 'ரமணா' பட இயக்குனர் ஏ.ஆர். முருகதாஸின் டிஸ்கஷன் அறை. குளிர் சாதன வசதிகூட பொருத்தப்படாத சின்ன அறையில் ஃபைபர் பாய் விரித்து, தமது உதவியாளர்களோடு அமர்ந்திருந்தார். இந்த அறையிலும் சுவர்களில் போர்த்தியிருந்தது வெள்ளை வண்ணம்தான்.

"கதை விவாதம், டிஸ்கஷன் ரூமில் மட்டுமே நடக்கிற விஷயமில்லை'' என்று சுவையாக கோர்வையாக விஷயங்களைக் கொட்டினார்.

''கதைக்கான அவுட்லைன் கிடைத்த உடனேயே திரைக்கதைக்கான முக்கிய காட்சிகள் அனைத்தும் கிடைத்து விடும். அப்படி கிடைக்கிற காட்சிகளை மேம்படுத்த உதவி இயககுனர்களின் டீம் ரொம்பவே அவசியம். ஒரு படத்தின் முதல் ரசிகர்

சாதனையா? முயற்சியா?

தமிழ் சினிமாக்கள் புதிது புதிதான சாதனை முயற்சிகளில் இறங்கிக் கொண்டிருக்க ''ஏன் டீ.வி. தொடரிலும் பண்ண மாட்டோமா?'' என்று களமிறங்கிவிட்டார் 'மெட்டி ஒலி' இயக்குனர் திருமுருகன்.

''ஒரே ஷாட்ல ஒரு எபிசோட் பண்ணியிருக்கோம். வீட்டுக்குள்ள நடக்கற ஒரு காட்சியை தொடர்ந்து கையாலேயே கேமராவை இயக்கி இருபது நிமிஷம் பண்ணியிருக்கோம். இப்படியொரு முயற்சிக்கு கேமராமேன் சேவலோ ராஜாவை நம்பித்தான் இறங்கினேன்.

கள் உதவி இயக்குனர்கள்தான். ஓர் உதவி இயக்குனர் சரியில்லை என்றால்கூட ஒரு ரன்னில் தோற்றுவிடும் கிரிக்கெட் டீம் மாதிரி ஆகிவிட வேண்டியதுதான். டிஸ்கஷன் அறையில் என்ன வசதி இருக்கிறதோ இல்லையோ டீம் ஸ்பிரிட் அவசியம்" எனும் முருகதாஸ், தனிமையில் யோசிப்பதை அதிகம் விரும்புகிறார்.

"நடு ராத்திரியில் ஒரு ஐடியா கிடைத்தால் உடனே கிளம்பி உதவியாளர்கள் அறைக்குச் சென்று கதவைத் தட்டுவேன். தூக்கத்திலிருந்து அவர்களை எழுப்பி, அவர்களிடம் சொல்லுவேன். அடுத்த நிமிடம் முழு ஆர்வத்தோடு அங்கேயே டிஸ்கஷன் தொடங்கிவிடும்.

"மழைக்காக ஒதுங்கி நிற்கிற பூட்டிய கடையின் வாசலில்கூட டிஸ்கஷன் நடத்துவோம். பேருந்தின் ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து திரைக்கதையின் உள்ளே பயணம் செய்வது எனக்கு ரொம்பப் பிடிக்கும். அடிக்கடி மேல்மருவத்தூர் செல்லும் பேருந்தில் ஏறி அமர்ந்து கொள்வேன். தாம்பரம் தாண்டிய பிறகு நகரச் சந்தடி மறைந்து வயல்வெளிகள் கண்ணில் படும்... மனத்திரையில் காட்சிகள் விரியத் தொடங்கும். எனக்குள்ளேயே விவாதங்கள் தொடங்கும். மேல்மருவத்தூர் வந்ததும்... அங்கே மர நிழலில் பெட்டிக்கடையில் தயிர் சாதம் சாப்பிட்டுத் திரும்பவும் ஜன்னலோரப் பயணம்" என்கிறார் இந்த இருபத்தேழு வயது இயக்குனர். இவருக்கு சம்பத்குமார் என்ற இணை இயக்குனரும், ராஜ்குமார், சரவணன், பழனிச்சாமி, வேந்தன், ஜெயராஜ் ஆகிய உதவி இயக்குனர்களும் இருக்கிறார்கள்.





ஒரு டெலிபிலிம் பார்த்த உணர்வை இது நிச்சயம் கொடுக்கும். இதை சாதனைன்னு சொல்லமாட்டேன். தொடர்களில் இது புது முயற்சின்னு சொல்லலாம்" என்கிறார் திருமுருகன்.

வரும் ஒன்பதாம் தேதி ஒளிபரப்பாகும் 170வது எபிசோடில் இந்தப் புதிய முயற்சியைப் பார்க்கலாமாம்!

- சலாம்ஜி

கோடம்பாக்கத்தில் இருக்கும் சி.ஜே. சினிமா அலுவலகத்தில்தான் 'ஏப்ரல் மாதத்தில்' பட இயக்குர் எஸ்.எஸ். ஸ்டேன்லியன் டிஸ்கஷன் ரூம்! ஆச்சர்யம்! இந்த அறையிலும் வெள்ளை வண்ணம். அறையின் தளம் முழுக்க விரிந்து கிடக்கும் ஒரே மெத்தை. ஐந்தாறு திண்டுகள். ஒரு டீ.வி. பெட்டி தவிர அறையில் எதுவுமில்லை.

''தயாரிப்பாளரிடமிருந்து ஒரு இயக்குனருக்குக் கிடைக்கிற முதல் அங்கீகாரம் டிஸ்கஷன் அறை போட்டுத் தருவதுதான். சினிமா மொழியில் சொல்வதென்றால் "உட்காந்துட்டியா?" என்று கேட்பார்கள். டிஸ்கஷனில் உட்கார்ந்து விட்டாயா என்பதுதான் இதன் அர்த்தம். எங்கள் டிஸ்கஷன் அறை பள்ளிக்கூடம் மாதிரி கண்டிப்போடு இருந்ததில்லை. எனது இணை இயக்குனர்கள் மூர்த்தி, ஈசாவாக இருந்தாலும் சரி, உதவி இயக்குனர்கள், இராம கிருஷ்ணன், கே.ஜி. இராமகிருஷ்ணன், ஹென்ரி ஜோசப் என்றாலும் சரி எல்லோரும் நீண்ட கால நண்பர்கள் என்பதால், எங்களுக்குள் பதற்றமோ, ஈகோவோ இருந்ததில்லை. டிஸ்கஷன் சமயத்தில் நாங்கள் காட்சிகளைப் பற்றியே முதலில் விவாதிக்க மாட்டோம். கதையோடு தொடர்புள்ள அவரவர் சொந்த அனுபவங்களை மனம்விட்டுப் பகிர்ந்து கொள்வோம். ஒருவரின் அனுபவத்தைக் கேட்டு மற்றொருவர் தமது அனுபவத்தோடு கலந்து இப்படி இருக்கலாம் என்பார். காட்சியின் மெருகு கூடும். பெரும்பாலும் காலை ஆறு மணியிலிருந்து பகல் பத்து மணி வரை டிஸ்கஷன் செய்வதையே விரும்புவோம். எப்போதும் டிஸ்கஷன் அறையிலேயே அடைந்து கிடப்பதில் எங்களுக்கு விருப்பமில்லை. தேநீர் கடை வாசலில், மொட்டை மாடியில், கடற்கரை மணலில் என்று மனநிலை பொருந்துகிற இடத்தில் கதை விவாதம் சூடு பிடிக்கத் தொடங்கிவிடும்'' எனும் ஸ்டேன்லி, முழு திரைக்கதையும் பேப்பரில் முடித்துவிட்டுப் படப்பிடிப்புக்குச் செல்வதே எங்கள் பாணி" என்கிறார்.

விசிட் : **ஜே.ஜெ**
படங்கள் : **ராஜன்**

குபேர வாழ்வை தரும்

தேவதா உச்சாடனம்

(தபால் வழி பூஜா உபதேசம்)

அன்றைய சித்தர்கள் ஆண்டவன் சக்திகள் அத்தனையும் அட்டமாசித்திகள் வழியாக அடைய - மன ஒருமைப்பாட்டினை முழுமையாக அடைய இந்த அரிய பூஜையைத்தான் ஆக்கி வைத்தனர். உருவ வழிபாட்டின் முக்கியத்துவம் உடைய இந்த பூஜையை செய்து எந்த உருவத்தையும் மனதில் நிலையாக நிறுத்திட பழகிவிடில்- பெய்யும் மழையையும் நிறுத்தலாம். பெய்யா மழையை பெய்திடச்செய்யலாம்.

அத்தனை சக்தி பெற்ற இந்த பூஜையை செய்ய தினசரி காலையிலும், மாலையிலும் பூஜை செய்யும் பழக்கம் உடையவர்களாக இருக்க வேண்டியது மிகவும் முக்கியம். அதைப்-போலவே மனதில் அருள்நிலையை வரவிடாமல் தடுக்கும் - மதுபானம் செய்வது, புகைபிடிப்பது, புகையிலை,பொடி போடுவது நிச்சயமாக இருக்கக்கூடாது.இத்தீய பழக்கங்கள் சிறிது இருப்பினும் அருள்நிலை வராது. அவர்கள் இப்பூஜையை உபதேசம் பெற்று பயன் இல்லை. எனவே தீய பழக்கம் இல்லாதவர்கள் மட்டும் மனுச்செய்து கொள்க.

இவ்வரியபூஜையை செய்துதான் உலகிலேயே அதிக செல்வம் பெற்ற குபேரன் கோடீஸ்வரன் ஆனான் என்பது - அந்த அரிய நிலையை அடைய விரும்பிய இலங்கேஸ்வரனும் இந்த பூஜையை செய்துதான் ஸ்ரீலக்ஷ்மிகடாக்ஷத்தை முழுமையாக பெற்றான் என்பது வரலாறு கண்ட உண்மை. இன்று இப்பூஜையை அறிந்தார் இல்லையோ எனும் அளவிற்கு அரிகிவிட்டனர். ஜாதகப்படி அந்த அமைப்பு உடையவர்களுக்கு மட்டுமே இப்பூஜை செய்ய விருப்பமும் - இப்பூஜையால் ஏற்படும் அருள்நிலையும் ஏற்படும்.

அந்த அருள் நிலை சில நொடிகள் ஏற்பட்டுவிடினும் - இனிதான இல்லறம், கனிவான குழந்தைகள், எவரும் போற்றும் கௌரவம், குபேர செல்வம், கூட கோபுரம், விரைவான விவாகம், குழந்தை இல்லா குறை தீர்ந்து நல்லியல்பு குழந்தைகள் பெற்றெடுத்தல், எவராலும் தீது செய்ய முடியாத ஆண்டவன் அருள், கடன் வழி தொல்லையற்ற கணக்கற்ற செல்வ நிறைவு என்பன அனைத்தும் அடையலாம்

எவர் ஒருவருக்கு ஜாதகப்படி இந்த அரிய பூஜை வழியால் செல்வ சுக மேன்மை அடையும் 'விதி' அமைப்பு இருக்கின்றதோ அவருக்குத்தான் இதனை உபதேசம் பெற உரிய வாய்ப்புக்கள் ஏற்படும். அநத அரிய வாய்ப்பு ஏற்பட்டுவிடில் - எல்லையில்லா நல மேன்மை, செல்வ நிறைவு அடைவது உறுதி.

எனவே தினசரி காலை மாலை பூஜை செய்யும் பழக்கம் உள்ளவர்களும், தீய பழக்கங்களான - மதுபானம் செய்தல், புகை பிடித்தல், புகையிலை,பொடி போடுதல் இல்லாதவர்கள் மட்டும் - ஜாதக நகல் இணைத்து கீழே கொடுத்துள்ள தேதி மாலைக்குள் 'இப்பூஜா உபதேசம் பெற விரும்புகின்றேன்' என எழுதி மனுச்செய்து கொள்க.

பெண்களும் இப்பூஜா உபதேசம் பெற்று பெரிய நலங்களை அடைந்திருக்கின்றனர். ஆனபடியால் அவர்களும் ஜாதக நகலுடன் 18-01-2003 தேதி மாலைக்குள் விண்ணப்பித்துக்கொள்வலாம்.

இத்தேதி தவறிடில் பின் வேண்டாம். இப்பூஜாவிதமாக நலம் பெற உரியவர்களுக்கு இத்தேதிக்குள் மனுச்செய்துகொள்ளும் வாய்ப்பை கடவுள் அருளிடுவார். எமது ஆசிகள்.




பிரபல ஜோதிடர், ஜோதிடஆசிரியர்

ஸ்ரீமத் ஜெயவீர தேவா, யோகி

இராஜயோக பயிற்சியாளர்

பிளாட்எண்:204,அண்ணாநகர் மதுரை- 625 020 தமிழ்நாடு

533412
650576





கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
- பாரதியார்.

தலைவர்களின் தர்க்கம்;
மக்களின் துக்கம்!


ஜம்மு, ரகுநாத் ஆலயத்தைத் தூய்மைப் படுத்தி, மீண்டும் தரிசனத்துக்குத் திறந்து வைத்துவிட்டார்கள். தூய்மைப்படுத்த முடியாத சகதியில் உழல்வது நமது அரசியல் கட்சிகள் தான்!

மிகப்பெரிய பயங்கரம் ஜம்முவில் நடந்திருக்கிறது. பயங்கரவாதிகள் கோவிலைத் தாக்கி, ஒரு பாவமுமறியாத குடிமக்களையும் குழந்தைகளையும் கொன்றிருக்கிறார்கள். குழந்தைகளைக் குறி வைத்தால், அவற்றை இழக்கும் பெற்றோர், ஆட்சியாளர்களிடம் நம்பிக்கை இழந்து, ஆதரவை விலக்கிக் கொள்ளத் தயாராவார்கள் என்று பயங்கரவாதிகள் திட்டமிட்டுச் செயல்படுவது மிகக் கொடூரம்.

இதுபோன்ற தருணங்களில், கட்சி வேறுபாடுகளைக் கடந்த ஆதரவையும் அரவணைப்பையும் மக்களுக்கு வழங்குவதுதான் நியாயம்; அதுவே அரசியல் நாகரிகமும் கூட.



2002 டிசம்பர் 8
சித்ரபானு கார்த்திகை 22
மலர் : 61
இதழ் : 19



ஆனால், நம் நாட்டில் நடப்பது என்ன? தங்கள் கட்சிக்கு ஜம்மு – காஷ்மீரில் ஆதரவு கிடைக்கவில்லை என்பதால், மத்திய அரசின் பிரதான கட்சியான பி.ஜே.பி. அம்மாநிலத்துக்கான ராணுவப் பாதுகாப்பைக் குறைக்கிறது.

ஆட்சிக்கு வரும் கூட்டணியோ, யார் முதல்வராக வேண்டும் என்ற குடுமிப்பிடியில் நீண்ட காலம் செலவிட்டுவிட்டு, முதல்வர் பொறுப்பை இரு கட்சிகளிடையே பகிர்ந்து கொள்ளும் நூதன முடிவுக்கு வருகிறது!

அதைத் தொடர்ந்து முதல்வர் முஃப்தி முகமது சையீது, நல்லெண்ண நடவடிக்கையாக, சிறை வைக்கப்பட்ட சில பயங்கரவாதிகளை விடுதலை செய்கிறார். பாதுகாப்பையோ, ஒற்றாடல் நடவடிக்கையையோ பலப்படுத்த அவர் முயற்சி மேற்கொள்ளவுமில்லை.

இத்தனைக்கும் பிறகு, ரகுநாத் ஆலயம் தாக்கப்படுகிறபோது, 'நாங்கள் மட்டும் சளைத்த வர்களா?' என்று கட்சிகள் ஒன்றையொன்று தாக்கி, குறை கூறிக் கொள்கின்றனவேயொழிய, உடனடியாகவும் நீண்ட கால நோக்கிலும் பயங்கரவாதத்தை எதிர்கொள்ள என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து, உருப்படியாக யாரும் ஒரு வார்த்தை பேசவில்லை. மத்திய இன்டலிஜென்ஸ் பிரிவின் உயரதிகாரிகளைக் கலந்தாலோசித்த பிறகே ஜம்மு – காஷ்மீர் அரசு பயங்கரவாதிகளைச் சிறையிலிருந்து விடுவித்தது என்று காங்கிரஸ் தலைவர் சோனியா சத்தியம் செய்ய, 'யாரையும் விடுதலை செய்ய வேண்டாம் என்று மாநில அரசை எச்சரித்தோம்; கடிதமே எழுதியிருக்கிறோம்; முதல்வர் முஃப்திதான் காது கொடுத்துக் கேட்கவில்லை' என்று அத்வானி பாராளுமன்றத்தில் படபடக்க; 'அத்வானி ஏமாற்றுகிறார்; மத்திய அரசு கடிதம் எழுதி எச்சரித்திருந்தால் அது எங்கே போகுமாம்?' என்று ஜம்மு – காஷ்மீர் மாநில காங்கிரஸ் கட்சித் தலைவர் குலாம் நபி ஆசாத் மடக்க முயற்சி செய்ய... மக்களின் வேதனைகளும் கஷ்டங்களும் கவனிக்கப்படாது தொடர்கின்றன. பிரச்னைகளுக்குத் தீர்வு காணாமல் கட்சிச் சண்டைகளில் தலைவர்கள் காலத்தைக் கடத்துவது, ஜம்மு – காஷ்மீர் மாநில மக்களுக்கு



வெறுப்பையும் அவநம்பிக்கையையும்தான் ஏற்படுத்தும்.

'விடுதலை செய்யப்பட்ட பயங்கரவாதிகளைத் தட்டிக் கேட்கவும் திராணி இல்லை; நமக்குப் போதுமான அளவு பாதுகாப்பு வழங்கவும் துப்பு இல்லை' என்றுதான் புதிய அரசைக் கடுமையாக எடை போட்டு அம்மாநில மக்கள் நம்பிக்கை இழப்பார்கள்.

ஒரு மாநிலத்தில் பயங்கரவாதம் தலைவிரித்தாடுவது அபாயம்தான். ஆனால் அதே நேரத்தில் மக்களின் நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் அம்மாநில அரசு இழக்க நேர்ந்தால், நிர்வாகமும் பாதுகாப்பும் மொத்தமாகவே அதன் கட்டுப்பாட்டிலிருந்து போய்விடும்.

ஜம்மு – காஷ்மீரில் இவ்வாறு நிகழ்வதைக் கைகட்டி வேடிக்கை பார்ப்பது இந்தியாவையே பணயம் வைத்துச் சூதாடுவதற்கு ஒப்பானது. பாகிஸ்தான் ஆதரவுடன் வளரும் பயங்கர வாதத்துக்குப் பச்சைக்கொடி காட்டி வரவேற்பதற்கு நிகரானது. பாகிஸ்தானில் ஜனநாயக அரசை நிறுவியதாகப் பெயர் பண்ணிவிட்டு, தலிபான் ஆதரவு ஆட்சிக்கு வழி செய்துள்ளார் அதிபர் முஷாரஃப். பிரதமரையும் அமைச்சரவையையும் தம்மால் கட்டுப்படுத்த முடியாது என்று முஷாரஃப் தப்பிக்க, தலிபான் ஆதரவு பெற்ற அமைப்புகள் நம் நாட்டுக்குள் ஊடுருவுவது முன்னிலும் அதிகமாக, வேகமாக நடைபெறும்.

ஆகவே, 'பயங்கரவாதம் ஓயட்டும், அப்புறம் பேச்சுவார்த்தை நடத்துகிறோம்' என்று கூறுவதற்குப் பதில், 'பயங்கரவாதத்தை ஒரு பக்கம் எதிர்த்தபடியே, மறு தரப்பில் பேச்சு வார்த்தைகளுக்கும் தயாராயிருப்போம்' என்று கூறுவதுதான் புத்திசாலித்தனமாக இருக்கும். அலை ஓய்ந்த பின் சமுத்திர ஸ்நானம் என்றில்லாமல், காரிய சாத்தியமானதாகவும் கனிசமான பலன் தரத்தக்கதாகவும் இருக்கும்.

நம் நாட்டின் அரசியல் கட்சிகள் உடனடியாக வாதப் பிரதிவாதங்களை நிறுத்தியாக வேண்டும். ஒன்றுபட்டு காரியத்தில் இறங்க வேண்டும். பயங்கரவாதிகளுக்கும் அவர்களைத் தூண்டுவோருக்கும் அதுவே எச்சரிக்கை சமிக்ஞைகளை அனுப்பி வைக்கும். ○





பரதம், புடோ டஸ்ட்!



ஒவ்வொரு வருடமும் கலாசாரக் கலை மீறலாக (பலரது கண்களுக்கு!) தெரியும் விழா, தி அதர் பெஸ்டிவல்!

நடனக் கலைஞர் அனிதா ரத்னமும், நாடகக் கலைஞர் ரன்வீர் ஷாவும் இணைந்து கடந்த 98ஆம் ஆண்டு தொடங்கிய அதர்பெஸ்டிவல் இவ்வாண்டு டிசம்பர் மூன்றாம் தேதி தொடங்கி ஏழாம் தேதி வரை நடக்கும்.

''பொதுவாக கலை விழாக்கள் நாடகம், நடனம், இசை, ஓவியம் என்று ஏதேனும் ஒரு துறையை மையமாக வைத்து நடத்தப்படும். ஆனால் அதர்பெஸ்டிவலின் ஒரு வாரக் கொண்டாட்டம், கலாசார வேறுபாடுகளைக் களைந்து, எல்லாக் கலை வடிவங்களையும் உள்ளடக்கிக் கொள்கிறது! ஆசியாவிற்குள் கலாசாரப் பாலம் அமைப்பதுதான் அதர்பெஸ்டிவலின் ஒரே நோக்கம்'' என்கிறார் அனிதா ரத்னம்.

எழும்பூர் மியூசியம் தியேட்டர் புனரமைக்கப்படுவதால் இவ்வாண்டு மட்டும் சென்னை, ஹாரிங்டன் சாலையில் (வேடிஆண்டாள் பள்ளி எதிரில்) உள்ள சின்மயா கலாசார மையத்திற்கு இடம் பெயர்கிறது இவ்விழா.

இம்முறை இந்தியா தவிர அமெரிக்கா, ப்ரான்ஸ், கனடா, தென்னாப்பிரிக்கா மற்றும் இஸ்ரேலைச் சுற்றியுள்ள திறமையான கலைஞர்கள் நிகழ்ச்சிகளை அளிக்கிறார்கள்.

அமெரிக்காவின் பிட்ஸ்பெர்க் டான்ஸ் நிறுவனமான 'டான்ஸ் அல்லாய்' உடன் இணைந்து, பரத நாட்டியம் மற்றும் ஜப்பானிய புடோ நடனம் ஆகியவற்றின் கலவையாக 'டஸ்ட்' என்ற நடன நிகழ்ச்சியை வழங்கப் போகிறார் அனிதா. அலெக்ஸான்ட்ரா டேவிட் நீல் என்ற பௌத்த அறிஞரின் எழுத்துகளிலிருந்து, இந் நிகழ்ச்சிக்கான இசை மற்றும் நடன அசைவுகளை உருவாக்கியதாகச் சொல்கிறார். டேவிட் நீல் திபெத்திற்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டவராம்!

— ஜெயந்தன்



• அதர்பெஸ்டிவல் கலை நிகழ்ச்சிகளில் சில காட்சிகள்.



வசந்த கால நினைவுகள்

மேடைப் பாடகரான ஒரு குருவிடம் பயிற்சி பெற்ற பிறகே பாடகராக முடியும் என்ற மரபை உடைத்திருக்கும் கலைஞர் சஞ்சய் சுப்ரமண்யன். பல பாணிகளின் கலவையைத் தமதாக்கிக் கொண்டிருக்கிறார். எம்.எல்.வி.யின் இசை தம்மை பாதித்தது குறித்து எழுதுகிறார்.



சஞ்சய் சுப்ரமண்யன்

மேகங்கள் வழிமறிக்க, வானமே இருண்டு கிடந்த மழைக்காலம் அது.

வருஷமென்ன, தேதி கூட நல்ல நினைவிலிருக்கிறது. 31, அக்டோபர், 1990... மறுவாரம் எனக்கு சி.ஏ. இன்டர்மீடியட் பரீட்சை இருந்தது. அதனால் விழுந்து விழுந்து தயார் செய்து கொண்டிருந்தேன்.

வீட்டின் அமைதியைக் குலைத்தது அந்தத் தொலை பேசி அழைப்பு. எடுத்துப் பேசிய என் முகம் போன போக்கிலிருந்தே ஏதோ அதிர்ச்சி தரும் செய்திதான் என்று என் தாயார் யூகித்து விட்டார்.

"என்ன? யார் ஃபோன்லே?" என்று துளைத்தெடுத்த அவருக்கு, என்னால் சட்டென்று பதில் சொல்ல முடியவில்லை.

எங்கள் குடும்பமே மிகவும் ரசித்துக் கொண்டாடிய எம்.எல். வசந்தகுமாரி இறந்து விட்டார் என்ற செய்தியை எப்படிச் சொல்வது என்று தவித்துப் போனேன். குறிப்பாக, என் தாயார் அருணா சங்கரன் எம்.எல்.வியின் பரம ரசிகை!

"வசந்தகுமாரியின் குரலில் ஒரு காந்தசக்தி இருக்குடா" என்பார் அடிக்கடி!

அது நிஜம்தான். நான் முதன் முதலில் அவரது ஆண்டாள் திருப்பாவை பாடல்களைக் கேட்டேன். 'ஒருத்தி மகனாய்...' 'மாலே மணிவண்ணா'... போன்ற பாடல்களை ஒரே ஒரு தரம் தான் கேட்டேன். உடனே அதைக் கற்றுக் கொண்டு, அதே போல பாடிவிட வேண்டும் என ஒரு பரபரப்புத் தொற்றிக் கொண்டுவிட்டது. அதே போல, எம்.எல்.வசந்தகுமாரியின் பாடல்களை ஒரே ஒரு முறை கேட்டுவிட்டு, நிறுத்திவிடவும் முடியாது. மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டும். எத்தனைத் தடவை கேட்டாலும், புதுசு போலவே குதூகலம் தரும்.

'சினிமாப் பாடல்களால்தான் எம்.எல்.வி. அதிக புகழ் வெளிச்சம் போடப்பட்டார்' என ஒரு சிலர் கூறுவதுண்டு. இருக்கலாம்! 'பாற்கடல் அலைமேலே', 'எல்லாம் இன்ப மயம்', 'அந்தி மயங்குதடி'... போன்ற திரைப்படப் பாடல்கள், ரோஜாமாலைக்கு, பன்னீர் தெளித்தது போல அவரது புகழுக்கு ஒளி சேர்த்திருக்கலாம்தான்! ஆனால் அவரது நாத உபாசனை எல்லை கடந்த பக்திப் பிரவாகம். அதில் மூழ்கி, முத்தெடுத்தவர்களில் நானும் ஒருவன்!

எம்.எல்.வியின் மேடைக் கச்சேரிகளை ரசித்த காலங்கள் பசுமையானவை.

'ஸ்பிக் மேக்கே' நிகழ்ச்சி ஒன்றில், வயலினிஸ்ட் கன்னியா

குமரியைத் திணறடித்த மோஹனம் பல்லவியின் கணக்கு வழக்குகளை மறக்க முடியுமா? மியூசிக் அகாதமியில், மிக விஸ்தாரமாகப் பாடிய நாராயணி பல்லவியை நினைத்தாலே பரவசம்தான்! பாலக்காடு மணி அய்யருடன் அவர் வானொலியில் வழங்கிய தோடி பல்லவி, அதைத் தொடர்ந்து ஜிலுஜிலுத்த ராக மாலிகை விருத்தம், அதில் தனித்துப் பிரகாசித்த சஹானா, சுத்ததன்யாசி... பண்டிட் ஜோக் வயலின் வாசிக்க அவர் பாடிய ஜுகல் பந்தி...

பல்லவி பாடுவதில் இன்னும் மெருகேற்ற வேண்டிய விஷயங்கள் நிறையவே இருக்கவே, நான் எம்.எல்.வியை அணுகினேன். எம்எல்வி பல்லவி எக்ஸ்பர்ட் என்பதை நான் அறிவேன். ஆனால் அவரது மேதா விலாசம் பற்றி நேரடியாகத் தெரிந்து கொள்ளும் பாக்கியம் வாய்த்தது.

'பல்லவி பாடணுமா?' என்று கேட்டுவிட்டு, இரண்டு மணி நேரம் தொடர்ந்து, அறுபது எழுபது பல்லவிகளைப் பாடி அசத்தினார்.

வண்ணங்களுடன் சுழன்று பறந்து மிதக்கும் சோப்புக் குமிழ்களைத் துரத்திப் பிடிக்கப் பிடிக்க, புதுப்புது குமிழ்கள் புதிய வண்ணங்களுடன் கிளம்பிக் கொண்டேயிருந்தால், எதைப் பார்ப்பது, எதைப் பிடிப்பது என்று பிரமித்துப் போகும் சிறுவனின் நிலைமையில்தான் நான் இருந்தேன்.



• மேடையில்...

தோடியில் நாள்கு களை பல்லவி, புரந்தர தாஸர் தேவரநாமங்களை, எம்.எல்.வியிடம் கற்றுக் கொண்டேன். என்றென்றும் நினைவில் நிற்கும் புதிய அனுபவம் அது.



• எம்.எல்.வி

இன்றைக்கு எம்.எல்.வசந்தகுமாரி மறைந்து பத்து வருடங்கள் உருண்டோடிவிட்டன. இப்போதும் அவரது கந்தர்வப் பாடல்களை எங்கேயாவது கேட்கும்போதோ, மழை நாளில் பல்லவி பாட நேரும்போதோ, ஏக்கப் பெருமூச்சு எழும். கூடவே சோகம் கலந்த சென்டிமெண்ட் நினைப்பும் வரும். அது... நான் சி.ஏ. பரீட்சைகளில் அந்த வருஷம் கோட்டைவிட்டேனே!



உயரத்தில் வசித்தாலும்

''கிராமங்களுக்குச் சென்று, மக்களின் குறைகளைக் கேட்டுத் தீர்க்க முயலுங்கள்; மத்திய அரசின் திட்டங்களை எடுத்துச் சொல்லுங்கள்'' என்று வெங்கையா நாயுடுவின் அறிவுரைக்கேற்ப, கிராமங்களை நோக்கிப் படையெடுக்கிறார்கள் பா.ஜ.க பிரமுகர்கள். ஏற்காடு மலைப் பகுதியில் அப்படியொரு யாத்திரையை மேற்கொண்ட பா.ஜ.க தமிழகத் தலைவர் டாக்டர் கிருபாநிதியுடன் நாமும் கலந்து கொண்டோம்.

ஏற்காடு நகருக்குச் செல்லும் குடிநீர்க் குழாய் அது. அந்த குழாயில் நீரின் அழுத்தம் காரணமாக, வால்வுப் பகுதியில் வேகமாக நீர் கசிந்து கொண்டிருக்கிறது. அந்தக் கசியும் நீரைத் தகர ஷீட்டைப் பயன்படுத்தி, திசை திருப்பி குடத்தில் நிரப்பிக் கொள்கிறார்கள், எம்.ஜி.ஆர். நகர் மக்கள். ஒரு குடம் நிரம்புவதற்கு சுமார் 20 நிமிடங்கள் ஆகின்றன. அந்தப் பகுதியிலுள்ள 500 குடும்பங்களுக்கு இதுதான் குடிநீர் ஆதாரம். குடிநீர் மட்டுமல்ல, வேறு பல தேவைகளுக்கும் இந்தத் தண்ணீர்தான். மேடும் பள்ளம் ஏறி இறங்கி, இப்படிச் சிரமப்பட்டு, தண்ணீரைப் பிடித்துச் செல்கிறார்கள். ''இதற்கு ஏதாவது வழி செய்யக் கூடாதா?'' என்று அழாத குறையாகக் கேட்டார் மலர் என்ற பெண்மணி.

குறைகளைக் கேட்க வந்த டாக்டர் கிருபாநிதியிடம் தாங்கள் படும் அவதிகளைக் கொட்டி விட்டார்கள் அந்த மக்கள்.

''இப்படிக் கசியும் நீரைப் பிடிப்பதற்குக்கூட, சமயத்தில் ஆபத்து வந்து விடுகிறது. நகராட்சி ஊழியர்கள், வால்வுப் பகுதியைக் கொஞ்சம் இறுக மூடி விட்டால் அவ்வளவுதான், கசியும் தண்ணீரும் நின்று விடும். பிறகு ஒரு கி.மீ தொலைவில் உள்ள கிணற்றுக்குச் செல்ல வேண்டியதுதான். இந்தப் பகுதியில் சரியான மழை இல்லாததால், கிணற்றிலும் ரொம்பக் கீழே இறங்கிவிட்டது நீர்'' என்று சொன்னார் ராஜம்மாள் என்பவர்.

பா.ஜ.க தொண்டர்கள் கொடி பிடித்திருப்பதைப் பார்த்து, ''இது என்ன



• மலர்



பள்ளத்தில் வாழ்க்கை!

கட்சி?" என்று ஆச்சர்யத்துடன் கேட்டார் விஜயலட்சுமி. "வாஜ்பாய் அய்யாவைத் தெரியுமா?" என்று அவருக்குப் பதில் சொல்லத் துவங்கினார் ஒன்றியச் செயலாளர் மதியழகன். "டீ.வி பெட்டியில் பார்த்திருக்கேன்" என்று அவர் சொன்னவுடன் அந்த பா.ஜ.க பிரமுகருக்கு உற்சாகம் பீறிட, மத்திய அரசு மலைவாழ் மக்களுக்குக் கொண்டு வந்திருக்கும் திட்டங்களை விளக்கத் துவங்கி விட்டார்.

"இந்த ஏற்காடு மலைப்பகுதியில் உள்ள 67 கிராமங்களில் தலை விரித்தாடும் பெரிய பிரச்னை, குடிநீரும் சுகாதாரமும்தான். ஏற்காடு நகரில் ஒரு அரசு மருத்துவமனை உள்ளது. அங்கு மூன்று டாக்டர்கள் இருந்தும் ஒரு பயனுமில்லை. பெரும்பாலான நேரங்களில் டாக்டர்கள் இருப்பதில்லை. இதன் காரணமாக சிகிச்சை இல்லாமல் பலர் இறந்திருக்கிறார்கள்" என்று அதிர்ச்சித் தகவலைச் சொன்னார் பா.ஜ.க.வின் மாநில மலைவாழ் மக்கள் பிரிவுத் தலைவர் கோவிந்தன். அவர் சொல்வதை நிரூபிப்பது போல், கிராம மக்கள் ஒருவர் பின் ஒருவராக கிருபாநிதியிடம் புலம்பத் துவங்கி விட்டார்கள். "இரண்டு வருட காலமாக வயிற்று வலியில் கஷ்டப்படுகிறேன். இங்க இருக்கிற ஆஸ்பத்திரிக்குப் போனேன். சரியாகவில்லை. அப்புறம் சேலம் நகருக்குச் சென்று பெரிய டாக்டர்களைப் பார்த்தேன். ஆயிரக்கணக்கில் செலவாயிற்றே தவிர, வலி குறையவில்லை" என்றார் பார்வதி கண்கள் கலங்க. கிருபாநிதி மருத்துவர் ஆதலால், மக்களின் உடல்நலம் பற்றிய விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

கிருபாநிதியை மிகவும் கவலையடையச் செய்தது, சிறுவர், சிறுமியர்களின் ஆரோக்கியக் குறைவுதான். பெரும்பாலான சிறுவர்களுக்கு ப்ளோரோசிஸ் என்ற வியாதி இருக்கிறது. குடிக்கும் நீரில் ஒரு குறிப்பிட்ட அளவுதான் ப்ளோரைட் என்ற ரசாயனம் இருக்க வேண்டும். அதற்கு மேல் இருந்தால், பற்கள் பாதிக்கப்பட்டு ப்ளோரோசிஸ் என்ற வியாதி வந்துவிடும். "இந்த வியாதியால் முதலில் பெரிய பிரச்னை ஏதும் இல்லாதது போலத்தான் தெரியும். ஆனால், தொற்று (infection) உடல் முழுவதும் பரவும் நிலையில், வளர வளர, கை, கால்களில் வலி இருக்கும். உடல் செயல்பாடுகள் பலவிதங்களில் பாதிக்கும். இப்படிப்பட்ட சிறுவர்கள், பலவீனமான இளைஞர்களாக எதிர்காலத்தில் உருவாவார்கள்.

"இப்படிப்பட்ட ஆரோக்கியமற்ற சமுதாயம் உருவானால் நாட்டு நிலை என்னாவது?" என்று கவலையுடன் கேட்டார்

- குமுறும் ஏற்காடு மக்கள்

கிருபாநிதி.

"எங்களின் உடல்நலம் இப்படிப்பட்ட பிரச்னையாக இருக்க, இங்க எங்களுக்கு வேலை வாய்ப்பும் சரியில்லை. காபி எஸ்டேட்டில் வாரம் மூணு நாள்தான் வேலை கொடுக்கிறாங்க" என்றார் மலர்.



• விஜயலட்சுமி

சர்வதேச அளவில் போட்டியைத் தாங்க முடியாமல் உள்ளூர் காப்பியின் விலை மிகவும் சரிந்துவிட்டது. அதன் காரணமாக மலைப் பகுதியில் காப்பி பயிரிடுவதும் கொஞ்சம் குறைந்து கொண்டு வருகிறது. இதற்கு, மாறும் தட்ப வெப்ப நிலையும் ஒரு காரணம்.

கூலியும் குறைக்கப்பட்டுவிட்டது. வேறு வழியில்லாததால் கூலியைக் குறைத்தாலும் வேலை செய்து வருகிறார்கள் மக்கள். இப்படிப்பட்ட அடிப்படை பிரச்னைகளைத் தவிர, தெரு விளக்கு இல்லாத நிலை, பட்டா கொடுக்காத அரசின் போக்கு என்று பலவித பிரச்னைகளை கிருபாநிதியிடம் சொன்னது மட்டுமல்லாமல், மனுவாகவும் எழுதிக் கொடுத்தார்கள் அந்த மக்கள். குறிப்பாக தெருவிளக்கு இல்லாததால் அந்த மலைச் சரிவுப் பகுதியில் இருட்டிய பிறகு சென்று வருவது என்பது மிகக் கடினமாக இருக்கிறது என்பதை அழுத்தமாகச் சொன்னார்கள் அவர்கள். எவ்வளவோ முறையிட்டும் உள்ளூர் நிர்வாகம் கண்டு கொள்ளவில்லையாம்!

அடுத்ததாக கிருபாநிதி சென்ற கிராமம் ஏற்காடு நகரிலிருந்து பத்து கி.மீ தொலைவில் இருக்கும் நாகலூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த கரடியூர். இங்கேயும் கடுமையான குடிநீர்ப் பிரச்னை. ஆயிரம் பேர் கொண்ட இந்தக் கிராமத்தின் தேவையை நிறைவேற்ற ஒரே கிணறுதான். அதிலும் தண்ணீர் அடி மட்டத்துக்குச் சென்றுவிட்டது. "ஏற்காட்டிலிருந்து வரும் சாலை மிகவும் மோசமாக இருப்பதால், மழைக் காலத்தில் பேருந்துகள் நிறுத்தப்பட்டு விடுகின்றன. இதனால் ஏற்காடு நகருக்குப் படிக்கச் செல்லும் மாணவ மாணவிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்" என்றார் ஆண்டியம்மாள்.

ஏற்காட்டில் சுமார் ஒரு லட்சம் மக்கள் இருந்தாலும் அங்கு கல்லூரி எதுவும் கிடையாது. "மேல்நிலைப் படிப்பு முடிந்தவுடன் பெரும்பாலான மலைவாழ் மாணவ, மாணவிகள் வசதிக் குறைவு காரணமாக, படிப்பை நிறுத்தி விடுகிறார்கள். கரடியூரில் ஐந்தாம் வகுப்பு வரை உள்ள பள்ளியில் நூறு குழந்தைகள் படிக்கிறார்கள். ஆனால் இரு ஆசிரியர்கள்தான். மேலும் ஆசிரியர் தேவையை உணர்ந்து, ப்ளஸ் டூ முடித்த சீதாலட்சுமி என்பவர் இலவசமாகவே கற்பிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்" என்றார் உள்ளூர்க்காரரான செல்வம். பட்டா கொடுத்தாலும் பெரிய பிரச்னையாக இருக்கிறது.

மக்களின் குறைகளைக் கேட்டுவிட்டுத் திரும்பிய கிருபாநிதி, "கிராமங்களுக்குச் செல்வோம்" என்ற எங்கள் கட்சியின் செயல் திட்டப்படி, நிறைய கிராமங்களுக்குச் சென்று மக்களின் குறைகளைக் கேட்டு வந்திருக்கிறேன். மற்றப் பகுதியிலுள்ள மக்களின் குறைபாடுகளுக்கும் இங்கே மலை மேல் உள்ளவர்களின் பிரச்னைகளுக்கும் கொஞ்சம் வேறுபாடு உண்டு. உயரத்தில் வாழ்கிறார்கள்; வாழ்க்கைத் தரமோ பள்ளத்தில் உள்ளது. போன நிதியாண்டில் மலைவாழ் மக்களுக்குப் பயன்பட கொடுக்கப்பட்ட நிதியை செலவழிக்காமல் திருப்பிவிட்டது மாநில அரசு. மாநில அரசு செயல்படுத்தும் பெரும்பாலானத் திட்டங்களுக்கு நிதியுதவி செய்வது மத்திய அரசுதான். குறிப்பாகச் சொல்லப் போனால் விவசாயிகளுக்குப் பச்சைக் கடன் அட்டை, பிரதமரின் கிராமச் சாலைகள் திட்டம், வீடு கட்ட மான்யம், முதியோர்களுக்கு இலவச அரிசி, ஓய்வூதியம், பெண்களுக்குக் காப்பீட்டுத் திட்டம் என்று மத்திய அரசுத் திட்டங்கள் பல உள்ளன. ஆனால் அமல்படுத்துவதில் மாநில அரசு சுணக்கம் காட்டுவதால்தான் பல பிரச்னைகள்" என்றார்.

ஏற்காடு மலைப் பகுதி மக்களின் குறைகளைக் கேட்டு வந்ததன் தொடர்ச்சியாக, அங்கே பெரிய மருத்துவ முகாம் நடத்தும் முயற்சியில் தற்போது இறங்கியிருக்கிறார் கிருபாநிதி.

- ப்ரியன்

படங்கள்: சௌரா

தமிழ் சிடிக்கள்!

The Complete Tamil CD

அமுதம்

- தமிழ் Windows Fonts
- ஆத்திச்சூடி
- திருக்குறள்
- தமிழ்ப்பெயர்கள்
- Symbols, Borders
- Cliparts
- Photos

Rs. 499/-

Amudham Super pack - **Rs. 1200 /-**
(10 Products in 1 pack with 27 tamil fonts)

Tamil Ezhuthani - **Rs. 299 /-**
(Tamil fonts pack 18 Nos.)

South Indian Cliparts - **Rs. 299 /-**
(with catalogue & CD)

ஜாதகம் Software Rs. 1200/-


திருக்குறள்



குழந்தை பாடல்கள்



சினிமா




Rs.200/-

அரசியல்



Rs.200/-

யோகா



Rs.250/-

Softview Computers

118,Nelson Manickam Road, Aminjikarai,Chennai-600 029.
email: tamil@tamilsoftware.org / url: www.tamilsoftware.org
Ph: 044-3742471, 3741053 / Madurai : 347467

டீலர்கள் தேவை

தமிழில் கம்ப்யூட்டர் நூல்கள் கிடைக்கும்

ஆத்ரேயா

★ ரெடிமேட் ரவிக்கைகள்
★ பெட்டி கோட்ஸ் ★ நைட்டீஸ்
★ Childrens Nighties and Tops



- ✦ தாங்கள் போட்டு பார்ப்பதற்காகவே இரண்டு பிட்டிங் ரூம்கள்.
- ✦ நீங்களே உங்கள் ப்ளௌஸ்களை தேர்ந்தெடுக்கும் வசதி.
- ✦ வாங்கும் ரவிக்கைகளில் ஏதேனும் சிறிய ஆல்ட்ரேஷன் இருந்தால் அதை உடனுக்குடன் நிவர்த்தி செய்யும் அனுபவம்.
- ✦ கல்யாண பெண்ணிற்கு ரவிக்கைகள் தைத்து கொடுக்கும் சந்தோஷம்.
- ✦ உங்களுடன் அன்புடன் பழகும் எங்களது பெண் விற்பனையாளர்களின் உன்னதமான சேவை.

ATHREYA GARMENTS™
House of Blouses

No.1, Jambulingam Street, (Valluvar Kottam High Road),
Nungambakkam, Chennai - 600 034.
☎ 8226586 Fax : 091-044-5360076
Website : www.athreyawoman.com E-mail : ols@md3.vsnl.net.in

SINGAPORE	:	MUSTAFFA (OLD) NALLI Pvt. Ltd.,
UAE	:	LULUCENTRE
KARAIKAL	:	EVE'S PARK, BARATHIYAR STREET,

CHARY'S

வேண்டியதும் வேண்டாததும்!

உள்ளே நுழையும் முன்னரே, மாமாவின் செருப்புச் சப்தம், அவர் வரவை அறிவித்தது. அம்மாவிடம் சொல்லிவிட்டு, மாமாவைப் பார்த்துச் சொல்லலாம் என்றுதான் ப்ரஸாத் எண்ணியிருந்தான். அதற்குள் அவரே வந்துவிட்டார்.

அம்மாவின் மற்ற உடன்பிறப்புக்களைக் காட்டிலும், இவருக்கு அம்மாவிடம் அதிக ஒட்டுதல். நெடிய பெரிய உருவமாய் இருந்தவர், அப்பாவின் திடீர் மரணத்தினால் உருகி, உருத்தெரியாமல் போனதை, சொந்த பந்தங்கள் சொல்லக் கேட்டிருக்கிறான்.

மார்க் ஷீட்டை வாங்கிப் பார்த்தவர், மார்க் ஒன்றும் பிரமாதமில்லை என்றாலும், திருப்தியுடன் ப்ரஸாத்தின் முதுகைத் தட்டிக் கொடுத்தார்.

"இனி வேலைக்குப் போக வேண்டியது தானே" என்றார்.

அம்மாவின் சொற்ப சம்பர்த்தியமும், சிரமத்துடன் மாமா செய்யக்கூடிய சின்னச் சின்ன உதவிகளை மட்டுமே உள்ளடக்கிய குடும்பப் பொருளாதாரம். மேற்கொண்டு படிக்க ஆசை இருந்தாலும், தங்கையின் படிப்புச் செலவோடு இந்தச் செலவையும் தாங்கும் நிலையில் அது இல்லை. அம்மாவுக்குத் தன் ஆசை தெரியவந்தால், தன் இயலாமை குறித்து அதிகம் வருந்துவாள் என்று ப்ரஸாத் அறிவான். மாமாவின் கேள்விக்கு, தன் உணர்வுகளைச் சற்றும் வெளிக்காட்டாமல் அரை மனத்துடன் தலையசைத்தான்.

"வேங்கடநாதன் ஏஜென்சிஸ் முதலாளி நமக்கு நல்ல பழக்கம், வேலைக்குச் சொல்லி வச்சருக்கேன். நாளைக்குக் காலையில ஒன்பது மணிக்கு வந்துரு. நாளும் நல்லா இருக்கு. உடனே சேந்துரலாம்" என்று சொல்லி விட்டு, துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு கிளம்பி விட்டார்.



அம்மாவின் மனம் நிறைந்திருந்ததை தளும்பி நின்ற கண்கள் சொல்லின. திருமணமான நாள் முதல் அப்பா இருக்கையிலும், இறந்த பின்னும் அவள் அதிகம் சந்தித்தது துன்பம் நிறைந்த நாட்கள்தான். அவன் வேலைக்குப் போவது அவளின் தற்போதைய முதல் சந்தோஷம் என்று கூடச் சொல்லலாம். மேற்கொண்டு பேசித் தன் மனநிலை வெளிப்பட்டு, அவனுடைய சந்தோஷம் கெட்டு விடும் சாத்தியம் இருந்ததால், நண்பர்களைக் காணப் போவதாகச் சொல்லிவிட்டு வெளியே

கிளம்பினான்.

மறுநாள், போன தீபாவளிக்கு வாங்கிய சந்தன நிறச் சட்டையும், அரக்கு நிற பேண்ட்டும் அணிந்து கொண்டு, அப்பாவின் படத்துக்கு அருகில் நின்ற அம்மா செய்த ஆசீர்வாதம் மற்றும் தங்கையின் 'ஆல் தி பெஸ்டுடன்' வேங்கடநாதன் ஏஜென்சியை அடைந்தான்.

மாமா முன்னதாகவே வந்து காத்திருந்தார். சிறிது நேரத்தில் மாமாவுக்குப் பழக்கமான முதலாளியும் வந்து விட்டார்.

"நா சொன்னேனே, எந்தங்கச்சி மகன்" என்று அகலமாய்ச் சிரித்தபடி, அறிமுகப் படுத்தினார். அவரின் சந்தனப் பொட்டும், வெள்ளை உடுப்பு கம்பீரமும், ப்ரஸாத்தின் கைகளை இணைத்து வணக்கம்



சொல்ல வைத்தன. அளவான சிரிப்புடன் தலையசைத்தவர், 'நடராஜன்' என்று அழைத்தார். அந்தப் பெயருக்கு உரியவர் வந்து விவரம் கேட்டுக் கொண்டு, அவனை உள்ளே கூட்டிச் சென்று அவன் வேலைகளை விளக்கினார்.

தான் படித்த படிப்பையும், அதற்குச் சற்றும் சம்பந்தம் இல்லாது வாய்த்த வேலையையும் நினைக்கையில், அழுகை வரும் போல் இருந்தது. ஆண் பிள்ளை அழக்கூடாது என்கிற எழுதப்படாத சட்டத்தின் மீதும், ஏளனப்படுத்தும் சமுதாயத்தின் மீதும் கோபம் வந்தது. மாமா எட்டிப் பார்த்து, 'அப்ப நா கௌம்புறேன்' என்றபோது அழுகையைக் கட்டுப்படுத்துவது

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வைட்டமின் சிறுகதை - 14

சா. வள்ளி

கடினமாகியது.

கொடுக்கப்பட்ட வெளி வேலைகளை முடித்துக் கொண்டு உள்ளே வந்த போது, மனம் ஒருவாறு சமநிலைப்பட்டிருந்தது. மற்ற ஊழியர்களை அப்போதுதான் கவனித்தான். நடராசனைத் தவிர, இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் இருந்தனர். அவர்கள் அப்போதுதான் மதிய உணவை முடித்துக் கொண்டு வேலையைத் தொடர்வதாகவும், இன்று மட்டும் வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டு விட்டு வரலாம் என்றும் சொன்னார்.

வீட்டுக்குப் போனால், வேலை பிடிக்கவில்லை என்பதை அம்மா கண்டுபிடித்து விடுவாள். அருகில் உள்ள கடையிலேயே, டீயும், பன்னும் வாங்கிச் சாப்பிட்டு விட்டு வந்து, நடராஜன் சொன்ன மீதி வேலைகளை முடித்த போது இரவு ஒன்பது மணி ஆகி இருந்தது.

வீட்டில் நுழைந்ததும், அம்மாவும், தீபாவும் ஓடி வந்து கையைப் பற்றிக் கொண்டனர். அவன் அதிகம் பேசவில்லை. அம்மா ஏதோ கேட்க வந்தவள், அவன் முகத்தைப் பார்த்தவுடன் பேசாமல் இருந்து விட்டாள். அசதியாய் இருப்பதாய்ச் சொல்லிச் சாப்பிட்டவுடன் படுத்துக் கொண்டான்.

தூக்கம் நெருங்க மறுத்தது. வேலை வேண்டாம் என்று சொல்ல நேரமாகாது. அதன்பின் என்ன செய்வது? படிப்புக்கு ஏற்ற வேலை கிடைக்குமா? அதுவும் உடனே கிடைக்குமா? மேலே படிக்கவும் வழியில்லை. தொடர் கேள்விகளுக்குப் பதிலின்றி தூக்கம் பிடிக்க வெகு நேரமானது.

காலையில் கண் எரிச் சலுடன் எழுந்த போது வேலைக்குச் செல்ல சிறிது நேரமே இருந்தது. அவசரமாய்க் குளித்துச் சாப்பிட்டு, அம்மா தந்த மதிய உணவுடன் கிளம்பினான்.

இன்றும் வெளி வேலைகள் கொடுக்கப் பட்டன. முடித்துக் கொண்டு வந்த போது, அலுவலகத்தில் அந்தப் பெண்ணைத் தவிர வேறு யாருமில்லை. அப்போது உணவு நேரம் நெருங்கியிருந்தது.

"சாப்பிடுவோமா. அவங்க மூணு பேரும் வர நேரமாகும்" என்றபடி சிநேகமாய்ச் சிரித்தாள்.

அவளுடன் சாப்பிட சங்கோஜமாய் இருந்தது. அவளுடைய உணவை எடுத்துக் கொண்டு அந்த அறையின் கோடியில் இருந்த மேஜைக்கு அருகே அமர்ந்தாள். மறுக்க வழியில்லாததால், உணவை எடுத்துக் கொண்டு அவனும் அவள் எதிரில் அமர்ந்தான்.

"என் பேரு கற்பகவல்லி. உங்க பேரு ப்ரஸாத்துன்னு நடராஜண்ணன் சொன்னாரு."

பதிலேதும் சொல்லாமல் பட்டும் படாமல் புன்னகைத்தான். அவளே தொடர்ந்தாள்.

"வேலையெல்லாம் எப்படியிருக்கு?"



"ம். பரவால்ல."

"என்ன படிச்சிருக்கீங்க?"

நேற்று காலை முதல் அழுத்திக் கொண்டிருந்த சுமை அம்மாவிடமோ, தீபாவிடமோ, பகிர்ந்துக் கொண்டால், அவர்களைப் புண்படுத்திவிடும். நண்பர்களைச் சந்திக்கக் கூட அவகாசம் இல்லை. கற்பகவல்லி என்னவோ அக்கறையாய்த்தான் கேட்டாள். அந்த எதிர்பாரா அக்கறையே கூடக் காரணமாய் இருக்கலாம். சற்று முன் தான் அறிமுகமானவள் என்பது கூட பொருட்டாய்த் தெரியவில்லை. இயலாமை, ஏமாற்றம், ஏழ்மை, ஏக்கம் எல்லாம் சேர்த்து பட்டென்று வெடித்தது.

அவன் பேசி முடிக்கும் வரை பொறுமையாய்க் காத்திருந்தாள். பின் சொன்னாள்.

"அம்மாவுக்குக் கிட்னி ஃபெயிலியர், அப்பாவோட சம்பளமெல்லாம் டையாலிஸிஸ், மாத்திரை, மருந்துன்னு இதுக்கே சரியாய் இருக்கும். ட்ரான்ஸ்ப்ளான்ட்டுக்கெல்லாம் வசதியில்லை. வேண்டாமுன்னு விட்றவும் முடியாது. வேணும்ன்னு பெரிய செலவும் பண்ண முடியாத நிலமை. நான் ப்ளஸ் டூல ஸ்கூல் ஃபர்ஸ்ட். எனக்கு ஒரு தங்கச்சி வேற. சாப்பாட்டுக்கு என்ன பண்றது? அதான் இங்கே வர்றேன். உங்க நெலைமை எவ்வளவோ மேல் இல்லையா?

"உழைப்பும், புத்திசாலித்தனமும் இருந்தா, நீங்க இந்த வேலைல இருந்துகிட்டே முன்னேற முடியும். உழைப்புல உண்மை இருந்தா மட்டும் போதாது. அப்பப்ப நீங்க கெட்டிக்காரன்ங்கறத நிரூபிக்கணும். செய்யற வேலையை, வெறுப்பில்லாம ஈடுபாட்டோட செய்யணும். அப்ப மொதலாளியே அவரால முடிஞ்ச உதவிய செஞ்சு, சான்ஸ் கெடச்சா நாம ஏஜன்ஸி எடுத்திருக்கற கம்பெனில கூட சேத்து விடுவாரு. வாழ்க்கை இந்த வேலையோட முடிஞ்சு போறது இல்ல. நிறைய சாதிக்க உங்களுக்கு வயசும் இருக்கு. அப்புறம் எதுக்கு ஃபீல் பண்றீங்க?"

அவள் பேச்சைக் கேட்டு ஸ்தம்பித்துப் போனான். தன் குறுகிய சிந்தனையை நினைக்கையில் வெட்கமாய் இருந்தது. மனம் பாரம் குறைந்தாற்போல் இருந்தது.

அவளின் மெலிதான புன்னகையைக்கண்டு, "அப்பாடா, இப்பத்தான் நீங்க சிரிச்சே பாக்கறேன்," என்றாள்.

அவனுக்கு ஏற்பட்ட தெளிவு ஆழமாய், அகலமாய், நீளமாய் விரிந்து கொண்டே போனது.



இரவு வீடு திரும்பிய போது பத்து மணியாகி இருந்தது. அம்மா சற்று மிரட்சியுடன் வரவேற்றாள். மகன் தன்னை விட்டு விலகிப் போவதாய் உணர்ந்திருப்பாளாயிருக்கும். இந்த இரு தினங்களுக்குள் அவனிடம் தான் ஏற்படுத்திய இடைவெளியை நினைக்கையில் சங்கடமாய் உணர்ந்தான். தீபா தூங்கியிருந்தாள். அண்ணனிடம் பேச எதுவுமில்லை என்று எண்ணிவிட்டாளோ என்னவோ?

பரிமாறிவிட்டுப் போவதா, இருப்பதா என்ற தடுமாற்றத்துடன், அம்மா சற்று தள்ளியே நின்றாள்.

"அம்மா... பக்கத்தில உட்காரேன்."

அந்த வார்த்தைகளுக்காகவே காத்திருந்தது போல் அருகில் அமர்ந்தாள். நேற்றும், இன்றும் தனக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளையும், சென்ற இடங்களையும், பார்த்த நபர்களையும் விவரித்தான். ஆர்வமாய்க் கேட்டுக் கொண்டிருந்த அவளின் முகம் பெருமிதத்தில் மின்னியது. அந்த எளிமை நிறைந்த குணம் அவனை நெகிழச் செய்தது.

"அம்மா உன்னைப் போலவே எனக்கொரு பிரியமான சிநேகிதி அங்கேயும் இருக்கா" என்று சொல்லியபடி எழுந்தான்.

அவனுள் பல கதவுகள் விசாலமாகத் திறந்திருந்தன. புழுக்கம் முற்றிலும் மறைந்து, இதமான காற்று வீசியது. படுத்தவுடன் தூங்கிப் போனான். ○



பொய்
சொன்னதற்காக
கோபித்துக்
கொள்கிற
உன் சிணுங்கல்
உன்னதமானது
கால்களில் மட்டுமன்று
இதழ்களிலும்
பொருத்தியிருக்கிறாய் கொலுசை

பச்சைப் பசேலென்று நிறம் தரித்து; பார்க்கப் பார்க்க கண் சிவக்க அழகு பூத்திருந்த கிராமம் ஒரு காலத்தில் இருந்தது. வீதிகளில் வண்டித்தடம் பதிந்திருந்தது. வரப்புயர்ந்து நெல்லுயர்ந்து வளம் கொழித்த பூமியில் நாம் வாழ்ந்திருந்தோம். காவிரி ததும்பத் ததும்ப நடந்து கொண்டிருந்தாள். ஆற்றுப் படுகைகளில் மஞ்சளத்தி மலர்ந்திருந்தன. வயசுப் பெண்களின் இதழ்களில் சிரிப்பும், பையன்களின் கண்களில் உற்சாகமும் வழிந்திருந்தன.

செங்கல் ஒளியானே
சிவந்த கனி வாயானே
மின்னல் ஒளியானே
மேனி மெலிந்தனே - என்று

தலையில் முண்டாக் கட்டிக் கொண்டு ஒருவன் மருகியிருந்தான். மனசு முழுக்கப் பந்தலிட்டு தன் காதலியை அமர்த்தியிருந்தான். அவன் ஜாடைகள் அவளை உசுப்பின. அள்ளி முடிந்த பூவில் அவள் வாசம் அடித்தது. அள்ளிச் சொருகிய கூந்தலில் அவன் சிக்கியிருந்தான். காதலின் முதல் பார்வையை தரிசித்த பெருமை கிராமத்திற்கே உண்டு.

கிறி மயிருணர்த்தி
தெத்தம் போல முடிக்க
வாருமையா சாவடிக்கு
வாசமுள்ள பூமுடிக்க

வாய் திறந்து பேசினால்தான் பேச்சா? மொழியின் சாவி செய்கைகளிலிருந்து கண்டெடுக்கப்பட்டது. காதலும் அப்படியே.

உண்மையான காதலை கிராமத்தில்தான் பார்க்க முடிகிறது என அங்கலாய்ப்பவர்கள் உண்டு. அந்த உண்மை நிரந்தரமானது. நகரத்துக் காதலில் கொஞ்சம் போல் நகாசு வேலைகள் மறைந்திருக்கின்றன. கிராமத்துக் காதல் எதனால் உயர்வென்றால் கிராமத்துக் காதலிகளே தைரியமாய் முடிவெடுக்கும் திராணியுள்ளவர்கள் என்பதால். இது முடிவல்ல. யூகம். மாராப்பு மறைவில் பச்சை குத்திக்



காதல் பிசாசே



கொள்கிற அளவுக்குப் போய் விடுகிறார்கள். பச்சை குத்திக் கொள்வதால் உயர்வென்று சொல்லவில்லை. பச்சை குத்திக் கொண்ட பிறகு ஏற்படும் சிக்கலை சாதுர்யமாய் சமாளிக்கும் மறத்தனம் அவர்களிடம் உண்டு. மேலும், ஆண், பெண் பாகுபாட்டை அறவே மறுப்பவர்கள் கிராமத்து மனிதர்கள். எத்தனையோ வீடுகளில் பெண் உழைத்து சோறு பொங்குகிற காட்சி இன்றைக்கும் அரங்கேறுகிறது.

கதிரறுத்து: கிறுகிறுத்து
கண்ணுரெண்டும் சோரப் போட்டு
சின்னக் கட்டா கட்டச் சொல்லி
சிமிட்டுறானே மே முழிய -

வயலும் வயல் சார்ந்ததுமான மருத நிலத்துக் காதலர்கள் நெகிழ்வானவர்கள். ஊருக்கே சோறு போடும் தொழில் புரிந்தும், சோற்றுக்கு வழியற்றுச் சுணங்கிக் கிடப்பவர்கள். பசியும் காதலும் ஒரே மாதிரியானவை தான். பசி வந்தாலும் காதல் வந்தாலும் தவிப்பு ஒன்றுதான். பசியோடு படுத்தால் தூக்கம் வராது. காதலோடு படுத்தாலும் தூக்கம் வராது.

வயல்களில் கதிரறுத்து கட்டுக் கட்டாக களத்துக்குத் தூக்கி

6

வருகிறார்கள். கட்டு சுமப்பவர்கள் பெரும்பாலும் பெண்கள் தான். கதிரடிப்பது ஆண்கள். அறுத்த வயலில் சிதறிய நெல் மணிகளைப் போல, களத்து மேட்டில் காதல் இறைந்து கிடக்கும். கட்டு தூக்கி விடுகிறவன் காதலனாயிருந்தால் சுமக்க வருகிறவளின் பாடு கொண்டாட்டம்தான். இடது மூலையில் மைவிழி சுழற்றி ஒரு பார்வை பார்த்தால் போதும், கட்டுச்சுமை குறைந்துவிடும். அவனுக்கோ கதிரடிப்பில் வேகம் கூடும். தொடக்கத்தில் காதலின் வேர், உழைப்பாளிகளின் வியர்வை நீரிலிருந்தே முளைத்திருக்கும் போல.



யுகபாரதி

திருமணம் முடிந்த பிறகும் வயல் வேலையில் கணவனுக்கு ஒத்தாசையாக வருவாள் மனைவி.

எட்டு மணி நேரம் ஜன்னலோடு பேசிக் கொண்டிருக்கும் நகரத்துப் பெண்ணின் அவஸ்தை கிராமத்துப் பெண்ணுக்கு அன்றிருக்கவில்லை.

எல்லோரும் பல்விளக்க
ஆலங்குச்சி அத்திக்குச்சி
அவரும் நானும் பல்விளக்க
ரங்கத்துத் தங்கக் குச்சி

வேலைகளுக்கிடையே பாடுவதற்கும் சொந்தப் பெருமையைப் பேசுவதற்கும் நேரமிருந்தது. பாசனம் வற்றிய இன்றைய இந்திய கிராமங்களில் பாடலுமில்லை, காதலுமில்லை. ஆனால், காதலர்கள் இருக்கிறார்கள்.

வாழைக் கொடிக்காலே
வட கொடிக்கால் வெத்தலையே
போட்டா செவக்குதில்ல
பொண்மயிலே உன் மயக்கம்

வெற்றிலை போடுகிற காதலனை இன்றைக்கு எளிதாகப் பார்க்க முடியுமா? பான் பராக்கும் சிகரெட்டுப் புகையுமாக கிராமத்து வீதிகள் மாறிவிட்டன. அன்றைக்கு வெற்றிலை போடுகிற பழக்கமிருந்தது. வெற்றிலை போடுவது தனிக் கலை. இரண்டு விரல்களால் சிவலைக்கிள்ளி, கன்னக் கதுப்பில் அடக்கிக் கொண்டு, வெற்றிலையை எடுத்து இரண்டு புறமும் ஒரு ஏளனப் பார்வை பார்த்துவிட்டு நுனி கிள்ளி, சுண்ணாம்பைத் தடவி, அதே லாவகத்தோடு மெல்லத் தொடங்கினால் சிவக்குமே ஒரு சிவப்பு அந்தச் சிவப்புக்கு ஈடானது செங்கல் நிறம். அந்த செங்கல் நிறத்துக்காரியாள் நினைவால்தான் வாய் சிவந்தது எனப் பாடுகிறான். அதுமட்டுமல்ல, சிவந்தது உன் மயக்கத்தால் என்கிறான். வறுமையின் நிறம் சிவப்பு என்பார்கள். மயக்கத்தின் நிறமும் சிவப்புத் தானோ?

ஒருவரை ஒருவர் விஞ்சி நிற்பதில் தான் காதல் பூரணமடைகிறது. வெற்றிலைச் சிவப்பை இவன் சிலாகித்ததும், இவன் சொல்கிறாள்.

சந்தனக் கும்பாவில்
சாதம்போட்டு உண்கையில்
உங்களை நினைக்கயிலே
உண்ணுறது சாதமில்லை.

நினைப்புகளை உண்டு வாழும் விநோதப் பறவைகள் காதலர்கள். மழைநீர் உண்டு வாழும் சக்ரவாகம் என்பார்கள். கிராமத்துக் காதலில் மெய்யான பிரியத்தைக் காணலாம். காண்பவரின் கண்ணைப் பொருத்ததுதான் எல்லா அபிப்ராயமும். இதில் கிராமம் நகரமென்கிற வித்தியாசம் தேவையற்றது. கிராமத்தில் வந்தாலும் நகரத்தில் வந்தாலும், காற்று காற்றுதான்.

ஒரு வேளை
இந்த நிலவிலும்
மேகத் திரள்களிலும்
தேடியலைந்து
நீ எதிலுமே காணமுடியாத
தூரத்தின் அளவு கடந்து
நான் தொலைந்து போய்விடலாம்

'ஒதுங்கிய தெருவிலும், சோடியம் விளக்கு' தொகுப்பில் மலைச்சாமி எழுதியதை போல, காதலை எங்கெங்கோ தேடியலைகிறோம். கடைசியில் பக்கத்து வீட்டில் அல்லது பக்கத்துத் தெருவில் சிக்கிவிடும். பாசாங்கற்ற கிராமத்து மனிதர்களின் உணர்வுகள், எழுத முடியாதச் சித்திரம். அவர்களது காதலும் வாழ்வும் இரண்டறக் கலந்தவை. செம்புலப் பெயல் நீர் போல உவமிக்கத் தெரியாவிட்டாலும் ஒருத்திமீது ஒருவன் கொள்கிற காதல், அவன் உழைப்பின்மீது செலுத்துகிற கவனத்தை அதிகப் படுத்துகின்றன. உழைத்த காசில் பூவாங்கிக் கொடுக்கப் பிரியப்படுகிறவனே பிரபஞ்சத்தின் உன்னதமான காதலன். காதலில் உன்னதமென்று எதுவுமில்லை. அழுக்கும் வியர்வை வீச்சமும் கூட அவர்களுக்குள் இடைவெளியை உண்டாக்குவதில்லை. மிக அருகிலேயே இருக்கிறது சொர்க்கம். ஆனால், அது பருகமுடியாத தூரத்தை உருவாக்கி விடுகிறது.

(தொடரும்)

"தமிழ் மொழி மேல அவருக்கு ரொம்ப பற்று அதிகமோ?"

"ஏன் அப்படிக் கேக்கறீங்க?"

"'வீள்வது நானா இருந்தாலும் வாள்வது தமிளா இருக்கணும்'னு அடிக்கடிச் சொல்றாரே!"

- சீர்காழி வி. ரேவதி









சும்மா கிடந்த நெலத்தக் கொத்தி..!

சும்மா கிடந்த நிலத்தைக் கொத்தி, ஒரு பச்சை வண்ண பூமியை உருவாக்கியுள்ளனர் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை முதல் அணியினர். திருச்சியில் உள்ள அதன் மைதான வளாகத்தில் நுழைந்தால், ஏதோ ஒரு நந்த வனத்தில் நடப்பது போல் இருக்கிறது.

"இரண்டு ஆண்டுகள் முன்பாக இந்த மைதானத்தில் கருவை முட்செடிகளும், கள்ளிப் புதர்களும், பாம்புப் புற்றுகளும் ஆக்ர மித்திருந்தன. இன்று அந்த மைதானத்தின் வடிவமே தலைகீழ். சாலையோரங்களில் நிழல் தரும் மரங்கள். உட்பகுதிகளில் அதிகப் பயன் விளைவிக்கும் மா, பலா, வாழை, தென்னை எனப் பல்வகை மரங்கள். ஆறு ஏக்கர் நிலப் பரப்பை விளைச்சல் காடாக்கி வெங்காயம், தக்காளி, வெண்டை, கத்தரி, முள்ளங்கி என, காய்கறித் தோட்டம் போட்டு, இந்தச் செம்மண் பரப்பை பசுமைப் பிரதேசமாக மாற்றிக் காட்டியுள்ளார் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் திருச்சி மண்டல டி.ஐ.ஜி. செ. ராஜேந்திரன்'' என்கிறார் இங்குள்ள காவலர் ஒருவர்.

சிறப்புக் காவல் படையில் பணியாற்றும் ஆண், பெண் காவலர்களுள் அவசரப் பணிக்கென செல்வோரைத் தவிர, மற்ற காவலர்களைக் கொண்டு இதை மாற்றியுள்ளார் டி.ஐ.ஜி.

கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே இரண்டாயிரம் மாஞ்செடிகள், ஐந்நூறு பலாக் கன்றுகள், இரண்டாயிரம் தென்னங் கன்றுகள் மற்றும் கொய்யா, வாழை, சப் போட்டா என, பதினைந்தாயிரம் மரக்கன்றுகள் நடப் பட்டுள்ளன.

காவலர்கள் தங்கள் ஓய்வு நேரங்களை தண்ணீர்ப் பாய்ச்சுவது, களை பிடுங்குவது, என செலவிட்டு வருகின்றனர்.

இந்த ஒன்றரை ஆண்டுகளில் காய் கறிகள் பயிரிட்டதில், ஒரு சாகுபடியில் மட்டும் பதினைந்தாயிரம் ரூபாய் வருவாய் வந்துள்ளது. ஆறு ஏக்கர் பரப்பளவில் நிலக் கடலை பயிரிட்டதில் பதினெட்டாயிரம் ரூபாய் லாபமாம். காவலர் குடும்பங்களுக்குப் பாதி விலையில் விற்று' வந்ததிலேயே, இந்த வருமானம் வந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

"நான் இங்கு வந்து பதவியேற்ற போது சுற்றிலும் முள் காடு, கள்ளிச்செடிகள் மற்றும் பாம்புப் புற்றுகள். இங்குள்ள காவலர்கள் டியூட்டிக்குப் போனவங்க போக, எப்பவும் ஒரு எழுபது எண்பது பேர் சும்மாத்தான் இருப் பாங்க. சும்மா இருப்பவர்களின் உள்ளம் சைத்தானின் இல்லமாகி விடும். அதனால, இதை சுத்தம் பண்ணின மாதிரியும் இருக்கும், அவுங்களுக்கு வேலை கொடுத்த மாதிரியும் இருக்கும்ன்னு இதுல ஈடுபட்டோம்" என்கிறார் சீருடை விவசாயிகளை உருவாக்கித் தந் துள்ள திருச்சி மண்டல டி.ஐ.ஜி. செ. ராஜேந்தி ரன்!

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



புது முகவரி!

✉ எதிர்காலத்தில் காஷ்மீருக்கு வரக்கூடிய புதிய ஆபத்துகளை அப்பட்டமாக விளக்கியிருந்தது 'முஃப்தியின் கருணை துயரத்தில் முடியும்' தலையங்கம். கருணை என்பது மிக உயர்ந்த குணமாக இருந்தாலும் அதை எங்கே, எப்போது காட்டலாம் என்பதில் மிகவும் கவனமாய் இருக்க வேண்டும். இல்லாவிடில் எதிர்பார்த்ததற்கு நேர்மாறான விளைவுகளே அது ஏற்படுத்திவிடும் என்ற உமது ஐயப்பாடு முற்றிலும் உண்மை!
திருவாரூர்-1, ஆர். ராமசுப்ரமணி.

✉ மகாகவி பாரதியாரின் கொள்ளுப் பேரன் நிரஞ்சன் பாரதி, புட்டபர்த்தி ஸ்ரீசத்ய சாயிபாபா ஜயந்தியை ஒட்டி, பாபாவைப் பற்றிப் படைத்த கவிதை பாராட்டுக்குரியது.
சென்னை - 73, கே.வி.ராமன்.

✉ வயதானாலும் உண்மையான நட்பு என்பது உயிர் பிரியும்போதுகூட சாகாது, என்ற உண்மையை 'ஃபிரண்ட்ஸ்' சிறுகதை மூலம் உணர்த்திவிட்டார் ஆசிரியர்.
திருவாரூர்-1, எஸ். பாலச்சந்தர்.

✉ 'பெண்களுக்கு எதிரான வன்முறையில் தில்லிக்கு அடுத்தபடியாக சென்னை இருக்கிறது' என்பதை அறியும்பொழுது அதிர்ச்சியாகத்தான் இருக்கிறது. பெண்கள் 'தற்காப்புக் கலை'யைக் கற்றுக் கொள்வதன் மூலம் ஈவ் டீசிங் செய்பவர்களுக்குப் பதிலடி தரலாம் என்றாலும், 'ஈவ் டீசிங்' செய்யும் எண்ணம் ஆண்களுக்கு வராமலிருக்கவும் உருப்படியாக ஏதாவது செய்ய வேண்டும்.
மதுரை -1, என். பாலகிருஷ்ணன்.

✉ "மாணவர் உலகம் மருவத்தூர்": கட்டுரை மருவத்தூரின் வேறொரு முகத்தைக் காட்டியது.
திருச்சி - 2, எஸ். சொர்ணமூர்த்தி.

✉ கல்கி (24.11.02) கல்கி இதழில் ரிமோட் பகுதியில் வெளியான 'வெறி பிடித்த ரசிகர்' என்ற செய்தி என்னை வருத்தமடையச் செய்தது. எதன் மீதும் வெறி பிடித்து கைத்தறி பட்டுத் துணி நெய்து சன் டீ.விக்கு அனுப்பவில்லை. பல்வேறு காரணங்களினால் நலிவடைந்த நிலையில் இருக்கும் பட்டுக் கைத்தறித் துணியின் 'சிறப்பையும் கலை நுணுக்கத்தையும்' எடுத்துக் காட்டும் விதமாகத்தான் நெய்து அனுப்பியிருந்தேன். அதன் மூலமாக 'கைத்தறித் துணியின் சிறப்பை மக்கள் உணர்வார்கள்' என்ற எண்ணத்தில் தான். மேலும் அதில் குறிப்பிட்டுள்ளது போல் நெய்வதற்கு ஒரு மாதம் ஆகவில்லை. ஒரு வார காலம்தான் ஆயிற்று.
கும்பகோணம், எஸ். மணிவண்ணன்.

✉ 'ஹாய்!' - திருமணக் கனவுகளுடன் காத்திருக்கும் பெண்ணின் (அனு) மனசை... அந்த க்ஷணத்துடன் கரையப் போகிற சாக்லெட் சந்தோஷங்களுடன் ஒப்பிட்டது மனசைத் தொட்டது.
சென்னை - 49, மயிலை கோபி.

✉ இயந்திர மனிதர்களாய் உலாவரும் இன்றைய நாட்களில், அர்த்தமுள்ள நகைச்சுவை உரையாடலில் பாத்திரங்களைப் படைத்து, அனு, மைதிலியை எங்களோடு பேச வைத்துவிட்டார் பா. ராகவன்.
சென்னை - 61, ஆர். நாகராஜன்.



✉ பெற்றோரால் நிச்சயிக்கப்படும் திருமணம் உண்மையில் யார் மனத்தையும் வருத்த விரும்பாத யாகமே. இதை வெகு இயல்பாகச் சித்திரித்த 'ஹாய்...' தொடருக்கு ஒரு வெல்டன்!
குட்டலாடம்பட்டி, கொ.மூர்த்தி

✉ 'ஹாய்' அற்புதமான தொடர். நான் சாதாரணமாகவே பிராமணர்களின் வாழ்க்கை முறையை மிகவும் ரசிப்பவள். பிராமணர்களின் கல்யாணத்தில் இடம் பெறும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் நன்கு, ரசிக்க முடிந்தது.
திருநெல்வேலி - 7, வி. இலகம்.

வட்டமேசை

நீங்கள் கேட்டவை - தராசு

வைகோ வழக்குத் தொடர்ந்துள்ளாரே!

● க.பூங்கொடி, சித்தோடு

? மறதி யாருக்கு வேண்டும்?

! மோடியுடைய நோக்கில் பார்த்தால் அகமதாபாத் மணி நகரம் மக்களுக்குத்தான்!

● பி.ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி

? பொடா சட்டத்தின் 21வது பிரிவு செல்லத் தக்கதல்ல என்று அறிவிக்கக்கோரி, உச்ச நீதிமன்றத்தில் வைகோ இவ்வளவு நாள் கழித்து வழக்குத் தொடர்ந்துள்ளாரே... ஏன் சார்?

! அநியாயத்துக்கு ரொம்ப நாள் இழுக்கடிக்க மாட்டாங்க; ஹீரோவா வெளியே வந்துடலாம்னு போட்ட கணக்கு தப்பாப் போச்சு; அதுதான்.

● என். பாலகிருஷ்ணன், மதுரை - 1

? 'காஷ்மீர் பற்றியே பேசிக் கொண்டிருக்காமல் வர்த்தகத் தொடர்பை வளர்த்துக் கொள்ளுங்கள்' என்று இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அமெரிக்க அமைப்பு ஒன்று அறிவுரை சொல்லியிருப்பதை வரவேற்கிறீர்களா...?

! கத்த அபத்தமுங்க, கண்ட இடத்தில் கட்டுத் தள்ளிக்கிட்டு இருந்தா வர்த்தகத் தொடர்பு எப்படிங்க வளரும்? உசிரைக் கையில் பிடிச்சுக்கிட்டா வியாபாரம் பண்ண முடியும்? பேச்சுவார்த்தை, சமாதானத்துக்கான முயற்சி - இதை விட்டால் வேற வழி கிடையாது. பாகிஸ்தான்மீது தாக்குதல் நடத்தவும் முடியாதபடி அணு ஆயுதப் போர் மூளும் அபாயம் தடையா இருக்குது.



● பிசகிய கணக்கு...!

● இரா. சக்கரபாணி, மதுரை - 7


? கோயம்பேடு பேருந்து நிலையத் திறப்பு விழாவுக்கு எதிர்க்கட்சியினரை அழைக்காமல், முன்னாள் முதல்வர் நாட்டிய அடிக்கல்லையும் நீக்கிய செயல் எதைக் காட்டுகிறது...?

! அ.தி.மு.க.வில் அரசியல் பண்பாடு செத்துவிட்டதை.

● ஜோ. பன்னீர் செல்வம், சென்னை

? பில்கேட்ஸ் இந்தியாவுக்குப் பலமுறை வந்த போதும் சென்னைக்கு வரவில்லையே...?

! கஜானா காலி மாநிலத்துக்குள் நுழைந்தால் 'நன்கொடை' கொடுக்க வேண்டிவரும் என்று நினைத்திருக்கலாம். அல்லது 'ஆட்சி' நடக்கும் மாநிலமாக இருக்க வேண்டும் என்று எண்ணியிருக்கலாம்.



● மறதியை நம்பி...!



● ஜி.கே.எஸ். மூர்த்தி, கோபி

? தோஷ நிவர்த்தி விசேஷ யாகத்தில் கலந்து கொள்ள திருநள்ளாறு சனீஸ்வரன் கோயிலுக்கு வருகை தந்த எஸ்.எம்.கிருஷ்ணாவின் மொழி தாண்டிய வழிபாடு குறித்து...?

! கஷ்டமும் கட

வுளும் மொழி கடந்தவை என்பது தெரியாதா? இதில் வியப்பொன்றும் இல்லையே! தமிழ் நாட்டிலிருந்தும் கர்நாடகாவுக்கு வழிபாடு நடத்தப் போன முதல்வர் உண்டே!

● கிருஷ்ண ராஜ்கோபால், சென்னை-92

? தமிழ்நாட்டை மிகவும் அச்சுறுத்துவதாக நீங்கள் நினைக்கும் ஒரு சில சக்திகள்...?

! ஜாதிக் கட்சிகள்.

● நாதன், வாணியம்பாடி

? ஆந்திராவில் நக்சலைட்கள் மீண்டும் முளைத்துவிட்டனரே...?

! ஆந்திராவில் புதுசா முளைக்கலைங்க... சிறான இடைவெளியில் வேலையைக் காட்டிட்டு வராங்க; தமிழ்நாட்டுலதான் திடீர்னு நடமாட்டம் அதிகமாயிருக்கு. கட்டுத் தள்ளினா பிரயோஜனமில்லீங்க; பிரச்னையின் ஆணி வேரைக் களையணுங்க!

● கே. துரைசாமி, மங்களப்பட்டி

? கங்கை - காவிரி இணைப்பது பற்றி பிரதமர் பாராளுமன்றத்தில் பேசிவிட்டாரே! சாத்தியமா?

! கங்கா - காவேரி இணைப்பு என்ற கனவைப் பகுதி பகுதியாக நனவாக்க திட்டமிட வேண்டும். ஒவ்வொரு கட்டத்திலும் வேலை வாய்ப்பும், விவசாயமும், நாட்டின் பொருளாதாரமும் கணிசமாக உயரும் வகையில் செயல்படுத்த வேண்டும். இப்படி புத்திசாலித்தனமாக நடந்து கொண்டால் சாத்தியமே.

● க.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப் பாளையம்.

? கர்நாடகக் காவல் துறையின் முன்னாள் ஆணையர் தினகர், ராஜ்குமாரை விடுவிக்க கர்நாடக முதல்வர் பிணைத் தொகை கொடுத்ததாகக் கூறியிருப்பது பற்றி...?

! அவதூறாகப் பொய் எழுதியதற்காக தினகர் மீது வழக்குத் தொடரவே பாதிக்கப்பட்டவர்கள் தயாராகி வருகிறார்களே!

● கே.வி.ராமன், சென்னை ★

? அரசுப் பேருந்துகள் தனியார் மயமானால், தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவதுடன் மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் இல்லாமல் போகுமே...?

! மாணவர்கள் மட்டும் அல்ல; லட்சோப லட்சம் எளிய மக்களும் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். தனியார் கட்டணம் அவர்களுக்குக் கட்டி வராது. பொதுப் போக்குவரத்து, பொது விநியோகம் (உணவு), விவசாய மானியங்களில் கை வைப்பது, அடி மடியில் கை வைக்கும் கதைதான்.

● பா. அச்சுதன், வயலூர்

? எது உண்மையான வீரம்?

! 'என் பெண்டாட்டி சொன்னபடி கேட்டு நடந்து கொண்டேன்' என்று ஒரு சிக்கலில் அகப்பட்ட மாண்பமை நீதிபதி வேங்கடசாமி கூறுவது!

● காமேதா, பொறையாறு

? கூட்டுறவுச் சங்கங்களில் தேவைக்கு அதிகமாகவும் விதிமுறைகளை மீறியும் பணியில் அமர்த்தப்பட்ட இருபத்தேழாயிரம் ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பும் தமிழக அரசின் முடிவு பற்றி...?

! முன்னது கண்டனத்துக்குரியது; பின்னது வருத்தத்துக்குரியது. எண்ணித் துணிக கருமம் என்று இதற்காகத்தான் சொன்னார்கள்.

● டி.கே.சுப்பிரமணியம், திருப்பரங்குன்றம். ❒

? திருபர் சிவகப்ரமணியன் கதிரைப் பார்த்த பிறகும் வீரப்பனிடம் தூது செல்ல யாராவது முன்வருவார்கள் என்று நினைக்கிறீர்களா?

! அதான் மாட்டிக்கிட்டு முழிக்கிறாங்களே, பார்க்கிறோமே! கொளத்தூர் மணியை அனுப்புவது கூட அவ்வளவு சுலபமாக இருக்காது போலிருக்கே. சாமி வரங் கொடுத்தாலும் பூசாரி இன்னும் வரம் தரல்லையே!

● அஞ்சிய நெஞ்சம்!



● தேடிய தெய்வம்!



● கேட்ட மந்திரம்!



● கொடாத வரம்!

❒ ரூ.100 பரிசு பெறுபவர் :
டி.கே.சுப்ரமண்யம்,
81, சன்னதித் தெரு,
திருப்பரங்குன்றம் - 625 005.

★ ரூ. 50 பரிசு பெறுபவர் :
கே.வி.ராமன், 50, தனலட்சுமி நகர்
பிரதான சாலை, ஸ்ரீராஜேஸ்வரி நகர்
மேற்கு பிரிவு, சேலையூர்,
சென்னை.

ஷாராஜ்

நன்றி

வெள்ளை படு உஷாரானது.

நெல்லி மரத்தடியில் அது பறித்த குழியில் படுத்து சுகமாகத் தூங்கிக் கொண்டிருக்கிறபோதும், அரவம் கேட்டால் விழித்துக் கொண்டு தலை உயர்த்தி காதுகள் விடைக்கப்பார்க்கும். தெரிந்தவர்கள் என்றால் வாலை அப்படியே சன்னமாக ஆட்டிவிட்டுத் தூக்கத்தைத் தொடர்வது. அறியாத முகமென்றால் அவ்வளவுதான். அடித்துப் பிடித்து எழுந்தோடி ஒளையோ ஒளை என்று ஒளைத்து, ஆளை அப்பால் இப்பால் நகர விடாமல் பண்ணிவிடும்.

ரோட்டில் ஒரு வாகனம் வரப் போகப் பாங்கில்லை. பின்னாலேயே துரத்திக் கொண்டு ஓடும்.

நாய்களுக்கு வாகனங்களிடம் அப்படி என்ன பகையோ! கார், பைக் எதுவானாலும் அதுகளின் வேகத்துக்குக் கூடவே ராஞ்சுகிறதுகள். சைக்கிளைப் பற்றி அவ்வளவாகக் கண்டு கொள்வதில்லை. (ஆனால், இவை எதுவாயினும் நிறுத்தப்பட்டிருந்தால், போய் மோந்து பார்த்துவிட்டு காலைத் தூக்கி மள்ளுவதில் பேதம் கிடையாது)

வெள்ளையும் அப்படித்தான்.

என்றாலும் அதனிடம் அதில் ஒரு வித்துவேசம் உண்டு.

ஊருக்குள் இத்தனை டி.வி.எஸ்ஸுகள் புழங்குகிறதே.... அத்தனையிலும் முருகானந்தனின் டி.வி.எஸ்ஸை சப்தம் கேட்டே அடையாளம் கண்டு பிடித்து விடும். சப்தம் முக்குத் திரும்பும்போதே 'க்கூங்..க்கூங்..' என்று கொனிந்து வாலை அதிவேகமாக ஆட்டிக் கொண்டு தெருவுக்கு ஓடி, அவரை எதிர்கொண்டு கூடவே துள்ளோட்டமாய் வரும்.

வண்டியை நிறுத்தினதும் சுற்றி வந்து குதியாட்டம் போடுவதென்ன, நெஞ்சுக்குத் தொத்துக்கால் போடுவதென்ன...

அவர் சித்தெ நேரமாவது அதனுடைய தலையை வருடிக் கொடுத்தால் தான் திருப்தி. அலுப்பாயிருந்து பொருட்படுத்தாமல் விட்டுவிட்டால் வாசப்படியில், நின்று கொண்டு ஏக்கமாக உள்ளே பார்த்துக் கொண்டிருக்கும்.

காத்தாட திண்ணையில் ஓய்வெடுக்கிறபோதும் அவரது காலடிக்கு வந்து விடும். முருகானந்தன் தலையிலிருந்து முதுகு முடிய நீவுவார். அதற்கு வாகாக உடம்பை நீட்டிக் குறுக்கிக் கொடுத்துக் கொண்டே கண்களை மூடிச் சொக்கும்.

"நாயிக்கு அப்படி சொகுசு கேக்குது" என்பாள் செங்கமலம். வெள்ளைக்கு தன்னைத்தான் என்று தெரியும். அதைக் காட்டிக் கொள்ள, அப்பவும் வேறு திணுசாய் வாலை ஆட்டிக் கொள்ளும்.

குட்டிக்கு வெள்ளைதான் குருதை. அதன் மேல் ஏறிக் கொண்டு 'டகுடிக்கு டகுடிக்கு' என்று குரலெழுப்பி காதுகளையும் பிடித்து முறுக்குவான்.



"ஓடு குரதே... ஓடு குரதே" என்றால் அதற்குத் தெரிவதில்லை. அப்படியே நிற்கும்.

இரண்டு பக்கமும் கால்களை ஊன்றி உந்தித் தள்ளுவான். வெள்ளை முரண்டு பண்ணும். அவனும் விடாமல் மேலும் முறுக்குவான். வலி பொறாமல் 'க்கை...க்கை..' எனக் கதறுமது.

"அடக் கட்டீடத்தீனிப் பையனே... அத இப்புடி வாதிக்கறயே... கடிச்சு கிடிச்சு வெச்சுருச்சுன்னா என்னத்துக்காகறது? குஞ்சாமணில இருவத்து நாலு ஊசி போடோணு அப்பறொ" என குட்டு மிரட்டு மிரட்டுவாள் செங்கமலம்.

பிறகுதான் அவனும் விடுவான்.

வெள்ளை உடனிருப்பது ஆம்பளைத் துணைக்குச் சமானம். அது நடந்து ரெண்டு, ரெண்டரை வருசமாயிற்று. அன்று முருகானந்தன் வீட்டில் இல்லை. சோலியாகப் போனவர் அசலூரில் ராத்தங்க வேண்டிய நிலைமை. "முடிஞ்சுதுன்னா ரவைக்கே வந்தர்றன். இல்லீன்னா நாளைக்கு சாவகாசமா வந்தாப் போதுமல்லொ" என்று ரெண்டு அர்த்தமாகச் சொல்லிக் கொண்டு போயிருந்தார்.

குழந்தைகள் நேரமே சாப்பிட்டுப் படுத்து விட்டன. பத்தரை வரை காத்திருந்து விட்டுத்தான், செங்கமலம் சாப்பிட்டு விட்டு மிச்சத்தில் தண்ணி ஊற்றினாள்.

அவளும் படுத்து, கண்ணசருகிற நேரம் வாசலில் வெள்ளையின் இடைவிடாத குரைப்பு. எதையாவது பார்த்து ஒளைப்பது

தானே என்று விட்டு விட்டாள்.

பின்பு அது வாசப்படிக்கே வந்து கதவைப் பிறாண்டியது. எப்பவும் அப்படிச் செய்யாதே, இப்போது என்ன ஆச்சு என்று அவள் வியப்போடுதான் எழுந்து வந்தாள். ராந்தலைத் தூண்டி விட்டுப் பார்த்தால் நொசலோரம் கரு கருவென ஊருகிறது.

அப்போது வீடு ஓலைச் சாளையாயிருந்தது. நொசலடியே இடுக்குகளில் தவளைகள் சிலது பதுங்கியிருக்கும். அதை இரையெடுக்க வந்தது போலும்.

வெள்ளை அது பற்றி எச்சரிக்கத்தான் கதவைப் பிறாண்டியிருக்கிறது என்பது புரிகிறபோதே, அவளுக்குப் பாம்பைக் கண்ட பதற்றமும் உண்டாகி விட்டது. பாம்பைத் தடுக்க வெள்ளை முனைந்தாலும் அது நொசலுக்குள் புகுந்து விட்டது.

பக்கத்து வீடுகளுக்குப் போய் ஆம்பளைகளைக் கூட்டி வரலாமென்றால் அவகாசமில்லை. இரவு நேரமானதால் இங்கிருந்தே சப்தம் போட்டுக் கூப்பிடவும் தயக்கம்.

முதலில் உள்ளே தூங்கிக் கொண்டிருக்கிற குழந்தைகளை எழுப்பிப் பாது காக்க வேண்டும் என்கிற அவதியில், ஓடிப் போய் பாயில் கிடக்கும் கலாவதியை உலுக்கி எழுப்பி விட்டுச் செங்கமலம் தொட்டிலுக்கு நகர்ந்தாள்.

குட்டி அப்போதும் கீழே படுக்காமல் தொட்டிலில்தான் படுத்துக் கொள்வான். அவனைத் தூக்கம் கலைக்காமல் எடுத்துக் கொண்டாள்.

அதற்குள் நொசலிலிருந்து ஒரு தவளை வீட்டுக்கு உள்ளே தவ்விக் கொண்டு வந்தது. அதனைத் தொடர்ந்து பாம்பும்.

கலாவதி அதைப் பார்த்து விட்டு, "அய்யோம்மா..." என வீறிட்டாள். அந்தச் சப்தத்தில் குட்டியும் திடுக்கிட்டு விழித்துக் கொண்டு அழுதான்.

வெளியே போகலாமென்றால் கதவுக்கு நேராக பாம்பு. ஒரு கையால் குட்டியை இடுப்பில் வைத்துக் கொண்டு மறு கையால் கலாவதியைத் தன்னுடன் அணைத்துக் கொண்டாள்.



"டாக்டர்! என் கணவர் தனக்குத்தானே பேசிக்கிறாரு..."
"ஏன், அப்படிப் பேசறதுக்குக் கூட அவருக்கு உரிமை கிடையாதா...?"
– வி. சாரதி டேச்சு

பாம்பு படமெடுத்து நிற்கவும்தான் நாகன் என்பது நிச்சயமானது. அது தவளையையும் இவர்களையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தது. கலாவதி பயத்தில் குரலெடுத்து அழத் தொடங்கி விட்டாள்.

வெள்ளை உடனே வீட்டுக்குள் பாய்ந்து வந்து விட்டது.

பாம்புக்கும் அதற்கும் ஆக்ரோஷமான சண்டை. வெள்ளை பாம்பைக் கடிக்கத் தோது பார்ப்பதும், பாம்பு அதைக் கொத்த முயல்வதுமாக.

"அய்யோ... வேண்டாம் வெள்ள.. பாம்பு கொத்திரும். அக்கட்டால போயிரு" என்று கலாவதி கத்தினாள்.

வெள்ளை விட்டு விலகவில்லை. ஓரிரு பாய்ச்சல்களின் பிசகல்களை அடுத்து சரியாகப் பாம்பின் கழுத்தைக் கவ்வி விட்டது. கண்ணிமைக்கிற கணத்தில் ஒரு உதறு உதறியதுதான் தெரியும். மறுகணம் பாம்பின் தலை துண்டாகிக் கிடந்தது.

கூச்சல் கேட்டு விழிப்புற்றிருந்த அண்டை வீட்டுக்காரர்கள் அதற்குப் பிறகுதான் வந்து சேர்ந்தனர். வெள்ளையின் செயல்களைக் கேட்டு அவர்களுக்குமே ஆச்சரியம்.

மறுநாள் ஊர் திரும்பிய முருகானந்தனும், "மூணு உசுருகளக் காப்பாத்திக் குடுத்துட்ட" என்று வெள்ளையை அணைத்து நெகிழ்ந்தார்.

பின்பும் வெள்ளையின் இயல்புகளில் எந்த மாற்றமும் இல்லை. யாரையும் கடிக்கவோ, ஊடுமுட்டவோ செய்யாது. திண்ணையில் கறியே வைத்து விட்டு அப்பால் போனாலும் வாய் வைக்காது. அதற்கென உள்ள பழைய பீங்கான் வட்டலில் உணவிட்டால்தான் தின்னும்.

தாமத இரவுகளில் தெரு வழியே அதை மீறி நடந்து போக முடியாததுதான் மற்றவர்களுக்குத் தொல்லை. இவர்கள் இல்லாத சமயம், அன்னியர் எவரும் வீட்டுக்கு வெளியே உள்ள எந்தவொரு சாதாரணப் பொருளையும் எடுத்து விட்டால் பாய்ந்து விடும். நாய்க் காவல் என்பதே அதுதானே!

சாமத்து நடமாடிகள் சிலர் வெள்ளையால் அவதிப்பட்டு, அந்த எரிச்சலில் குச்சியிலோ கல்லெறிந்தோ ஓரிரு தடவை அடித்திருக்கிறார்கள். சிறிய அளவில் காயம்பட்டு கால் நொண்டிக் கொண்டிருந்தது.

அப்போதே செங்கமலம், "எந்தக் கொள்ளையில போறவன் நாய அடிச்சானோ... அவன் நாசமாப் போக; நெருமோனமாப் போக" என்று வாய் நிறைய சபித்தாள்.

நொண்டிய காலுக்கு முட்டிக்குளங்கரை எண்ணெய் போட்டு நீவிக்கட்டி விடவும் செய்தாள். சீக்கிரமே குணமாகி விட்டது.

இப்போது பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன்பு மறுபடியும் உச்சந்தலையில் காதோரமாக காயம். அது அரிவாளால் வெட்டியது. ஓங்கியவுடன் வெள்ளை விலகியதோ குறிதான் தவறியதோ, கழுத்து துண்டாகாமல் தப்பித்து முனை மட்டும் ஆழமாக இறங்கியிருந்தது.

வெடியக்காலம் கதவு திறந்ததுமே வாசப்படியில் தலைவைத்து, ரத்தம் ஒழுக அனத்திக் கொண்டிருக்கிறது வெள்ளை.

"சாமி கடவுளே..!" என்று செங்கமலம் பதறினாள். "......... மக்கொ! வாயில்லாத சீவன்னு பாக்காம வெட்டியிருக்கறானுகளே! வெட்டுன கையி வெளங்காமப் போகோணும், மாரியாத்தா..!"

முருகானந்தனை எழுப்பி, ரத்தப் போக்கை நிறுத்த துணியால் கட்டப்பட்டது.

"கருப்பராயா...! உனக்கு கோளியறுத்துப் பொங்கலு வெக்கறன். நாய வெட்டுனவன் ஆருன்னு, எண்ணி எட்டு நாளைக்குள்ள எனக்கு அறிகுறி காட்டோணும்" என்று செங்கமலம் நேர்ந்து கொண்டாள்.

காயத்துக்கு மருந்திட இங்கே மிருக ஆசுபத்திரியும் இல்லை. முருகானந்தனும் கிருஷ்ணசாமியண்ணனும் வெள்ளையை டிவிஎஸ்ஸில் எடுத்துக் கொண்டு பொள்ளாச்சிக்குப் போய் சிகிச்சை செய்து வந்தார்கள்.

இம்முறை வெள்ளைக்குக் குணமாகவில்லை. தினசரி மருந்து வைத்ததுமே காயம் ஆறாமல் சீழ் பிடித்துக் கொண்டிருந்தது. ஓடித் திரிதல் முடக்கம், சரிவர உணவு கொள்ளாமல், உடல் மெலிவு என்றானது வெள்ளை.

இந்த நிலையிலும் அன்னிய வரவுகளைப் படுத்தபடியேவாவது உறுமலால் எதிர்த்தது; தான் விரும்பாத அத்துமீறல்கள் நிகழ்ந்தால் ஓலைத்து மிரட்டியது; முருகானந்தனின் டிவிஎஸ்ஸு சப்தத்துக்குத் தடுமாறி எழுந்து நின்று, கொனிந்து வரவேற்றது.

"தலைவரோட சம்சாரத்தைக்கூட ஏன் கைது பண்ணிட்டாங்க?"
"''புலி'' மார்க் சீயக்காய்தூள் போட்டுத் தலை குளிச்சாங்களாம்?"
– ஒழுவெட்டி பாரதி ப்ரியன்



புண் மிகவும் பெரிதாயிற்று. வெள்ளை தாங்க முடியாமல் ஓலமிடும்; நிலைகொள்ளாமல் துடித்துப் புரளும்.

முருகானந்தன் திண்ணையில் சாய்ந்தபடி அதை ஆற்றாமையோடு பார்த்துக் கொண்டிருப்பார்.

ஊரில் நாய்த் தொல்லைகள் அதிகமாகி விட்டதென்று நாய் பிடிக்கும் வண்டி வந்தது. அதைக் 'கண்டதிலேயே பல நாய்கள் சந்துபொந்துகளில் முட்டி ஒளியலாயின. சிலவற்றை அதன் வளர்ப்பாளர்கள் வீட்டுக்குள் கட்டி வைத்து காத்துக் கொண்டனர்.

முருகானந்தன் நாய் பிடிப்பவர்களை வீட்டுக்கு அழைத்து வந்தார். ○

ரமணா

'தீனா' என்றொரு சராசரி படமெடுத்த இயக்குனரா இப்படியொரு படம் தந்திருக்கிறார்! - ரமணா படம் பார்த்துவிட்டு வெளியே வருகிற ரசிகர்கள் இப்படி வியக்கிறார்கள்.

'முதல்வன்', 'இந்தியன்' படங்களின் சாயல் கொண்ட கதை என்று சொல்வதைவிட, சமூக அக்கறை வழிந்தோடும் கதை என்பதே சரி.

கடமையுணர்ச்சி மிக்க, கல்லூரிப் பேராசிரியர் ரமணா, ஊழல் இல்லாத மாநிலத்தை உருவாக்க மாணவர் சக்தியைப் பயன்படுத்துகிறார். சில அரசுத் துறைகளைத் தேர்ந்தெடுத்து, அங்கே லஞ்ச வெள்ளத்தில் சொகுசாக நீச்சலடிக்கும் பதினைந்து அதிகாரிகளைக் கடத்துகிறார். அதில் அதிகம் லஞ்சம் வாங்கிய நம்பர் ஒன் விஷச் செடியை மட்டும் வேரோடு களைந்து (கொன்று) விட்டு, மற்றவர்களை விடுதலை செய்கிறார். இது போதாதா! லஞ்சம் வாங்குபவர்களை மரண பயம் நடு நடுங்க வைக்கிறது. வாங்கிய லஞ்சப் பணத்தை திரும்பக் கொடுக்கிறார்கள். முகம் காட்டாத ரமணாவின் ஆபரேஷனுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு பெருகுகிறது. இறுதியில் மரணத்தின் நிழலில் அவரது முகம் வெளிச்சத்திற்கு வருகிறபோது கனத்துப் போகும் இதயம், தியேட்டரை விட்டு எழுந்து வர மறுக்கிறது.

படம் பார்க்கிற ரசிகர்கள் கூட்டத்தில் லஞ்சம் வாங்குகிறவர்களோ, கொடுக்கிறவர்களோ இருந்தால், அவர்களின் உள்ளத்தில் உறுத்தல் விதையை விதைக்கிறது படம்.

ரசிகனின் பார்வையில் கிஞ்சித்தும் குழப்பமோ, சோர்வோ, சலிப்போ ஏற்படுத்தாத திரைக்கதை. "சர்க்கரை வியாதி வந்துட்டா நம்ம காலா இருந்தால்கூட வெட்டி எடுத்திடுறது இல்லையா" என்பது போன்ற உயிரும் உணர்வும் நிரம்பித் ததும்பும் உரையாடல், திரைக்கதையின் டெம்போவை இறுதிவரை காப்பாற்றும் படத்தொகுப்பு, உணர்ச்சியின் விழிம்புக்கு இழுத்து வரும் பின்னணி இசை, ஆகிய இந்த நான்கு அம்சங்களுக்கும், மாநில விருதென்ன! தேசிய விருதே கிடைத்தாலும் வியப்பதற்கில்லை.

டூயட் பாடாமல், பக்கம் பக்கமாய் வசனம் பேசாமல் பேராசிரியர் ரமணாவாக, மரியாதைக்குரிய பாத்திரத்தில் கச்சிதமாய்ப் பொருந்தி, 'கதை நாயகனாக' அடக்கி வாசித்திருக்கும் விஜயகாந்துக்கு இது ஒரு திருப்புமுனைப்படம்.

நாயகன்தான் என்றில்லை, கான்ஸ்டபிள் சரவணன் (யூகிசேது), தாதா பத்ரிநாராயணன் (விஜயன்), தேவகி (ஆஷிமா) போன்ற துணைக் கதாபாத்திரங்களுக்குப் பொருத்தமான நடிகர்கள் தேர்வும், அவர்கள் பயன்படுத்தப் பட்டிருக்கும் விதமும் பக்கா.

கதையின் போக்கையும்,



ரமணா பாத்திரப் படைப்பையும் கௌரவப் படுத்திவிடுகிறது படத்தின் முடிவு. லாஜிக் கவலையற்ற சினிமாத்தனம் ஒரு சில காட்சிகளில் எட்டிப் பார்த்தாலும், இயக்குனர் ஏ.ஆர். முருகதாஸ் சமூகத்தின் மீது கொண்டுள்ள அக்கறைக்கு ஒரு இராணுவ வணக்கம் வைக்கலாம்.

- விஷ்ணுவல்தாசன்

○ பெயில் ○ ஜஸ்ட் பாஸ் ○ ஆவரேஜ்
● ஆபவ் ஆவரேஜ் ○ டிஸ்டிங்ஷன்

சிவகாமியின் சபதம்

இருபத்தைந்தாம் அத்தியாயம்

வேஷதாரி

வலது கால் எலும்பு முறிந்து எழுந்திருக்க முடியாதவராய்த் தரையில் விழுந்து கிடந்த ஆயனரண்டையில் வந்து புலிகேசிச் சக்கரவர்த்தி உட்கார்ந்தார்.

"மகா சிற்பியே! மன்னிக்க வேண்டும். உம்முடைய அற்புதச் சிலை வடிவங்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் இவ்வளவு விரைந்து வந்தேன். நீர் மூர்ச்சை தெளியும் வரையில் கூடக் காத்திராமல், உம்மைக் குதிரையின் மேல் வைத்துக் கட்டிக் கொணர்ந்தேன். அப்படியும் உம்முடைய சிலை சிலவற்றிற்கு ஆபத்து வந்து விட்டது. மன்னியுங்கள். ஏதோ மீதமுள்ளவையாவது பிழைத்தனவே என்று சந்தோஷப்படுங்கள்!" என்றார் புலிகேசி மன்னர்.

ஆயனர் அவருடைய முகத்தை ஆவலுடன் உற்றுப் பார்த்தார். அவருடைய உள்ளத்தில் ஏதோ ஒரு சந்தேகத்தின் நிழல் படர்ந்திருந்தது. இதென்ன விந்தை? வாதாபிச் சக்கரவர்த்தியா இவ்வளவு நன்றாகத் தமிழ் பேசுகிறார்? கொடுமைக்கும் குரூரத்துக்கும் பெயர் போன புலிகேசி மன்னரா தம் அருகில் உட்கார்ந்து இவ்வளவு சாவதானமாக வார்த்தையாடுகிறார்?

இப்படிப்பட்ட நல்ல சுபாவமுடைய மன்னர் சிற்பிகளைக் காலையும் கையையும் வெட்டிப் போடும்படி கட்டளையிட்டிருப்பாரா? சிலைகளையும் சிற்பங்களையும் உடைத்துப் போட ஆக்ஞையிட்டிருப்பாரா? - அந்தக் கடுவம் பூனை முகத்துத் தளபதி அப்போது சொன்னது உண்மையா? அல்லது இனிய தமிழ் பாஷையில் இதோ சக்கரவர்த்தியே பேசுவது உண்மையா?

அமரர் கல்கி

சட்டென்று ஆயனருக்குச் சிவகாமியின் நினைவு வந்தது! ஐயோ! அவள் என்ன ஆனாள்? மற்றதையெல்லாம் மறந்து, "பிரபு! என் குமாரி சிவகாமியை உங்கள் வீரர்கள் பிடித்துக் கொண்டு போனார்கள். ஐயோ! அவளைக் காப்பாற்றுங்கள். சிவகாமியை மறந்துவிட்டு இந்தப் பாவி சிலைகளைப்



பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேனே?" என்று ஆயனர் அலறினார்.

அப்போது புலிகேசி, "ஆயனரே! கடவுள் அருளால் உம் மகளுக்கு ஆபத்து ஒன்றும் வராது. பத்திரமாக அவள் வாதாபி போய்ச் சேருவாள்!" என்றார்.

"ஐயோ! என்ன சொன்னீர்கள்? சிவகாமி வாதாபிக்குப் போகிறாளா? அப்படியானால் இந்தப் பாவி இங்கே எதற்காக இருக்கிறேன்? என்னையும் கொண்டு போய் விடுங்கள்!"

"அப்படித்தான் முதலில் எண்ணினேன். ஆனால், உம்முடைய காலை ஒடித்துக்கொண்டு விட்டீரே? இந்த நிலைமையில் சிறிது நகர்ந்தாலும் உமது உயிருக்கு ஆபத்து வருமே...!"

"பிரபு! அப்படியானால், என் உயிரைப் பற்றித் தங்களுக்குக் கவலை இருந்தால், என் மகளை இங்கே அனுப்பி வையுங்கள்!"

"அது இயலாத காரியம்...!"

"ஆ! இதென்ன தாங்களும் ஒரு சக்கரவர்த்தியா? சிற்பிகளின் கால் கையை வெட்டவும், சிலைகளை உடைக்கவும், கன்னிப் பெண்களைச் சிறைப் பிடிக்கவும் கட்டளை போடத்தான் உங்களால் முடியுமா?" என்று ஆயனர் ஆவேசமான குரலில் கத்தினார்.

அப்போது புலிகேசி, "ஆயனரே! உம்மிடம் ஒரு முக்கிய விஷயம் சொல்ல வேண்டும். தயவு செய்து உம்முடைய சகோதரியை உள்ளே போகச் சொல்லும்!" என்று சாந்தமான குரலில் கூறி, பக்கத்தில் சொல்ல முடியாத மனக் குழப்பத்தையும் பீதியையும் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டு நின்ற சிவகாமியின் அத்தையைச் சுட்டிக் காட்டினார்.

"பிரபு! சொல்லுங்கள்! என் சகோதரியின் காது செவிடு! இடி இடித்தாலும் கேளாது!"

"இருந்தாலும், அவளைப் போகச் சொல்லும்!" என்றார் புலிகேசி.

ஆயனர் சமிக்ஞை காட்ட, அவருடைய சகோதரி முன்னைவிட அதிகக் குழப்பத்துடன் உட்சென்றாள்.

புலிகேசி, "ஆயனரே! நான் சொல்வதை நன்றாய் மனத்தில் வாங்கிக் கொண்டு விடை சொல்லும்; உம்முடைய குமாரி இப்போது வாதாபியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறாள். ஒரு வேளை நான் விரைந்து வேகமாகச் சென்றால், அவளைக் கண்டுபிடிக்கலாம். கண்டுபிடித்து, இவ்விடம் அனுப்பி வைத்தாலும் வைக்கலாம். ஆனால், இன்னொரு விஷயத்தையும் யோசியும், இதோ உம்முடைய அற்புத தெய்வீகச் சிலைகளை உடைத்தது போல், மாமல்லபுரத்து மகா சிற்பங்களையும் உடைத்தெறிவதற்காக ஒரு பெரும் படை போயிருக்கிறது. நான் போனால் அந்தப் படையைத் தடுக்கலாம். உம்முடைய மகளைக் கொண்டு வருவதற்காகப் போகட்டுமா? அல்லது மாமல்லபுரத்துச் சிற்பங்களைக் காப்பாற்றுவதற்காகப் போகட்டுமா?" என்று கேட்டபோது, ஆயனரின் உள்ளத்தில் ஏற்கெனவே நிழல் போல் தோன்றிய சந்தேகம் வலுப்பட்டது.

இவ்வளவு நன்றாகத் தமிழ் பாஷை பேசுகிறவர் புலிகேசிச் சக்கரவர்த்தி தானா? அவரை நன்றாக உற்றுப் பார்த்து, "ஐயா! தாங்கள்... தாங்கள்...!" என்று தயங்கினார்.

புலிகேசிச் சக்கரவர்த்தி உடனே தமது தலையிலிருந்த கிரீடத்தைக் கழற்றிக் கீழே வைத்தார்.

"ஆ! நாகநந்தி அடிகளா?" என்ற வார்த்தைகள் ஆயனரின் வாயிலிருந்து வெளிவந்தன.

"ஆம்; ஆயனரே! அந்த ஏழை பிக்ஷுவேதான்!"

"சுவாமி! இதென்ன கோலம்?"

"ஆம்; சிநேகிதர்களுக்கு உதவுவதற்காக இந்தக் கோலம் பூண்டேன். சமயத்தில் உதவியும் செய்ய முடிந்தது!"

"ஆ! இது என்ன அதிசயமான உருவ ஒற்றுமை? தத்ரூபமாய் அப்படியே இருக்கிறதே! சுவாமி, தாங்கள் யார்?

ஒருவேளை...!''

''இல்லை, ஆயனரே இல்லை! வாதாபி புலிகேசிச் சக்கரவர்த்தியும் நாகநந்தி பிக்ஷுவும் ஒருவரல்ல. ஏதோ ஓர் அற்புதமான சிருஷ்டி மர்மத்தினால் எங்கள் இருவருக்கும் கடவுள் அத்தகைய உருவ உற்றுமையை அளித்திருக்கிறார். அதைப் பயன்படுத்தி, பரத கண்டத்தின் பாக்கியத்தினால் பிறந்த மகா சிற்பியின் உயிரைக் காப்பாற்றினேன்.''

''ஆ! சுவாமி! என் உயிரைக் காப்பாற்றி என்ன பயன்? என் மகள்... என் மகள் சிவகாமி...!''

''ஆயனரே! நீரே சொல்லும், நான் என்ன செய்யட்டும் என்று? உம்முடைய மகளைத் தேடிக் கொண்டு போகட்டுமா? அல்லது மாமல்லபுரத்துக்குப் போகட்டுமா?''

ஆயனர் வேதனை ததும்பிய குரலில், ''சுவாமி! என் மகளைக் கடவுள் காப்பாற்றுவார். நீங்கள் மாமல்லபுரத்துக்குப் போங்கள்! உடனே புறப்பட்டுப் போங்கள்!'' என்று கதறினார். அவரைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வேஷதாரி பிக்ஷு அந்தச் சிற்பக் கிருகத்திலிருந்து வெளியே சென்றார்.

உட்புறத்திலிருந்து சிவகாமியின் அத்தை தயங்கித் தயங்கி வந்து ஆயனர் அண்டை உட்கார்ந்து கொண்டாள். ''தம்பி! உனக்கு என்ன உடம்பு?'' என்று கேட்டாள். ஆயனர் அதற்கு மறுமொழி சொல்லவில்லை. அத்தை திடீரென்று பதற்றத்துடன் ''குழந்தை எங்கே? சிவகாமி எங்கே?'' என்று கேட்டாள்.

ஆயனர் நிமிர்ந்து உட்கார்ந்து, அந்தச் சிற்ப மண்டபமே அதிரும்படியான உரத்த குரலில், ''அக்கா! சிவகாமி எங்கே? என் மகள் சிவகாமி எங்கே?'' என்று கேட்டார். கேட்டுவிட்டுத் தலை குப்புறப்படுத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதார்.

ஆயனருடைய குரலைக் கேட்டுக் கொல்லைப்புறத்திலிருந்து ரதியும் சுகரும் உள்ளே ஓடி வந்தனர். ஆயனர் அழுவதைப் பார்த்துவிட்டு அந்தப் பிராணிகள் சிலைகளைப் போல் அசையாமல் நின்றன.

இருபத்து ஆறாம் அத்தியாயம்

கர்வ பங்கம்

காஞ்சி அரண்மனையின் அந்தரங்க மந்திராலோசனை மண்டபத்தில் மகேந்திர பல்லவர் வீற்றிருந்தார். அவருக்கு எதிரே சேனாதிபதி கலிப்பகை, முதன் மந்திரி சாரங்கதேவர், முதல் அமைச்சர் ரணதீரர், ஒற்றர் தலைவன் சத்ருக்னன், குண்டோதரன் ஆகியவர்கள் நின்றார்கள்.

மகேந்திர பல்லவருடைய முகம் பிரகாசமாய்ப் புன்னகை மலர்ந்து விளங்கிற்று.

''குண்டோதரா! நீயே உன் கண்ணால் பார்த்தாயா? உண்மையாகவே மாமல்லபுரத்திலிருந்து சளுக்கர் படைகள் திரும்பிப் போயினவா? சிற்பங்களுக்கு ஒரு கேடும் நேரவில்லையே? நிச்சயந்தானே?'' என்று கேட்டார்.

''ஆம், பல்லவேந்திரா! எனக்கு அப்போது ஏற்பட்ட ஆச்சரியத்தை என்னவென்று சொல்வேன்? சளுக்க ராட்சதர்கள் இரண்டாயிரம் பேர் கைகளில் கடப்பாரைகளையும் இரும்பு உலக்கைகளையும் எடுத்துக் கொண்டு திடுதிடுவென்று ஓடி வந்தார்கள். ஐயோ! ஆயிரமாயிரம் சிற்பிகள் அரும்பாடுபட்டு வேலை செய்த ஜீவ வடிவங்கள் எல்லாம் ஒரு நொடியில் நாசமாகப் போகின்றனவே என்று என் உள்ளம்



பதைத்தது. தாங்கள் அந்தக் கோரக் காட்சியைப் பார்க்கும்போது தங்களுடைய மனம் என்ன பாடுபடும் என்று நினைத்துக்கொண்டேன். அடுத்த நிமிஷம் எங்கிருந்தோ திடீரென்று அந்தப் பாறை உச்சி மீது புலிகேசிச் சக்கரவர்த்தி தோன்றினார். கம்பீரமாகக் கையினால் சமிக்ஞை செய்தார். அவ்வளவுதான்! ராட்சதர்களைப் போல் பயங்கரமாய் ஊளையிட்டுக் கொண்டு ஓடி வந்த சளுக்கர்கள் ஸ்தம்பித்து விட்டார்கள். அவ்விடத்தில் அதே நேரத்தில் வாதாபிச் சக்கரவர்த்தியை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அவர் இட்ட கட்டளையை அவரே மாற்றிச் சிற்பங்களை அழிக்காமல் திரும்பிப் போகும்படி கட்டளையிடுவார் என்றும் எதிர்பார்க்கவில்லை. பிரபு! நானே அந்த அதிசயத்தினால் சிறிது நேரம் சிலையாகப் போய்விட்டேன். எல்லாரும் அவ்விடம் விட்டுப் போன பிறகுதான் எனக்குச் சுய நினைவு வந்தது. உடனே புறப்பட்டு ஓடி வந்தேன்!" என்றான் குண்டோதரன்.

சாரங்க தேவர், "பிரபு! தங்களுடைய மாயாஜால வித்தைகளுக்கு எல்லையே கிடையாது போல் இருக்கிறதே! சளுக்க சக்கரவர்த்தி போட்ட கட்டளையை அவரே ஓடி வந்து மாற்றும்படி எப்படிச் செய்தீர்கள்?" என்று கேட்டார்.

''ஆகா! அந்த மூர்க்கனுடைய மனத்தை - கலை உணர்ச்சி என்பதே இல்லாத கசடனுடைய மனத்தை மாற்ற முடியுமா? பிரம்மாவினால்கூட முடியாது!'' என்றார் மகேந்திரர்.

"அப்படியானால் இந்த அதிசயம் எப்படி நடந்தது. பல்லவேந்திரா! மாமல்லபுரத்தை எப்படிக் காப்பாற்றினீர்கள்?" என்று முதல் அமைச்சர் ரணதீர பல்லவராயர் கேட்டார்.

"சிறு துரும்பும் ஒரு சமயம் உதவும் என்று பழமொழி இருக்கிறதல்லவா? புத்த பிக்ஷுக்களினாலும் பிரயோஜனம் உண்டு என்று நான் எண்ணியது சரியாய்ப் போயிற்று!"

"பிரபு! புதிர் போடுகிறீர்கள். ஒன்றும் விளங்கவில்லை!"

"நாகநந்தி பிக்ஷுவைச் சிறைப்படுத்தி வைத்திருந்தேனல்லவா? இந்த மாதிரி ஒரு சந்தர்ப்பம் நேரலாம் என்று எண்ணித்தான் வைத்திருந்தேன். புலிகேசி இங்கிருந்து போகுமுன் கடைசியாக நாகநந்தி பிக்ஷுவைத்தான் யாசித்தான். ஒருகணம் என் மனங்கூடச் சலித்துவிட்டது. ஒரு வழியாக நாகநந்தியையும் புலிகேசியுடன் கூட்டி அனுப்பி விடலாமா என்று எண்ணினேன். நல்லவேளையாக அப்படிச் செய்யாமல் அவரை நிறுத்தி வைத்துக் கொண்டேன். அதனாலேதான் இப்போது மாமல்லபுரம் பிழைத்தது!"

சத்ருக்னன், ''தங்களுடைய கட்டளையின் கருத்து எனக்கு இப்போதுதான் புரிகிறது. 'சுரங்க வாசலைத் திறந்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திரு! வெளியில் யார் போனாலும் அதிசயப்படாதே! யோக நிஷ்டையிலேயே இருந்து விடு!' என்று ஆக்ஞையிட்ட சமயம் ஒன்றுமே விளங்கவில்லை. நாகநந்தி வெளியில் வந்தபோது எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஓடிப் போய் அந்தக் கள்ள பிக்ஷுவின் கழுத்தைப் பிடித்து நெறித்து விடலாமா என்று ஒருகணம் தோன்றியது. தங்களுடைய கண்டிப்பான கட்டளையை எண்ணிச் சும்மா இருந்தேன்'' என்றான்.

சேனாதிபதி கலிப்பகை, "எங்களுக்கெல்லாம் இன்னமும் ஒன்றும் புரியவில்லை! நாகநந்தி பிக்ஷு போய்ப் புலிகேசியை அழைத்துக்கொண்டு திரும்பி வந்து மாமல்லபுரத்தைக் காப்பாற்றியதாகவா சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டார்.

''நாகநந்தி புலிகேசியை அழைத்து வரவில்லை; நாகநந்தியே புலிகேசியாகி விட்டார்!'' என்று மகேந்திரவர்மர் சொன்னதும் ஏக காலத்தில் 'ஆ' என்ற வியப்பொலி கிளம்பியது.

''உங்களுக்கெல்லாம் முகத்தில் கண்கள் இருக்கின்றன. ஆனால், இருந்தும் என்ன பிரயோஜனம்? கண்களை நீங்கள் உபயோகிப்பதில்லை. நாகநந்தியின் முகத்துக்கும் புலிகேசியின் முகத்துக்கும் உள்ள ஒற்றுமையை நீங்கள் யாரும்



கவனிக்கவில்லையா? நாகநந்திதான் புலிகேசியோ என்றுகூட ஒரு சமயம் நான் சந்தேகித்தேன். இல்லையென்று பிற்பாடு தெரிந்தது. இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் உபயோகப்படுவார் என்றுதான் நாகநந்தியைப் பத்திரமாய்ச் சிறைப்படுத்தி வைத்திருந்தேன். புலிகேசி இங்கே வந்திருந்தபோது அவருடைய கிரீடத்தையும் ஆபரணங்களையும் போல் நம் பொற் கொல்லர்களைக் கொண்டு செய்வித்திருந்தேன். அவற்றுடன் நேற்று அவரை அனுப்பினேன். நேரே மாமல்லபுரம் போகச் சொன்னேன்."

"நாகநந்தி அவ்வளவு சுலபமாகச் சம்மதித்து விட்டாரா, பிரபு?"

"பிக்ஷுவானாலும், ஒற்றனானாலும் உயிருக்கும் விடுதலைக்கும் ஆசைப்படாதவர் யார்?" என்றார் மகேந்திரர்.

"ஆனால், அந்தக் கபட வேஷதாரியிடம் தாங்கள் எப்படி நம்பிக்கை வைத்து வெளியே அனுப்பினீர்கள்?"

"ஆ! நாகநந்தி மனிதனேயல்ல; மனித உருவத்திலுள்ள அரக்கன்; விஷம் ஏற்றிய கத்தியை உபயோகிக்கும் பாதகன்! ஆனாலும் அவன் கலைஞன்! அவன் உள்ளத்தில் கலைப் பிரேமை இருப்பதை நான் அறிவேன். நிச்சயமாய் மாமல்லபுரத்தைக் காப்பாற்றுவான் என்றும் எனக்குத் தெரியும். ஆகையினால், அவனை அனுப்பினேன். ஆயனரின் சிற்பக் கிருகத்தையும் காப்பாற்றி விட்டிருந்தால் அப்புறம் அவன் என்னவாய்ப் போனாலும் கவலை இல்லை!"

இந்த விவரங்களையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த முதன் மந்திரி முதலியவர்கள் அளவிறந்த வியப்பில் ஆழ்ந்து மௌனமாக நின்று கொண்டிருந்தார்கள்.

அந்த மௌனத்தைப் பிளந்து கொண்டு வெளியே ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டது. காவலன் ஒருவன் உள்ளே ஓடி வந்து தண்டம் சமர்ப்பித்து விட்டு, "பிரபு! மன்னிக்க வேண்டும். கண்ணபிரான் பெண்சாதி கமலி வந்து தங்களை உடனே காண வேண்டும் என்கிறாள். நாங்கள் தடுத்ததற்கு அழுது கூக்குரல் போடுகிறாள்!" என்றான். சக்கரவர்த்தியின் முகத்தில் சிறிது கலக்கத்தின் அறிகுறி தென்பட்டது. "வரச் சொல்!" என்று உத்தரவிட்டார்.

அடுத்த நிமிஷம் கமலி தலைவிரி கோலமாய் உள்ளே ஓடி வந்து "பல்லவேந்திரா! இந்தச் சண்டாளியை மன்னிக்க வேண்டும். பெரிய துரோகம் செய்து விட்டேன்" என்று கதறிச் சக்கரவர்த்தியின் காலில் விழுந்தாள்.

அன்று காலையில் கமலியின் மாமனார் அசுவபாலர் கமலியைப் பார்த்து, "எங்கே அம்மா, ஆயனரையும் அவர் மகளையும் காணோம்?" என்று கேட்டார்.

கமலி சாதுரியமாக, "அவர்களுக்கு இந்த வீட்டில் பொழுது போகவில்லையாம். இந்தப் பச்சைக் குழந்தையின் விஷமம் பொறுக்கவில்லையாம். ஊரிலுள்ள கோயில்களையெல்லாம் பார்த்து வரப் போயிருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் சிற்பம் சிலைகள் என்றால் பைத்தியமாயிற்றே?" என்றாள்.

"நல்லவேளை! கோட்டைக்கு வெளியே போக வேண்டும் என்று சொன்னார்களே? போயிருந்தால் என்ன கதி ஆகியிருக்கும் தெரியுமா? அந்தப் படுபாவி புலிகேசியின் ஆட்கள் ஊர்களையெல்லாம் கொளுத்துகிறார்களாம். சிற்பிகளையெல்லாம் காலையும் கையையும் வெட்டுகிறார்களாம். கன்னிப் பெண்களையெல்லாம் கவர்ந்து சிறைப்படுத்திக் கொண்டு போகிறார்களாம்..."

இதைக் கேட்டதும் கமலி, "ஐயோ!" என்று அலறினாள். அலறிக் கொண்டே அசுவபாலரிடம் விஷயத்தைக் கூறினாள். அவர் கமலியை மனங்கொண்டவரையில் திட்டிவிட்டு, "ஓடு! ஓடிப் போய்ச் சக்கரவர்த்தியிடம் நடந்ததைச் சொல்லு!" என்றார். அதன்படியேதான்

கமலி சக்கரவர்த்தியிடம் ஓடி வந்தாள்.

விம்மலுக்கும் அழுகைக்கும் இடையே தட்டுத் தடுமாறிக் கமலி விஷயம் இன்னதென்று சொல்லி முடித்த போது, சக்கரவர்த்தியின் முகபாவம் அடியோடு மாறிப் போயிருந்தது. கர்வத்துடன் கூடிய புன்னகைக்கு மாறாகச் சொல்ல முடியாத வேதனை இப்போது அம்முகத்தில் குடி கொண்டிருந்தது. சத்ருக்னனைப் பார்த்து, "இவள் சொல்வது உண்மையா, சத்ருக்னா! உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

சத்ருக்னன் நடுங்கிய குரலில், "ஆம், பிரபு! நாகநந்தி போய்ச் சற்று நேரத்துக்கெல்லாம் ஓர் ஆடவரும் ஒரு பெண்ணும் வெளிச் சென்றார்கள். ஆயனர், சிவகாமி மாதிரி தோன்றியது. யார் வெளியே போனாலும் அதிசயப்பட வேண்டாம் என்று தாங்கள் ஆக்ஞையிட்டிருந்தபடியால் பேசாமல் உட்கார்ந்திருந்தேன்" என்றான்.

மகேந்திரர், முதன் மந்திரி முதலியவர்களை நோக்கி, "சற்று முன்னால் என்னுடைய சாமர்த்தியத்தைப் பற்றி நானே கர்வப்பட்டுக் கொண்டிருந்தேனல்லவா? கடவுள் கர்வ பங்கம் செய்து விட்டார். சிவகாமியைப் பறிகொடுத்து விட்டு மாமல்லனுடைய முகத்தில் நான் விழிக்க முடியாது. சேனாதிபதி! உடனே படைகளைத் திரட்டுங்கள். ஒரு முகூர்த்தப்பொழுதில் நம் படைகள் வடக்குக் கோட்டை வாசலில் ஆயத்தமாயிருக்க வேண்டும்" என்றார்.

(தொடரும்)

அருள்வாக்கு

ஒரு விறகுக் கட்டு இருந்து, அதைச் சுற்றிப் போட்ட கயிற்றுக் கட்டு முடிச்சு அவிழ்க்க முடியாமல் ஆனால் என்ன செய்வார்கள் தெரியுமா? கட்டு தளர்வதற்கு, முதலில் கட்டிய கயிற்றை விட இறுக்கமாக அதை இன்னொரு கட்டுப் போட்ட மாதிரி சுற்றி நெருக்கிப் பிடித்துக் கொள்வார்கள். 'கட்டுப் போட்ட மாதிரி' தானே ஒழிய, முடிச்சுப் போட்டுக் கட்டியே விட மாட்டார்கள். இந்த இறுக்கத்தில் முதலில் முடிச்சுப் போட்டுக் கட்டின கட்டு லூஸாகி விடும். அதை எடுத்துப் போட்டு விடலாம். அப்புறம், கட்டின மாதிரி, ஆனால் கட்டியே விடாமல் சுற்றியிருக்கிற இன்னொரு கயிற்றையும் எடுத்து விட்டால் விறகுகள் கட்டற்று விடுபட்டு விடும். இதே மாதிரி மனஸின் க்ருத்ரிமத்தில் பல தினுஸான கார்யங்களால் மணி முடிச்சாகக் கட்டுப் போட்டுக் கொண்டு, ஸம்ஸார பந்தத்தில் கிடக்கிற நாமும் அதிலிருந்து விடுபட, "சாஸ்த்ர கர்மா" என்று கட்டு மாதிரி உள்ளதைப் போட்டுக் கொள்ள வேண்டும். கன்னாபின்னா கட்டாக இல்லாமல் சாஸ்த்ர மூலமாக ரிஷிகள் ஒவ்வொருவருக்கும் ஸ்வதர்ம ரூபமாக அநேக கார்யங்களைக் கொடுத்திருக்கிறார்கள். ரிஷிகளின் மூலமாக ஈச்வரனே போட்ட ரூல்கள் இவை. நம் ஸ்வந்த ஆசையின் மேலே கன்னாபின்னா என்று காரியங்கள் பண்ணிப் பண்ணி, முடிச்சாகப் போட்டுக் கொண்டிருக்கிற கட்டு தளர்வதற்கு, இந்த ஸ்வதர்ம கர்மக் கட்டுதான் உதவி புரிவது. இது அசல் கட்டு அல்ல. கட்டு மாதிரி நெரிக்கும். ஆனாலும் இதிலே நெரிபடுவது நம்முடைய தப்பான ஆசைகள்தான். நம்மை நல்லதில் விடுவிப்பதற்கே இந்த நெரிப்பு. இதைப் புரிந்துகொண்டால் சாஸ்த்ர கர்மாக்களை ரூல்கள் கொஞ்சங்கூடத் தப்பாமல் ஸந்தோஷமாகச் செய்து கொண்டே போகலாம்.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்

கையில் வாளோடு அந்த இளம் பெண்களைப் பார்க்க கொஞ்சம் மிரட்சியாகத்தான் இருக்கிறது.

"இது பல வருடமாக நடந்துட்டு இருக்கு. நிறையப்பேர் இங்க பயிற்சி எடுத்துட்டு இருக்காங்க. ஆண்கள்தான் அதிகமாக இந்தப் பயிற்சியில் கலந்துக்குவாங்க. இப்பதான் பெண்கள் வந்திருக்காங்க." என்கிறார் இந்திய அளவில் பல்வேறு வாள் சண்டைப் போட்டிகளில் கலந்து கொண்ட சசிலா.

இவர் சொன்ன பிறகுதான் நேரு உள் விளையாட்டரங்கின் ஒரு மூலையில் கும்பலாகப் பெண்கள் வாளோடு மல்லுக்கட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்தோம்.

"உங்களுக்கு இந்தப் பயிற்சி பெறும் ஆர்வம் எப்படி ஏற்பட்டது?" என்ற கேள்வியை வாளோடு போராடிக் கொண்டிருந்த விநோதினியிடம் கேட்டோம்.

"என்னோட தோழி ஒருத்தி இங்கே பயிற்சி பெற்றாள். அவ மூலமாத்தான் எனக்கு இது பற்றித் தெரியவந்தது. நான் ஒரு அதலெட். வழக்கமாக ஓட்டம், தாண்டுதல் போல இல்லாமல், புதிதா ஏதாவது கத்துக்கலாம்னு விரும்பினேன். அந்தச் சமயத்தில் தான் இந்தப் பயிற்சி பற்றிக் கேள்விப் பட்டேன். கேட்கவே ரொம்ப ஆச்சரியமாகவும், சுவாரஸ்யமாகவும் இருந்தது. உடனே சேர்ந் துட்டேன்" என்கிறார்.



"உங்க வீட்ல என்ன சொன்னாங்க?"

இந்தக் கேள்வியை கலாமைதிலி, சுகன்யா இருவரிடமும் கேட்டபோது, "ஆரம்பத்தில் இதெல்லாம் எதுக்குன்னாங்க? ஏற்கெனவே நிறையப் பேர் இதுல கலந்துக்கறாங்கன்னு விளக்கியதும் சம்மதிச்சுட்டாங்க" என்கிறார் மைதிலி.

"சினிமாவில் பார்க்கிற மாதிரி பளபள வாட்களை இதுல பயன்படுத்தறதில்லை. தவிர, அதுக்கான ஆடைகளை அணிந்துதான் பயிற்சி பண்றோம்னு வீட்ல விளக்கினதும், சரின்னுட்டாங்க" என்கிறார் சுகன்யா.



'சென்னையில் மட்டும் பதினைந்து பெண்களும், எழுபது ஆண்களும் கத்திச் சண்டை பயிற்சி பெறுகிறார்கள். தமிழ்நாடு முழுவதிலும் சுமார் எண்பது பெண்களும் இருநூறு ஆண்களும் பயிற்சி பெறுகிறார்கள்' என்று புள்ளி விவரம் தருகிறார் விஸ்வநாதன். இவர் இக்கழகத்தின் ஆலோசகர். கோவை, சேலம், காஞ்சிபுரம் உட்பட, சுமார் பத்து மாவட்டங்களில் கத்திச் சண்டைக்கு இப்போது நல்ல வரவேற்பாம். "இன்னும் சில வருடங்களில், தமிழகம் முழுவதும் இதற்கு ஆதரவு பெருகும்." என்கிறார்.

இது ஒலிம்பிக் போட்டியில் இடம் பெறும் ஒரு விளையாட்டு. உலகம் முழுவதும் இது மிகவும் பிரபலமான ஒன்று. இந்தியாவில் விளையாட்டு என்ற

முறையில் இது இன்னமும் வளர்ச்சி பெறவில்லை. இதற்கு என்ன காரணம்?

இக்கழகத்தின் செயலாளரான நாகப்பன், "கத்திச் சண்டையில் பயன்படுத்தப் படும் கத்தி மிக விசேஷமானது. மிக உறுதி யானதா



• விஸ்வநாதனும் நாகப்பனும்





வாளொடு வந்த நிலாக்கள்!

இருக்கணும். அதே சமயத்தில் மிக எளிதில் வளைந்து கொடுக்கக் கூடியதாவும் இருக்கணும். அப்போதான் உடல்மீது படும்போது, குத்திடாமல், வளைந்து கொடுக்கும்.

இந்த வாட்களை ஜெர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, பிரான்ஸ், ஹங்கேரி போன்ற நாடுகளிலிருந்து வரவழைக்க வேண்டி யிருக்கு. இதோட விலை அதிகம். தலைக் கவசம், உடற்கவசம் போன்ற இதர உபகரணங்களையும் வாங்க வசதி இல்லை." என்கிறார்.

இந்தியாவைப் பொருத்தவரை, இதில் சிறந்து விளங்குபவர்கள் மணிப்பூர்க்காரர்கள் தான். அகில இந்திய அளவிலான போட்டிகளில் முதலிடம் அவர்களுக்கு நிரந்தரமாகி விட்டது. அடுத்து பஞ்சாப், கர்நாடகா மாநிலங்கள் முன்னணியில் இருக்கின்றன.

தமிழ்நாடு?

இப்போதானே ஆர்வம் அதிகரித்து வருகிறது.

- எஸ்.சந்திரமௌலி

அட்டை, படங்கள் : **யோகா**


பார்வையாளர்கள் வாட்டர் பாட்டில்களை வீசியதால் ராஜ்கோட் போட்டி ரத்து. இதுபோன்ற விபரீதங்களை எப்படித் தடுக்கலாம்? அல்லது நிலைமையை எப்படி சமாளிக்கலாம்? என்று கொஞ்சம் லேட்டாக யோசித்தோம்.
பார்வையாளர்களுக்கருகே எல்லைக் கோடு இருந்தால்தானே ஆபத்து?
“அட, நூறாவது சிக்ஸர் அடிச்சுட்டாண்டா”
விளையாட்டு வீரர்களையும், பார்வையாளர்களையும் பிரிக்கும் பெரிய இரும்புச் சுவர்.
லேட் யோசனை!
பார்வையாளர்களுக்கு ஒழுக்க நெறி வகுப்புகள்.
விருந்தினர்கள் அனிச்சமலர் போன்றவர்கள். மென்மையுடனும் மரியாதையுடனும் நடத்த வேண்டும்
இந்தியக் கலாசாரத்தை வந்திருக்கும் வெளிநாட்டு வீரர்களுக்கு உணர்த்தினால் மகிழ்வார்கள்.
இங்க சாமிக்கெல்லாம் அபிஷேகம் செய்வாங்க. அதுமாதிரிதான் வாட்டர் பாட்டில்களை வீசி, தண்ணீர் அபிஷேகம் செய்யறோம்!
குல்லு

பலன் தரும் பண்ணை நிலம் – பழத்தோட்டம் – சொந்தமாக வாங்குதல் – செய்தி

"கல்கி வார இதழ்கள் 5 ஆண்டுகளுக்கு அன்பளிப்பு"

வாலாஜாபாத் அருகே (காஞ்சிபுரம் செல்லும் வழி) பாலாற்றங்கரையில் ஆசூர் கிராமத்தில் முன்பு அறிவித்த திட்டத்தின்படி ஏற்றுமதித் தரம் வாய்ந்த மாங்கன்றுகள் ஏற்கெனவே நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. பலர் அந்த நிலங்களை வாங்கியுள்ளனர்.

புதிய திட்டத்தின்படி 1200 ச.அடி உள்ள பண்ணை நிலங்கள் ரூபாய் 20,000/– மட்டுமே

உங்கள் வாழ்நாள் முழுமையும், பிறகும் உங்கள் குடும்பத்திற்கு ஆண்டுக்கு ஒரு முறை கணிசமான வருமானம் கிடைக்கும். முழு தொகையும் மொத்தமாக கொடுப்பவர்களுக்கு சலுகை விலையில் ரூ.18,000/– மட்டுமே.

உடனே எங்கள் செலவில் பத்திரம் பதிவு செய்து தரப்படும். விலை கொடுத்து வாங்கிய நிலம்உங்களுடையதாகிவிடுகிறது.

அந்த நிலத்தை கட்டாந் தரையாக விடாமல் நல்ல வருவாய் தரும் மாங்கன்றுகளை நட்டு, உங்களுக்குக் கவலையில்லாமல் நாங்களே பராமரித்துத் தருகிறோம்.

5 ஆண்டுகளுக்குப் பிறகு மாங்கனிகள் விற்பனை மூலம் கிடைக்கும் வருவாய் வாழ்நாள் முழுமையும் உங்களுக்குத்தானே.

5 அல்லது 6 ஆண்டுகளில் சுவையான மாங்கனிகள் உள்நாட்டில் வெளிநாட்டில் விற்பனை மூலம் ஆண்டிற் கொருமுறை நல்ல வருமானம் ஈட்டலாம்.

ரூ.18,000 மொத்தமாகக் கொடுக்க முடியாதவர்களுக்கு மாதம் ரூபாய்.500 வீதம் 40 மாதாந்தர தவணைகளில் செலுத்தும் தவணைமுறைத் திட்டமும் உண்டு.



(வளர்ந்த செடியின் அருகில் கலைமாமணி விக்கிரமன்)

இந்த புதிய திட்டத்தின்படி பண்ணை நிலங்கள் வாங்கும் அனைவருக்கும் ஐந்து ஆண்டுகளுக்கு வைரவிழா காணும் "கல்கி" வார இதழ்கள் அன்பளிப்பாக அனுப்பப்படும்.

மேலும் "இலக்கியபீடம்" எனும் உயர்தர மாத இதழ் ஐந்து ஆண்டுகளுக்கு அன்பளிப்பாக அனுப்பப்படும்.

மேலும் விவரங்களுக்கு.

தொடர்பு கொள்க : அன்னை ஆர்ச்சர்ட்ஸ் (பி) லிட்.,
3 ஜெயசங்கர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை–600 033.
தொலைபேசி : 371 2485
E-mail : manivikraman@yahoo.com
இப்படிக்கு வி.வி.எஸ். மணியன், இயக்குநர், அன்னை ஆர்ச்சர்ட்ஸ் (பி) லிட்.,

மும்பை மசாலா

• வீரா

போகிற போக்கைப் பார்த்தால், இங்கே காவல் துறை நியமனங்களெல்லாம் கத்தரிக்காய் வியாபாரம் போல் ஆகிவிடும் போலிருக்கிறதே? மும்பை போலீஸ் கமிஷனர் பதவியிலிருந்து சிங், இந்த டிச.31ம் தேதி ரிடையர் ஆகிறாரா? அந்த இடத்தை இட்டு நிரப்ப, தாங்கள் தீர்த்து வைத்த 'கேஸு'களை நம்பாமல், சேர்த்து வைத்த 'ஸூட்கேஸ்'களை நம்பிக் கொண்டு காத்து நிற்கிறதாமே ஒரு பெரிய கூட்டம்? ஹூம்... ஒரு காலத்தில், காலிஸ்தான் தீவிரவாதத்தை அடக்கவும், சீக்கியருக்கு எதிராக நிகழ்ந்த பயங்கரவாதத்தை அடக்கவும், ராஜீவ் காந்தி, மஹாராஷ்ட்ராவிலிருந்து ஐ.பி.எஸ் ஆபீசர்களை நியமித்தார். இந்திராகாந்தி, பூடான் மன்னரின் பாதுகாப்புக்கு, இங்கிருந்துதான் அதிகாரியை அனுப்பினார். மராத்திய டி.ஜி.பி பேசுகிறார் என்றால் பிரதமரே அதீத கவனத்தோடு செவி மடுப்பாராம்! அது ஒரு பொற்காலம்... இக்காலத்திலோ? பணம் கொடுத்துப் பதவியை வாங்கியபின், ஓர் அதிகாரியின் மனைவி, அதனை ஈடுகட்ட, எல்லா போலீஸ் ஸ்டேஷன்களிலும் உள்ள ஆபீசர்களிடம் மாமூல் வசூலிக்கிறாராம்! இது

உலக அழகியைக் காப்பாற்றிய அக்ஷய்!



எவ்வளவு உண்மையோ... ஆனால் இதே ரீதியில் சென்று கொண்டிருந்தால், "கமிஷனர் பதவி... (சில பல) கோடிகள்... ஒரு தரம்... ரெண்டு தரம்... மூணு தரம்" என்று ஏலம் போடும் நாள் தூரத்திலில்லை! ஹீரோக்கள் என்று நாம் நினைப்பவர்களெல்லாம் ஜீரோக்களாகி விடுகிறார்கள் போலிருக்கிறதே?

ஹீரோக்கள் எல்லோரையும் ஜீரோக்கள் என்று ஒட்டு மொத்தமாக நாம் ஒதுக்கி விட முடியாது. சில சமயங்களில் ரீல் லைஃப் ஹீரோ என்று நாம் நினைப்பவர்கள்கூட, ரியல் லைஃப் ஹீரோ ஆகி விடுகிறார்! பாருங்களேன்... உலக அழகி லாரா தத்தாவும் பாலிவுட் ஹீரோ அக்ஷய் குமாரும், சுனித் தர்ஷனின் 'அந்தாஸ்' படத்துக்காக தென் ஆப்ரிக்காவில் 'ஷூட்' பண்ணிக் கொண்டிருந்தார்களா? கடற்கரை ஓரக் காதல் காட்சி; ஒரு பெரிய அலை வந்து அப்படியே ஆசையுடன் லாராவை அடித்துக்கொண்டு போய்விட்டது. அக்ஷய்குமார் உடனே டைவ் அடித்து, மூழ்கிக் கொண்டிருந்த லாராவைக் குற்றுயிரும் குலை உயிருமாகக் காப்பாற்றிக் கரை சேர்த்திருக்கிறார். 'என் கடமையைத் தானே செய்தேன்?' என்று அக்ஷய் பவ்யமாகப் பகன்றாலும், லாரா பிழைத்ததே புனர் ஜன்மமாம்! ஆனால் யூனிட்டில் அக்ஷய் உட்பட எல்லோரும் அதிசயிப்பது, "என்ன? உலக அழகிக்கு நீச்சல் தெரியாதா?" என்றுதான்! என்னங்கடா இது? நீச்சல் உடையில் தோன்றினால் நீந்தத் தெரிந்திருக்க வேண்டுமா? டீவி.யில் தமிழ் நிகழ்ச்சியைத் தொகுத்தளித்தால், தமிழ் தெரிந்திருக்க வேண்டுமா?




• அக்ஷய்

'தெரிந்திருக்க வேண்டும்' என்று நாம் சிலரிடம் சிலவற்றை எதிர்பார்க்கும்போது, அவர்கள் நம்மை ஏமாற்றி விடுவார்கள்; ஆனால் 'தெரிந்திருக்கத் தேவையில்லை' என்று நாம் நினைக்கும் விஷயங்களை, சிலர் லாவகமாகக் கையாண்டு நம்மை ஏமாற்றி விடுவதும் உண்டு. உதாரணத்துக்கு, ரிலையன்ஸ் வைஸ் சேர்மன் சுனில் அம்பானியை எடுத்துக் கொள்ளுங்களேன்; மனிதருக்கு, 'ஹாட் ஸீட்'டில் அமர்ந்துகொண்டு, இவரிடம் கேள்வி கேட்கும் ஜர்னலிஸ்ட்டுகளுக்குப் பதிலிறுத்துத்தான் பழக்கம்; ஆனால் இவரே கேள்விக் கணைகளைத் தொடுக்க வேண்டுமென்றால்? அதுவும் பி.பி.சியில் 'ஹார்ட் டாக்' செய்யும் ஆனானப்பட்ட டிம் செபாஸ்டியனையே நேர்காணல் வேண்டுமென்றால்... லேசுப்பட்ட காரியமா? பெங்களூரிலிருந்து ராமும், டில்லியிலிருந்து M.J அக்பரும், 'டிம்'மை பேட்டி கண்டார்களென்றால், அவர்கள் பழக்கப்பட்டப் பத்திரிகையாளர்கள். மும்பையிலிருந்து பேட்டி எடுத்த சுனில் மட்டும் இந்தத் துறையில் பரிச்சயமே இல்லாத தொழிலதிபர். ஆனாலும், திறமையாகவே சமாளித்துவிட்டார். பிபி.சி க்காரர்கள் இவருக்கு முழுச் சுதந்திரம் வழங்கியிருந்தனர். 'டிம்'மே 'நான் வேறு வேலை தேட வேண்டும் போலிருக்கிறதே' என்று ஜோக்கடித்திருக்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக, மனைவி டினாவிடமிருந்து நற்சான்றிதழ் வாங்கி விட்டாரே! 'ஹார்ட் டாக்'கைக்கூட 'ஈஸியாக டேக்' பண்ணியிருக்கிறாரே!

'ஹார்ட் டாக்' பண்ண வேண்டிய தருணத்திலும், சொந்த சோகத்தை 'ஈஸியாக டேக்' பண்ணி நாடகமாடிய மற்றொரு மனிதர் யுனைடெட் விஷுவல்ஸ் வரதராஜன். அவர் ஆடியன்ஸை 'டேக் ஓவர்' பண்ணியது பெரிசல்ல; ஷண்முகானந்தாவின் பிரசிடெண்ட் சங்கரையே 'டேக் ஓவர்' செய்துவிட்டாரே! இவர் கொடுத்த 'மொமெண்டோ'வை ஏற்றுக் கொண்ட சங்கர், 'கலைஞர்களுக்கு நாங்கள் கொடுத்துத்தான் பழக்கம்; எங்களுக்கு இவர் கொடுத்து, எங்களை நெகிழ்த்திவிட்டார்' என்று மணமார 'Soft talk' செய்தாரே!

— ஜெய்ஸ்ரீ ராஜ்



சண்டைக்கோழி தினகர்!

ராஜ்குமார் கடத்தல் விவகாரத்தில் கோடிக் கணக்கில் பணம் கைமாறியதாக தமது புத்தகத்தில் (வீரப்பன் அடித்த ஜாக்பாட்: ராஜ்குமார்) எழுதி பெரிய பரபரப்பை உண்டாக்கியிருக்கிறார் ஓய்வு பெற்ற கர்நாடக காவல் துறைத் தலைவர் சி. தினகர்!

தினகர் ஒரு சண்டைக் கோழி. இவரது முப்பத்தெட்டு வருடக் காவல் துறை பணிக் காலத்தில் கிடைத்த ஒவ்வொரு உயர்வும், ஒரு போராட்டத்துக்குப் பின் தான் கிடைத்திருக்கிறது. 1997ல் சீனியாரிட்டிபடி இவர் கர்நாடக காவல் துறைத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஓரங்கட்டப்பட்டார். வழக்கமான தமது போர்க்குணப் பாணியில் சுப்ரீம் கோர்ட் வரை சென்று போராடி, நியாயமாகத் தமக்குச் சேர வேண்டிய அந்தப் பதவியைப் பெற்றார். இதில் ஒரு சிறப்பு என்னவென்றால், அவருடைய வழக்குகளுக்கு, வழக்கறிஞர் நியமிக்காமல், தாமே வாதாடிக் கொள்வதுதான். ஆம்! தினகர் ஒரு வழக்கறிஞரும்கூட. 1980களில் தாம் பணியில் அலட்சியப்படுத்தப்பட்டதாலும், கொடுமைப்படுத்தப்பட்டதாலும் மனம் வெறுத்து பதவியை விட்டு விலகி, வழக்கறிஞராகத் தொழில் செய்யும் எண்ணத்தில் சட்டம் படித்தார். ஆனால் அதன்பின் எண்ணத்தை மாற்றிக் கொண்டு பணியில் தொடர்ந்தார்.

தேவகௌடா அமைச்சரவையில் மின்துறை அமைச்சராக இருந்த ஜே.எச். படேல் மீது ஊழல் குற்றச்சாட்டைச் சொன்னார் தினகர். உடனே படேல், "நல்ல மனநல மருத்துவரிடம் தினகர் சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று பதிலடி கொடுத்தார்.

அறுபத்தோரு வயதாகும் தினகர் பிறந்தது சென்னையில் தான். மாநிலக் கல்லூரியில் விஞ்ஞானத்தில் பட்டமேற்படிப்பு முடித்து விட்டு சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதினார். அதில் காவல்துறைப் பணிக்கு (ஐ.பி.எஸ்) செலக்ஷன் ஆனார். அவருக்கு கர்நாடக மாநிலம் ஒதுக்கப்பட்டது. காவல் துறையில் சிறப்பாகப் பணிபுரிந்தும், ஜனாதிபதியின் மெடல் இவருக்கு வழங்கப்படவில்லை. எனவே, அதற்காகத் தனியே ஒரு வழக்குப் போட்டு, ஜனாதிபதியிடம் மெடல் வாங்கினார் தினகர். 1998ல் அகில இந்திய சீனியாரிட்டிபடி சி.பி.ஐ. இயக்குனர் பொறுப்பு இவருக்குக் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் இவரது சகா, ராகவனுக்குக் கொடுக்கப்பட்டது. அவரது நியமனத்தை எதிர்த்தும், தமக்குத்தான் அந்தப் பொறுப்பு கிடைக்க, வேண்டுமென்றும், சுப்ரீம் கோர்ட் வரை சென்று போராடி வெற்றி பெற்றார் தினகர்.

தமது புத்தகத்தில் ராஜ்குமார் கடத்தல் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அனைவரின் படங்களையும் கேரிகேச்சராக தாமே வரைந்துள்ளார். அதிகாரிகளும் பதவியிலுள்ள அரசியல்வாதிகளும் ஆலோசனை நடத்தும் போது ஒருவரையொருவர் காலை வாரும் விவகாரங்களும், முட்டாள்தனமான யோசனைகளும், எப்படி அரங்கேறுகின்றன என்பதை ஜிலு ஜிலு நடையில் விவரிக்கிறார் தினகர். எஸ்.எம். கிருஷ்ணா, கருணாநிதி என்று பெயரிட்டுச் சொல்லும் தினகர் ஜெயலலிதாவை மட்டும் "மேடம்" என்றே சொல்கிறார். "இவருக்கு டி.ஜி.பி. பொறுப்பு கொடுக்கக் கூடாது" என்று சொன்னவர்களில் நடிகர் ராஜ்குமார் ஒருவர். காரணம் இவர் தமிழராம்!

— கௌசி



விஜயலக்ஷ்மி பந்தையன்,
நிர்வாகி

AMP

ஆல்ஃபா மைண்ட் பவர்

'சக்திகளிலேயே பெரிய சக்தி ஆழ்மனதின் சக்தி'

உங்களை வியக்க வைக்கும் அளவுக்கு ஒரு பெரிய சக்தி உங்களுக்குள், உங்கள் ஆழ்மனதில் புதைந்திருக்கிறது. இந்த சக்தியை அன்றாட வாழ்க்கைக்கும் பயன்படுத்த முடியும். அதற்கான திறவுகோல்தான் 'ஆல்ஃபா மைண்ட் பவர்!'

கலபமான ஆல்ஃபா தியானத்தின் மூலம் இந்த சக்தியை தூண்டி விட்டு வாழ்க்கையில் எந்த பிரச்சினைக்கும் விடை காணலாம்.

- மன அழுத்தம் குறைக்கலாம்.
- பண வரவை அதிகரிக்கலாம்.
- உறவுகளை சீர்படுத்தலாம்.
- குடும்பத்தில் அன்பு நிலவ செய்யலாம்.
- நோய் தீர்க்கலாம்.
- பரீட்சையில் அதிக மார்க் வாங்கலாம்.
- மகிழ்ச்சியுடன், தன்னம்பிக்கையுடன், வெற்றியுடன் வாழலாம்.

இன்னும் பல வழிகளில் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளலாம்.

நான் சிமெண்ட் கம்பெனி ஒன்றில் பணிபுரிகிறேன். எனக்கு அடிக்கடி லாரி டிரைவர்கள் அசோசியேஷனுடன் தொடர்பு கொள்ள வேண்டியிருந்தது. ஒவ்வொரு சந்திப்பும் ஏதாவதொரு கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரச்சனையில் முடிவதை நினைத்து நான் மிகவும் கலக்கமுற்றேன். இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட பிறகு நான் ஆல்ஃபா மூலம் பேசினேன். மேலும் ரோஸ் நிறத்தை செலுத்தி வந்தேன். இதன் பிறகு நடந்த கூட்டம் மிக சுமுகமாக நடந்தது. அதே மனிதர்கள்தான், அதே பிரச்சனைகள்தான், ஆனால் சப்தம், கோபம் குறைந்து அமைதியான முறையில் நடைபெற்றது. ஆல்ஃபாவுக்கு நன்றி!

பயிற்சி வகுப்புகள் மாதந்தோறும் ஆங்கிலத்திலும் தமிழிலும் தனித்தனியாக சென்னையில் நடத்தப்படும். பெங்களூர், கோயம் புத்தூர், மதுரை மற்ற ஊர்களிலும் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

தபால் மூலம் கற்க :

ஆல்ஃபா மைண்ட் பவர் ஆடியோ காஸட்/சிடி மற்றும் பயிற்சி புத்தகம் ஆங்கிலம் மற்றும் தமிழில் தபால் மூலம் பெற தொலைபேசி, ஈமெயில், கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

ஆல்ஃபா மைண்ட் பவர் இன்ஸ்டிட்யூட்

11, அருணாசலம் சாலை, சாலிகிராமம்,
சென்னை -93. இந்தியா.
சென்னை +91-44-3760283/3761880
பெங்களூர் - 080-5291976/5290761
கோவை - (0422) 426663
மதுரை - (0425) - 536820
email: alphamindpower@hotmail.com.
www.alphamindpower.net

KORA's
Garments & Tailoring



Proprietrix
Mrs. Meera Nandakumar

Specialised In:

- டிசைனர் பிளவுஸஸ்,
- எம்பிராய்டரி பிளவுஸஸ்,
- டிசைனர் சல்வார்,
- ஷார்ட் குர்தாஸ்,
- மிடீஸ், ஃப்ராக்ஸ்,
- நைட்டீஸ், சிலிப்ஸ்.

Kora's
Garments & Tailoring
#87 (Old #2) G-1 Kala Flats
10th Avenue, Ashok Nagar,
Chennai - 600 083.
Phone : 371 9782



"சுந்தரீசா...!" கண்ணோடு காண்பதெல்லாம் ரேஞ்சுக்கு 'ரீ'யைத் தூக்கிப் பிடித்து...!"

இல்லை! முதல் அத்தியாயத்தையே மறந்துபோய் மீண்டும் பிரசுரிக்கவில்லை. இது இரண்டாவது அத்தியாயம் தான் என்பதில் வாசகர்களுக்கு எவ்வித சந்தேகமும் வேண்டாம். இந்த அத்தியாயத்தில் 'ரீ'யைத் தூக்கிப் பிடித்து நிறுத்துவது சத்தியமூர்த்தி அல்ல; அவனது சிமந்த புத்ரி பாப்பா!

பாப்பாவின் வாழ்க்கையிலும் இது இரண்டாவது அத்தியாயம். இத்தனை நாட்களாக அவள் வாய் திறந்து பேசாவிட்டாலும், அவளுக்கு ராகங்களும் சங்கீதமும் புரியாமல் இல்லையென்பது அவள் பெற்றோருக்குப் புலனான இரண்டாம் அத்தியாயம்!

நவீன ஞானசம்பந்தரென பாப்பா திடீரென்று ஒருநாள் திருவாய் மலர்ந்து சாளகபைரவி ராகத்தை அடையாளம் கண்டபோது, சில கணங்கள் இருவரும் ஸ்தம்பித்தனர்.

பிறகு சுந்தரி குழந்தையை வாரியெடுத்து உச்சி முகந்து இறுக அணைத்துக்கொண்டாள். இருவரையும் சேர்த்து சத்தியமூர்த்தி அணைத்துக் கொண்டான்.

சாளகபைரவியில் பிள்ளையார் சுழி போட்ட பாப்பாவின் பேச்சுத்திறன், அவள் பாட்டுத் திறனுக்கு நிகராக வளர்ந்தது.

வாசல் கேட்டைத் திறந்தாலும், குக்கர் விசில் ஊதினாலும், ஊஞ்சல் கம்பி கிறீச்சிட்டாலும், வேப்ப மரத்தில் அண்டங் காக்கை கரைந்தாலும் அது பாப்பாவுக்குச் சங்கீதமாகவே ஒலித்தது. ஒவ்வொன்றுக்கும் ஒரு ஸ்வர ஸ்தானத்தைச் சொல்லி அசத்தினாள். மாடிப் படிகளில் ஏறியபோது படிக்கு ஒரு அடி என்று புனைந்து சொந்த சாஹித்யம் பாடினாள்.

இதெல்லாம் கூட சுந்தரி - சத்தியமூர்த்திக்கு ஆச்சர்யம் ஏற்படுத்தவில்லை. வயலின் வெங்கட் ராமய்யரின் மரபணுக்களும் பல்லவி பலராமய்யரின் மரபணுக்களும் எங்கே போய்விடும்? அவற்றைச் சரி விகிதத்தில் கலந்தல்லவா பிரும்மா பாப்பாவைப் படைத்திருக்கிறான். ஒரு சூப்பர் கம்ப்யூட்டரின் புரோகிராம் போல் ராகங்களின் பெயர்களும் ஸ்வர ஸ்தானங்களும் அவளுக்குள் பதிவு செய்யப்பட்டு விட்டனவே! அப்புறம் ஆச்சர்யப்பட என்ன இருக்கிறது? மூன்று வருடம்

சீதா ரவி

ஸரிகம பாப்பா

அவன் பேசாமல் இருந்ததுகூட, சங்கீத தேவதையின் சோதனை விளையாட்டுதான்.

ஆனால் பாப்பா பேச ஆரம்பித்ததிலும் சில சோதனைகள் இல்லாமல் போகவில்லை.

வானொலியின் அரங்கிசையில் துளி அபஸ்வரம் கேட்டாலும் 'உடனே ரேடியோவை அணை' என்று அடம் பிடித்தாள்.

பக்கத்து வீட்டுக் குழந்தைகளை அழைத்துப் போக வந்த பள்ளிக்கூட வேன், ரிவர்ஸ் கியரில் மொட்டை மொட்டையாக 'வந்தே மாதரம்' வாசித்தபோது வெகுண்டு எழுந்தாள். கல்லைத் தூக்கிக் கொண்டு வேன் மீது எறிவதற்கு ஓடியவளை, நல்லவேளையாகத் தக்க நேரத்தில் தடுத்து நிறுத்தினான் சத்தியமூர்த்தி.

சுந்தரி தன்னை மறந்து பாடிய தருணங்களில் கூடச் சகியாமல் கூச்சல் போட்டாள் பாப்பா. இப்போது அவள் 'சுந்தரி' என்று கண்ணோடு காண்பதெல்லாம் ரேஞ்சுக்கு 'ரி'யைத் தூக்கிப் பிடித்து நிறுத்தி குரலெழுப்பியது சுந்தரியின் பாத்ரூம் சங்கீதத்தைக் கேட்கச் சகியாமல் தான்!

குளியலறையின் மூடிய கதவருகே நின்றுகொண்டு கண்ணகி போல் அலறிய மகளைக் கண்டித்தான் சத்தியமூர்த்தி.

"ஷ்! அப்படியெல்லாம் அம்மாவைப் பெயர் சொல்லிக் கூப்பிடக் கூடாது."

"நீ மாத்திரம் கூப்பிடலாமோ!"



சீசன் சிறப்புத் தொடர் - 2

என்ன பதில் சொல்வதென்று புரியாமல் சத்தியமூர்த்தி விழிக்க, குளித்து முடித்த கோலத்தில் வெளிப்பட்டாள் சுந்தரி.

''இனிமே நீ கௌரி மனோகரி பாடாதே!'' இடுப்பில் ஒரு கை வைத்து, வலக்கையில் ஆள்காட்டி விரலை உயர்த்தி எச்சரித்தாள் பாப்பா.

"ஏன்? என்னாச்சு?''

"அப்பப்போ அது கீர்வாணியா ஆச்சு; அதான் சகிக்கலை...''

"போச்சுடா! பொண்ணு பிறக்கறதுக்கு முந்தி 'பூட்டிக்கோ'ன்ற பழமொழியை மாத்தணும் போலிருக்கே...''

"என்ன சொல்றே?...'' என்றான் சத்திய மூர்த்தி.

''பொண்ணு பிறக்கறதுக்கு முந்தி பாடிக்கோ'ன்னு மாத்திட வேண்டியது தான்.''

சுந்தரியின் ஜோக்குக்குச் சிரிக்கும் சாக்கில், பாப்பா விதித்த தடையை நினைத்து நினைத்து மகிழ்ச்சியில் சிரித்தான் சத்திய மூர்த்தி.

அலுவலக இடைவேளையின்போது நண்பன் ரங்கசாமியுடன் சுந்தரியின் கௌரி மனோகரிக்குப் பாப்பா 144 போட்டதைச் சொல்லிச் சொல்லிச் சிரித்துக் கொண்டிருந் தான் சத்தியமூர்த்தி.

''அதெல்லாம் கிடக்கட்டும்... பாப்பா உலகப் புகழ் பாடகியா ஆகணும்ன்ற ஆசை இருந்தா, உடனடியா நீ இரண்டு காரியம் பண்ணணும்...'' சத்திய மூர்த்தியின் சத்துணவைத் தாராளமாய்ப் பங்கிட்டுக் கொண்டு இலவச கன்ஸல்டேஷன் வழங்கினான்.

"என்ன...?''

''பாப்பாவுக்கு முறையாகப் பாட்டு கத்துத் தர ஒரு குருவை ஏற்பாடு பண்ண ணும்; அதுக்கு முன்னாடி, ஒரு பிரெஸ் கான்ஃபரன்ஸ் வைச்சு அவளோட ஆச்சர்ய மான திறமைகளை ஊர் உலகத்துக்கெல் லாம் தெரியப் பண்ணணும்.''


"ஐயோ... அதெல்லாம் வேண்டாம்...'' என்றான் சத்தியமூர்த்தி அவசர அவசரமாக.

''ஏன் கண்ணு பட்டுடும்னு பயமா இருக்கா...?''

"இல்லே! கண்ணு படலைன்னாகூட கல்லு கில்லு பட்டுடுமோன்னு பயமா யிருக்கு. இந்த சங்கீத குட்டிப் பிசாசுக்குச் சகிப்புத் தன்மை ஜீரோ! எங்கயானும் துளி அபஸ்வரம் கேட்டால் கல்லைத் தூக்கிட்டு அடிக்க ஓடறது! அது ராகம் கண்டுபிடிக் கணும்னு நாம யாரையாவது பாட வைச்சு, அவங்க கொஞ்சம் ஏறுமாறா பாடிட்டா, அப்புறம் சைல்ட் பிராடிஜியா? சைல்ட் டெரரிஸ்டா?ன்னு பிரெஸ்ல கவர் ஸ்டோரி பண்ணி ஓட்டிடுவாங்க...''

''அப்படியெல்லாம் ஆகாது. நான் காரண்டீ. வீணை வித்வான் இளையான்குடி தாத்தாச்சார்யார் எனக்கு நெருங்கின சிநேகம். சுஸ்வரம் தவிர வேறெதுவும் பேசாது அவர் வீணையில். அவரை ஒரு நாள் வாத்தியத்தை எடுத்துண்டு உங்க வீட்டுக்கு வரச் சொல்றேன். வாசிக்கட்டும், பாப்பா ராகம் கண்டுபிடிக்கட்டும். ஒரு ஒத்திகை பார்த்துட்டோம்னா அப்புறம் வுட்லண்ட்ஸ்லே ப்ரெஸ் கான்ஃபரன்ஸ் போட்டுடலாம். எல்லா ஏற்பாடும் நான் பார்த்துக்கறேன்...''

ஒத்திகையின்போதே பாப்பாவுக்கும் தாத்தாவுக்கும் (இளையான்குடி தாத்தாச்சார்யார்தான்) நன்றாக



ஒத்துப் போயிற்று.

'ராகம் ஒன்று சொன்னால் சாக்லேட் ஒன்று தருவேன்' என்று ஆசை காட்டி இரண்டு மணி நேரம் பாப்பாவை உட்கார வைத்துவிட்டான் ரங்கசாமி.

ஞாயிறு பிற்பகல் மூன்று மணி என்றும் பாராமல் தினசரி, வார, மாத இதழ்கள், சங்கீதச் சிற்றிதழ்கள், இலக்கியப் பேரிதழ்கள் என்று ஒன்றுவிடாமல் அத்தனை பத்திரிகைகளிலிருந்தும் நிருபர்கள் வந்துவிட்டார்கள். வானொலி, தொலைக்

காட்சி அன்பர்கள்கூட, வரிந்து கட்டிக் கொண்டு ஒலி -ஒளிப் பதிவி இயந்திரங் களோடு வந்து சேர்ந்தனர்.

ஐந்து வயதுப் பாப்பா, வுட்லண்ட்ஸ் கான்ஃபரன்ஸ் அறையின் மேடை விளிம் பில் கால்களைத் தொங்கப் போட்டு உட்கார்ந்துகொண்டு, காதில் ஜிமிக்கி ஆட, ஏ.ஸி குளுமையை ஆனந்தமாக அனுபவித்த படி இருக்க, தாத்தாச்சார்யார் வீணையில் மாற்றி மாற்றி ராகங்களை வாசித்தார்.

''மாயாமாளவகௌளை'' என்று ஆரம்பித்து, முதல் மீட்டிலேயே கல்யாணி, வசந்தா, கல்யாண வசந்தம், இன்னும் வக்ர ராகம், ரக்தி ராகம், ரஞ்சக ராகம், விவாதி ராகம், முதலமைச்சர் பெயரைக் கொண்ட லேட்டஸ்ட் ராகம் என ஒன்று விடாது கண்டுபிடித்தாள். ஒவ்வொரு ராகத்தின் பெயரைச் சொன்னதும் "உம், சாக்லேட்" என்று சின்னக் கையை நீட்டி அதட்ட லாய்க் கேட்டு வாங்கிப் பக்கத்தில் வைத்துக் கொண்டாள்.

> **''உங்களுக்கு மட்டும்தான் டிபனா? உங்க ஃபிரண்டுக்கு வேண்டாமா?''**
> **''வேண்டாம்! நான் மாவாட்டறபோது சும்மா பேச்சுத் துணைக்கு இருக்கட்டு மேன்னு கூட்டிட்டு வந்திருக்கேன்!''**
> **- ஆர்.ஆர்.பூபதி**

எல்லாப் பத்திரிகைக்காரர்களும் மூக்கின் மேல் விரல் வைத்தார்கள். பாப்பா கண்டுபிடித்த ராகத்தின் பெயர்களைத் தாத்தாவிடம் திரும்பக் கேட்டுச் சரியாகக் குறித்துக் கொண்டார்கள்.

போட்டோகிராஃபர்கள் பாப்பாவைத் தனியாகவும் தாத்தாவுடனும், பின்னர் பெற்றோருடனும் மாற்றிப் மாற்றிப் பட மெடுக்க, புலனாய்வு புரொஜெக்டர் பத் திரிகையின் சிறப்பு நிருபர் மட்டும் சந்தேகம் எழுப்பினார்...

"நீங்க முன்னமே பாப்பாவுக்குக் கற்றுக் கொடுத்து அழைச்சுட்டு வரலைன்னு என்ன நிச்சயம்...?"

"ஆமாமாம்!" ஒத்து ஊதினார் அவருடன் வந்திருந்த போட்டோக்காரர்.

''யெஸ். நாங்க சீட்டுல எழுதித் தர ராகத்தைப் பெரியவர் வாசிக்கணும், பாப்பா கண்டுபிடிக்கணும்... முடியுமா?" - 'நாதமணி' யின் சார்பில் வந்திருந்த ஃப்ரீலான்ஸர் சரஸ்வதிகடாக்ஷம், பிரும்மாஸ்திரம் போடுவ தாக நினைத்துக்கொண்டு சொல்ல...

உடனே காகிதத் துண்டுகள் விநியோக மாயின. பிரதாபவராளி, கைகவசி, கோகிலப்ரியா, இன்னும் படிப்பதற்கு மட் டுமே அழகான ராகங்களின் பெயர்கள் அவற்றில் எழுதப்பட்டு, தாத்தாவிடம் தரப்பட்டன. அத்தனையையும் அவர் விடேன் தொடேன் என்று வாசிக்க, பாப்பா இமைக்கும் நேரத்தில் கண்டுபிடித்தவண் ணம் இருந்தாள். அவள் பக்கத்தில் சாக்லேட் குவியலும் அவள் உயரத்தில் பாதிக்கு வந்துவிட்டது!

பிரெஸ் கான்ஃபரன்ஸுக்கு நல்ல விளைவு என்று பத்திரிகை 'கட்டிங்'களை எடுத்து வந்து காட்டினான் ரங்கசாமி.

பாப்பாவை சாக்லேட்டுடன் படம் பிடித்துப் போட்டு, செய்தியுடன் மறக்காமல் சைல்ட் சைக்கியாட்ரிஸ்ட் பேட்டியை பாக்ஸ் ஐட்டமாக வெளியிட்டிருந்தது ஒரு வார இதழ். 'சாக்லேட்டுக்கு ராகம்!' என்ற தலைப்பில் குளோஸ் அப் போட்டோ போட்டது புலனாய்வு இதழ். 'பாப்பாவைப் பெற்ற மனம்' என்று சுந்தரியின் பேட்டியை ஆறரை பக்கங்கள் வெளியிட்டது மாதர் இதழ் ஒன்று.

முன்னணி ஆங்கில நாளிதழ்கள், துணை ஏடுகளில் பாப்பாவின் படம் போட்டு பட விளக்கம் எழுத, தமிழ் தினசரிகள் மூன்றாம் பக்கத்திலேயே 'ஸரிகம பாப்பா' என்று சிலே டைத் தலைப்பிட்டுச் செய்தி வாசித்தன.

"இதுதான் நல்ல சமயம்'' என்றான் ரங்கசாமி...

"எதுக்கு...?"

''பாப்பாவுக்குப் பாட்டு வாத்தியார் தேவைன்னு பேப்பர்ல விளம்பரம் கொடு."

"போதும்.வீண் செலவு... வுட்லண்ட்ஸ் கலாட்டாவுக்கே உண்டு இல்லைன்னு செலவாகியிருக்கு..." சுந்தரி எச்சரிக்க...

''அச்சோ! அது செலவில்லே... இன்வெஸ்ட்மென்ட். உங்க பாப்பாவோட எதிர்காலத்துக்கு நீங்க பப்ளிஸிட்டி, மார்க் கெட்டிங்ல செய்யற முதலீடு... நாளைக்கே அவ சம்பாதிக்க ஆரம்பிச்சான்னா..."

கல்யாணக் கச்சேரிக்கு பாப்பா என்ன ரேட் வாங்குவாள் என்று ரங்கநாதன் புரொஜக்ஷன் போட, பாப்பா அவர் வெட்டி எடுத்து வந்திருந்த செய்தித்தாள் களை மடக்கி, கத்திக் கப்பல் செய்து கொண்டிருந்தாள்.

(தொடரும்)

வாழ்வுகெட்டவு

எம்.பி. உதயசூரியன்

எண்ணெய் தளும்பியிருந்த
அஞ்சாறு தகர டின்
கறந்த பால் வழிந்தோடிய
நசுங்கிய ஈயச்செம்பு
பட்டி ஆடுகளின் மிச்சக்கதறலென
மனசறுக்கும் பித்தளைமணிகள்

அத்தனையும் எடைபோட்டு
அடித்து நொறுக்கி சாக்கிலிட்டு
உள்ளங்கை நிறைய
பேரீச்சம்பழம் அப்பிவிட்டு
அள்ளிச் செல்லும்
வியாபாரி அறிவானா
அதனதன் மகத்துவம்!



பிள்ளையாரே! பிள்ளையாரே!





சீஸன் சிறப்புப் பக்கம்

இசை விழாவுக்குக் கட்டியம் கூறுவது மாதிரி அமைந்தது 'ப்ருஹத்வனி' நடத்திய 'நாட்டுப்புற இசையும் கர்நாடக இசையும்' நிகழ்ச்சி!

சங்கரி கிருஷ்ணன், சௌம்யா முரளீதரன், சுதா ஹரிகிருஷ்ணன், ராதா வெங்கட்ராமன், சகுந்தலா கிருஷ்ணமூர்த்தி, பி. ராதா என்று ஒரு குழுவாக முதலில் கிராமப்புறப் பாடலைப் பாடிவிட்டு, அதே ராகத்தில் இருந்த கர்நாடக இசைப் பாடலையும் பாடினார்கள்.

'பிள்ளையாரே, பிள்ளையாரே, பிடிச்சு
வச்ச பிள்ளையாரே,
மேல் வருஷம் மார்கழி மாசம் வந்திங்கள
பிள்ளையாரே'

என்ற நாட்டுப்புறப் பாடலை உசேனி ராகத்தில் பாடிவிட்டு, தியாகராஜரின் 'வினதா சுத' என்ற அதே ராகப் பாடலைப் பாடினர்.

'வேப்பிலையக் கையிலெடுத்து மாரி வீதி
வழி விளையாடுவா
தீச்சட்டியக் கையிலெடுத்து மாரி தெரு
மீது விளையாடுவா'

என்ற கிராமப்புறப் பாடல் யதுகுல காம்போதி ராகத்தில் இருந்தது. அதற்கு இணையாக, தியாகராஜரின் 'ஹெச்சரிக்க காரரா' பாடினார்கள்.

குறிஞ்சி ராகத்தில் ஒரு கும்மிப் பாட்டும், தியாகராஜரின் சீதா-ராம கல்யாணப் பாட்டும் பாடிவிட்டு, கிராமப்புறங்களில் பாடும் தாலாட்டு ஒன்றை நவ்ரோஜ் ராகத்தில் பாடிய போது, புகுந்த வீட்டு மனிதர்கள் மீது தனக்குள்ள குறைகளையும், தாலாட்டுப் பாட்டில் வெளிப்படுத்தும் மெலிதான நகைச்சுவை தெரிந்தது. தொடர்ந்து இதே ராகத்தில் 'ஹஸ்திவதனாய' கீர்த்தனையைப் பாடினார்கள்.

"நாட்டுப்புற இசையின் மெட்டைப் பார்த்தால், அது ஒரு ராகத்துக்கு உட்பட்டு வருவதில்லை. அவற்றிலிருக்கும் பிடிகளை வைத்து, எந்த ராகத்தை ஒட்டி வருகிறது என்று கூறலாமே தவிர, இந்தப் பாடல் இந்த ராகம்தான் என்று சொல்ல முடியாது. வார்த்தைகளுக்கு முதலிடம் கொடுத்து, இசைக்கு அடுத்த இடத்தைக் கொடுத்துப் பாடப்படும் நமது கீர்த்தனைகள், கிராமப்புற இசையின் அம்சங்கள் கொண்டவை என்று கூறலாம். இரண்டுக்கும் ஒற்றுமைகள் நிறைய இருக்கின்றன. கிராமப்புறப் பாடல்களுக்கு, இசைத் தளத்தில் நிச்சயம் ஓர் இடம் உண்டு. இதில் உள்ள 'ரிதம்' குழந்தைகளை எளிதாக ஈர்க்கும்" என்றார் 'ப்ருஹத்வனி' அமைப்பின் தலைவர் பேராசிரியர் கே.எஸ். சுப்பிரமணியன்.

"உடல் அசதியை மறக்க மட்டுமல்ல, உணர்ச்சிபூர்வமான பாவங்களிலும் கிராமப் புறப் பாடல்கள் அமைந்திருக்கின்றன!" என்கிறார் அவர்.

— சித்தார்த்



இராசமாதேவி - *நாடக வடிவில் சீவகசிந்தாமணி - சீனி. கிருஷ்ணஸ்வாமி*

நாடக வழக்கு என்பது எண்வகைச் சுவைகள், அவை தோன்றும் நிலைக்களன் முப்பத்தி யிரண்டென்னும் தொல்காப்பிய விதிப்படி சிவகசிந்தாமணி யென்னும் பெரும் காப்பியத்தை நாடக வடிவில் மூன்று பாகங்களாக அமைத்து வந்திருக்கும் அரிய நூல்.

தாரிணி பதிப்பகம், 15, வி.எஸ். முதலி தெரு, சண்முகா ஃபிளாட்ஸ் ஜி-2, சைதை. சென்னை - 600 015.

விலை ரூ. 250/-

ஏழாவது அறிவு *(இரண்டாம் பாகம்)* - **இறையன்பு.**

வாழ்வின் பல்வேறு கோணங்களிலிருந்து அனுபவங்களைப் பார்த்து, அவற்றின் பயன்களை மட்டும் பாடங்களாகப் பகிர்ந்து கொண்டிருக்கிறார். பயனுள்ள படைப்பு.

தாகம், ஜி 3/8 மாசிலாமணி தெரு, பாண்டி பஜார், தி. நகர், சென்னை - 600 017.

விலை : ரூ. 65/-

வெற்றியின் வரலாறு மறு பார்வை - *நல்லி குப்புசாமி செட்டியார்.*

இலக்கைத் தொட்டுவிட்டு நிற்பதல்ல வெற்றி. அடுத்த இலக்கைத் தேடி இன்னும் முன்னேறுவதே, என்ற இலக்கணத்தை வாழ்வில் கடைபிடிக்கும் வெற்றியாளரின் அனுபவங்கள்.

பிரெயின் பேங்க் 14, ஜகதாம்பாள் தெரு, தி. நகர், சென்னை - 600 017.

விலை : ரூ. 30/-

இன்றைய வாழ்க்கையில் இணையம் - *பி. பவானி.*

இன்டர்நெட், ப்ரௌசிங், இ-மெயில் போன்றவற்றைப் பயன்படுத்திக் கொண்டிருப்பவர்களுக்கும், ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கும் தெளிவான விளக்கங்களுடன் உதவும் நூல்.

ஜெய்ஷங்கர் பப்ளிகேஷன்ஸ், 38, நடேச ஐயர் தெரு, தி. நகர், சென்னை - 600 017.

விலை : ரூ. 100/-

நால்வர் வாழ்வும் - வாக்கும் - *கலாநிதி நா. சுப்பிரமணியன்.*

ஆறு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை பக்தி இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி, சைவ சமயத்தையும் தமிழையும் வளர்த்த நாவுக்கரசர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரின் வரலாறு.

கலைஞன் பதிப்பகம், 19, கண்ணதாசன் சாலை, தி. நகர், சென்னை - 600 017.

விலை : ரூ. 75/-

ஸ்ரீ ருத்ரகனம் - கே. சுரேஷ்

ஸனாதன தர்மங்களுக்கு ஆணிவேராக இருக்கும் வேதங்களில், கிருஷ்ண யஜுர்வேத ஸ்ரீ ருத்ரத்தையும், ருக்வேத பஞ்ச ருத்ரத்தையும் பாராயணம் செய்ய எளிதாக, பதம், ஸந்திகளுடன் விவரமாக எழுதப்பட்டுள்ள நூல். வேதபாடம் பயில்பவர்களுக்கு மிக உதவும்.

லதா, ஜி-2, கிங்ஸ் மேனர், 35, 4வது டிரஸ்ட் குறுக்குத் தெரு, மந்தைவெளி, சென்னை - 600 028.

விலை : ரூ.300/-

— **விஸ்வக்**

தாய்லாந்துக் கோயிலில் தமிழ் பூஜை!




• திருப்பாவை, திருவெம்பாவை விழா நடக்கும் கோயில்

வாமனர்

பாங்காக்கில் மார்கழி மாதம் ஒவ்வொரு நாளும் மன்னரின் அரண்மனையில் திருப்பாவை, திருவெம்பாவையோடுதான் பொழுது புலர்கிறது. பாடுபவருக்குத் தமிழ் தெரியாது. திருப்பாவை திருவெம்பாவை தாய் மொழியில் எழுதப்பட்டிருக்கும் காகிதத்தைப் பார்த்துதான் பாடுவார். ஆனால், பாடுபவர் பூர்வீகத் தமிழர். மன்னரின் அரண்மனையிலே இருக்கும் தமிழ் பிராமணர். பெயர் மகா ராச குரு என்றழைக்கப்படும் ஸ்ரீ 'வேம்தேவ முனி'. இந்தியாவிலிருந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வந்த பிராமணர்கள் தங்களுடன் பெண்களை அழைத்து வரவில்லை. தாய்லாந்துப் பெண்களை மணம் செய்து கொண்டு அவர்கள் வம்சம் தழைத்ததால், இவர்களின் தோற்றத்தில் இந்திய களையைக் கொஞ்சம் கொஞ்சமாய் இழந்தவர்கள்.

பிராமணர்களில் சிலர், அரசு காரியங்களுக்காக அரண்மனையிலேயே இருக்கிறார்கள். இவர்களின் முழு நேர வேலையே மன்னருக்கும் ராஜ குலத்தவர்க்கும் கடமைகள் செய்வதுதான். மன்னரின் முடிசூட்டு விழா, ராஜ குடும்பத்தில் பிறப்பு விழா, இறப்புக் காரியங்கள், தாய்லாந்தின் முக்கியமான அரசு விழாக்கள் என்று அரசின் ஆஸ்தான பிராமணர்களாய் இருக்கிறார்கள். மற்ற பிராமணர்கள் தங்கள் அன்றாடத் தொழிலையும் செய்துகொண்டு கட்டிடத் திறப்பு விழாக்கள், கிரஹப்ரவேசம் என்று சடங்குகளை நடத்திக் கொடுக்கிறார்கள்.



புன்னகை பூமி - 6



• ஊஞ்சல் பூஜை

தாய்லாந்தும் மற்ற தெற்கிந்திய நாடுகளும் இந்தியமயமானதில் பெரும் பங்கு பிராமணர்களைச் சாரும். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் வந்த பிராமணர்கள் மூலமாகத்தான் வான இயல், ஜோதிடம், இந்தியப் புராணங்கள், இந்து மத நம்பிக்கைகள், சடங்குகள், இந்திய தர்ம சாஸ்திரங்கள் என்று இந்தியாவின் அறிவுபூர்வமான கலாசாரத் தாக்கம் தாய்லாந்தை அடைந்தது.

மன்னரின் குரு

இந்திய மன்னராட்சி முறையில் க்ஷத்ரியனான ஒரு மன்னருக்கு பிராமணனான ஒரு குருவின் ஆலோசனையும் உதவியும் தேவையாயிருந்தது. மன்னருக்கும், இளவரசனுக்கும் முடி சூட்டுவதும், ஜாதகம் கணிப்பதும், நாள் குறிப்பதும், ராஜதர்மம் என்னும் ராஜாங்கக் கோட்பாடுகளை எடுத்துரைப்பதும், வழி நடத்துவதும் இவை அத்தனையும் ஒரு பிராமணனின் கடமையாக இருந்தது. இந்திய ராஜாங்கங்கள் இங்கே வேர் விட்டபோதும் இந்தக் கடமைகளைச் செய்தவர்கள் பிராமணர்கள். இந்தியன் ஒருவன் அரசனாவதைத் தவிர, தெற்கு ஆசியாவில் இருந்த ஒரு இனத் தலைவனே அரசனாக ஆனான். அப்படி உள்ளூர் இனத் தலைவனை அரசனாக்க அவனை இந்திய முறைப்படி முதலில் க்ஷத்ரியனாக்க வேண்டும். அதனால் வெளிநாட்டவர்களை க்ஷத்ரியர்களாக்கும் 'வரத்யஸ் தோமா' என்னும் சடங்கு மூலம் அவர்கள் மாற்றப்பட்டார்கள். அதற்காகவும் பிராமணர்கள் தேவைப்பட்டார்கள்.



• பூஜை செய்யும் தாய்லாந்து பிராமணர்

இப்படி மன்னர்களுடன் உருவான பிராமணர்கள் பதினாலாம் நூற்றாண்டு வரை ஒரு சக்தி வாய்ந்த குலமாய் விளங்கினார்கள். ராஜ வம்சத்தினர் சில சமயம் பிராமணக் குடும்பங்களில் திருமணம் செய்துகொண்டார்கள். ஒரு மன்னருக்குப் பிள்ளைகள் பிறக்காதபோது, வாரிசு தேவையாக இருந்த சமயத்தில் பிராமணக் குடும்பத்திலிருந்து மன்னரின் வாரிசு நியமிக்கப்பட்டார்.

பிராமணர்களின் வேத அறிவும், ஜோதிட சாஸ்திரம், வானியல் போன்ற அத்தனை அம்சங்களும் மன்னர்களுக்குத் தேவையாய் இருந்தன. அந்தப் பிரதேசத்தில் பிராமணர்கள் மூலமாய் நிறைய நம்பிக்கைகள், சடங்குகள் எல்லாம் சமூகத்தில் சங்கமமாகி இருந்த நிலையில், வாழ்க்கை முறையில் ஒரு தொடர்ச்சி இருக்க அவை எல்லாம் அனுமதிக்கப்பட்டன. மேலும் இந்துக்களான கெமர் மன்னர்கள் தங்களை இறைவனுக்கு ஒப்பாக நிலை நிறுத்திக் கொண்டது போல, தங்களையும் உயர்ந்த நிலையில் இருப்பதாய்க் காட்டிக் கொள்ள, தாய்லாந்து மன்னர்களுக்கும்

ஆனந்த் ராகவ்

பிராமணர்களின் ஆதரவு தேவைப்பட்டது. பிராமணர்கள் இந்திய கெமர் ராஜ்யத்திலிருந்து இடம் பெயர்ந்தார்களே தவிர, அவர்களது ராஜநீதி வகுக்கும் கடமை தொடர்ந்தது.

இந்திய ராஜாங்கங்கள் இருந்த இந்தப் பகுதியில் இந்து மதத்தோடு புத்த மதமும் ஒரு சேரப் பரவி வந்தது. கெமர் ராஜ்யத்தின் கடைசி மன்னனாகிய ஏழாவது ஜெயவர்மன் (கி.பி. 1181-1215) ஏற்றுக் கொண்டது புத்த மதத்தை. ஹீனாயான புத்த மதத்தைச் சார்ந்த தாய்லாந்து அரசர்கள் இந்தியக் கெமர்களிடமிருந்து நாட்டை கைப்பற்றியவுடன் தேவ ராஜ நெறி மறையவில்லை. அதில் ஒரு சின்ன மாறுதல் மட்டும் ஏற்பட்டது. தாய்லாந்து மன்னர்கள் ஆட்சி செய்த போது, இந்துக் கோயில்கள் கட்டவில்லையே தவிர, தங்களை சிவனாகவும் விஷ்ணுவாகவும் நிலை நிறுத்திக் கொள்ளும் வழக்கம் நிற்கவில்லை. புத்த மதத்தைத் தழுவிய மன்னர்கள் இந்து மதக் கடவுள்களான சிவனாகவும் விஷ்ணுவாகவும் தங்களைப் போற்றிக் கொள்வது ஆச்சரியகரமாய்த் தொடர்ந்து நடந்தது. இன்றும் தாய்லாந்தில் மன்னருக்குச் செய்யும் வருடாந்தர மகுடம் சூட்டும் விழாவில் மன்னரை சிவனாகவும் விஷ்ணுவாகவும் உருவகப்படுத்தி பூஜிக்கிறார்கள். அப்படி மன்னர்களை முடி சூட்டுவது பிராமணர்கள்தான்.

ராஜாபிஷேகம்

பிராமணர்கள், மன்னருக்கு நடத்தும் முடி சூட்டும் சடங்காகிய 'ராஜாபிஷேகத்தில்' அக்னி வளர்த்து, இந்தியக் கடவுள்களின் விக்ரகங்கள், யந்திரங்கள் நிறுவி, வேதங்கள் ஓதி, தீர்த்தம் தெளித்து சடங்குகள் செய்கிறார்கள். எட்டுக் கோணங்களைக் கொண்ட சிம்மாசனத்தில் வெண் கொற்றக் குடையின் கீழ் மன்னர் அமருகிறார். மன்னர் சிவனாகவும் விஷ்ணுவாகவும் பூஜிக்கப்படுகிறார். மகாராச குரு அரசரை வணங்கி விட்டு ''கயிலாயத்தின் திருக்கதவுகள் திறக்கட்டும்'' என்ற மந்திரத்தை ஓதுவார். தேவாரத்திலிருந்து ''கற்றாயினவாறு'' எனத் தொடங்கும் பாடலைப் பாடிய பின்னர், மாணிக்கவாசகரின் திருவெம்பாவையின் ''ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி'', ''பாசம் பரஞ்சோதிக்கு என்பாய்'' என்று தொடங்கும் இரண்டு பாடல்களும் ஓதப்படுகின்றன. அதன் பின் அரசருக்குரிய சின்னங்களான செங்கோல், வாள், கவரி, பாதுகைகள் ஆகியவை மன்னருக்கு அளிக்கப்படும். மன்னர் பூமா தேவியைத் தண்ணீர் ஊற்றிப் பிரார்த்தனை செய்துவிட்டு, பிரதட்சிணம் செய்கிறார். இந்திய முடிசூடல் விழாவிற்கும், தாய் சடங்குக்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான். இந்திய மன்னர்களுக்கு பிராமணர்கள் முடி சூட்டினார்கள். தாய்லாந்து மன்னர் தானே கிரீடத்தை எடுத்து வைத்துக் கொள்வார். அவ்வளவுதான்.

இந்த ராஜாங்க விழாக்கள் தவிர, இன்னும் சில அரசு விழாக்கள் பிராமணர்களால் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் மழை வருவதையும், எந்தப் பயிர் இட்டால் விளைச்சல் நன்றாக இருக்குமென்று கணிக்கவும் 'உழவுத் தொழில் விழா' (Ploughing Ceremony) ஒன்று நடத்தப்படும். இதை புத்த பிட்சுக்களோடு பிராமணர்கள் செய்வார்கள். அதுபோல, வருடாந்தர 'த்ரியம் பவே த்ரிபாவே' என்னும் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் செய்யும் பதினைந்து நாள் பூஜையும், பிராமணர்களால் செய்யப்படுவது.

ஆயிரக்கணக்கில் இருந்த பிராமணர்கள், ராஜ குடும்பத்துக்கு செய்யும் கடைமைகள் மற்றும் சடங்குகள் தவிர, புத்த மதத்தைச் சார்ந்த தாய்லாந்தில் அவர்களது சமுதாயப் பங்கெடுப்பு குறைந்து போன சூழலில், நாளா வட்டத்தில் தாய்லாந்து முழுக்கச் சிதறிப் போனார்கள். ஆனால் அறிவுபூர்வமான தாத்பர்யங்களை இந்தச் சமுதாயத்துக்கு அளித்ததில் எண்ணிக்கையில் சிறுத்த அந்தப் பிராமணர்களுக்கு ஏராளமாய்ப் பங்கிருக்கிறது.

(தொடரும்)



''ஆபீஸ்ல எல்லாரும் பரபரப்பா வேலை செய்துகிட்டு இருக்கும்போது நான் மட்டும் தூங்கிக்கிட்டு இருந்தேன்...!''

''அடடா...?''

''நல்லவேளை... அது கனவு... முழுச்சுப் பார்த்தா ஆபீஸ்ல எல்லாரும் தூங்கிக்கிட்டுதான் இருந்தாங்க....!''

- ஏ.ஆர். வீரராகவன்

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி

P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES
Old No. 102, New No. 138, USMAN ROAD,
T. NAGAR, CHENNAI - 600 017.
PH: 4344442, 4327764 TUESDAY HOLIDAY
(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

PROPRIETOR : P. RAVINDHIRAN

எங்கு ஜோதிடம் பார்த்தாலும் **P.R.** ஜுவல்லரிக்கு வந்து ரூ.400/-க்கு ராசிக்கல் வாங்கி பயன் பெறுங்கள். கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.

ஐயப்ப பக்தர்களுக்கு துளசி மாலை, சந்தன மாலை, ஸ்படிக மாலை குறைந்த விலையில் கிடைக்கும்.

ராசி	ராசிக்கல்	வெள்ளி மோதிரம் விலை	
மேஷம், விருச்சிகம்	பவழம் -	2 CARAT	400/-
ரிஷபம், துலாம்	வைரம் -	5 CENT	2250/-
மிதுனம், கன்னி	மரகத பச்சை -	20 CENT	400/-
கடகம்	முத்து -	2 CARAT	400/-
சிம்மம்	மாணிக்கம் -	20 CENT	400/-
தனுசு, மீனம்	புஷ்பராகம் -	1 CARAT	400/-
	கனகபுஷ்பராகம் -	½ CARAT	1000/-
மகரம், கும்பம்	நீலம் -	20 CENT	400/-

தங்கத்தில் ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 1800/- முதல் 5000/-ம் வரை உடனே கிடைக்கும்.

அனைவரும் அணியக்கூடியது கார்னெட் வெள்ளி மோதிரம் விலை ரூ. 400/- இதை அணிவதால் படிப்பு, ஞாபக சக்தி, வேலை வாய்ப்பு, வியாபாரம்,

செல்வ வளம் பெருகும்.

தபால் மூலம் மோதிரம் 1க்கு ரூ 450/-

M.O. (or) D.D. அனுப்பவும்.

தபால் எழுதினால் முழு விவர பாம்லட் இலவசமாக அனுப்புகிறோம்.

கடகராசி - முத்து * சிம்மராசி - மாணிக்கம் * தனுசு ராசி, மீனராசி - புஷ்பராகம் * மகரராசி, கும்பராசி - நீலம் *

மேஷ ராசி, விருச்சிக ராசி - பவழம் * ரிஷப ராசி, துலாம் ராசி - வைரம் * மிதுன ராசி, கன்னி ராசி - மரகத பச்சை

குறிப்பு : தினசரி காலை ராஜ் டீவியில் 6.55 மணிக்கு சிறப்புப் பேட்டியை பார்க்கவும்

'ஹிந்து' நாளிதழின் இசை விமரிசகர் எஸ்.வி. கிருஷ்ணமூர்த்தி (எஸ்விகே). தமது மனசுக்குப் பட்டதை, அழகான ஆங்கிலத்தில், வெளிப்படையாக எழுதுபவர் என்ற பெயர் இவருக்கு உண்டு. அவருடன் உரையாடியதிலிருந்து...

"கைத்தட்டலை எதிர்பார்த்து கச்சேரி செய்யக்கூடாது!"

நீங்கள் பாடுவீர்களா? எத்தனை வருடங்களாகக் கச்சேரிகள் கேட்கிறீர்கள்? விமரிசனம் எழுதி வருகிறீர்கள்?

நான் பாடுவேன். வானொலியில் இருபது வருடங்கள் தொடர்ந்து பாடியிருக்கிறேன். டி.கே. பட்டம்மாள் தலைமை வகித்த வருடம், மியூசிக் அகடமியில் கூட ஒரு கச்சேரி செய்திருக்கிறேன். என் தகப்பனார் எஸ்.வி.வி. நன்றாக வீணை வாசிப்பார். அம்மா பாட்டுப் பாடுவாள். குடும்பத்தில் எப்போதும் சங்கீதம் கேட்டுக் கொண்டே இருக்கும். ஆனால் நான் முறைப்படி கற்றுக் கொள்ளவில்லை. கடவுள் கருணையால்தான் பாடுகிறேன். நாற்பது வருடங்களாகக் கச்சேரிகள் கேட்கிறேன். விமரிசனம் எழுத ஆரம்பித்தது 1972ஆம் வருட சங்கீத ஸீஸனில்தான். ஆனந்த விகடனில், மணியன் கேட்டுக் கொண்டபோது தமிழில் எழுதினேன்.



• எஸ்.வி.கே.

அந்த நாளைய - அதாவது 40/50 வருடங்களுக்கு முந்தைய கச்சேரிகளையும், இன்றைய கச்சேரிகளையும் எப்படி ஒப்பிடுவீர்கள்?

அன்றைய 'பந்த்தா' (முறை) வர்ணம், கீர்த்தனை, ஸ்வரம் எல்லாம் அப்படியே இருக்கிறது. அன்றைக்கு எது பாடினாலும் மனசில் நின்று விடும். காரணம், அப்படி சாதகம் செய்து பாடப்பட்டது. கீர்த்தனைகள் ரொம்ப கெட்டியாக இருக்கும். சங்கதிகள் அதிகம் இருக்காது. ராகம், நிரவல், ஸ்வரங்கள் எல்லாம் கற்பனையாக இருக்கும். இப்போது, நேர் மாறாக இருக்கிறது! கீர்த்தனை எல்லாம் கற்பனை. ஸ்வரம் எல்லாம் செட் பண்ணிவிட்டு வந்து



• விஜய் சிவா



• பாம்பே ஜெயஸ்ரீ



• உன்னி [illegible]

• விளாசல்....

அப்படியே பாடுகிறார்கள்.

இப்போது சரியாக சாதகம் செய்யாமல் காகிதத்தை எதிரே வைத்துக் கொண்டு பாடுகிறார்கள். அது அடுத்த கச்சேரிக்கு உதவுமா? ஒருமுறை ஆர்.ஆர்.சபாவில் கச்சேரி செய்ய அரியக்குடி நுழையும்போது, அவருக்குத் தெரிந்த ரசிகரான பிரமுகர் வந்து, 'இன்றைக்கு 'எந்துகு பெத்தல' பாடணும்' என்று கேட்டுக் கொண்டார். முடியாது என்று சொல்லி விட்டார் அரியக்குடி. 'ஒரு மாதம் முன்னாலேயே பாடம் பண்ணிக்கணும்' என்றார். அப்படி பிளான் பண்ணினார்கள் அன்றைக்கு!



• காயத்ரி வெங்கட்ராகவன்



• வீணை காயத்ரி



• சங்கீதா

உங்கள் விமரிசனக் கட்டுரைகளில் பெரும்பாலும் அன்றைய வித்வான்களையே அதிகம் புகழ்ந்து, இன்றையக் கலைஞர்களை அவர்களோடு ஒப்பிட்டு விமரிசனம் செய்கிறீர்களே?

நேச்சுரலி. ஏனென்றால் தகுதியை ஒப்பிட்டு, 'மெரிட்'டை ஓர் அளவுகோலாக வைத்துக் கொண்டு தானே செய்ய வேண்டும்? இன்றைக்கு அரியக்குடி, செம்மங்குடி ஆகியோரின் டேப்புகள், ரெக்கார்டுகள் இருக்கின்றன. அவற்றோடு 'கம்பேர்' பண்ணத்தான் வேண்டும். மனசோட ஒட்டவில்லை என்றால், மனசில் தங்கவில்லை என்றால், அந்த அளவுக்கு வரவில்லை என்று சொல்லி விட வேண்டியதுதானே நேர்மை?



• ரஞ்சனி – காயத்ரி



• டி.எம். கிருஷ்ணா

இன்றைய இளம் கலைஞர்கள் 'சான்ட்ரோ'வில் போவதாகவும், பாடகிகள் பளபளவென்று அலங்காரம் பண்ணிக் கொண்டு மேடைக்கு வந்து ஜொலிப்பதாகவும் கூட தீரிந்துவில் விமர்சனம் வெளியாகி இருக்கிறது. பாட்டை மட்டும் விமர்சனம் செய்தால் போதாதா?


நீங்கள் குறிப்பிடும் விமர்சனம் நான் எழுதவில்லை. வேறொருவர் எழுதியது. அதற்கு டி.எம். கிருஷ்ணா எழுதிய பதிலையும் வெளியிட்டிருந்தோம். இசைக் கலைஞர்கள் இன்றைக்கு நிறையச் சம்பாதித்து வசதியுடன் இருக்கிறார்கள். அதில் தவறே இல்லை என்ற கருத்து உள்ளவன் நான். அமெரிக்கா, லண்டன் என்று, பறந்து பறந்து கச்சேரிகள் செய்கிறார்கள். திரைகடலோடியும் திரவியம் தேடு என்று அன்றைக்கே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அதைக் கடைபிடிக்கும் போது நான் குறை காண்பதில்லை.

இப்போது சஞ்சய், டி.எம். கிருஷ்ணா, ரஞ்சனி-காயத்ரி, காயத்ரி வெங்கட்ராகவன், வீணை காயத்ரி, சங்கீதா சிவகுமார் தவிர மீதி எல்லோரையும் மட்டம் தட்டி எழுதி

சீஸன் சிறப்புப் பக்கம்

விடுகிறீர்கள்...

(பலமாகச் சிரிக்கிறார்) மட்டம் தட்டி எழுதுவதில்லை. இதே ரஞ்சனி-காயத்ரியை 'கானடா ராகம் இவ்வளவு நீளம் பாட வேண்டுமா?' என்று எழுதியிருக்கிறேன். சஞ்சய்யைக் கூட அவ்வப்போது தவறுகளைச் சுட்டிக்காட்டி எழுதியிருக்கிறேன். சங்கீதா முன்பு பாடியது போல் இப்போது பாடவில்லை; நன்றாக இம்ப்ரூவ் செய்திருக்கிறார். முன்னேற்றம் இருந்தால் அதையும் ஒப்புக் கொண்டுதான் எழுதி வருகிறேன். அந்தக் காலத்துப் பாடகர்களிடம் அடித்தளம் நன்றாக இருந்தது. கொஞ்சம் வேரியேஷன்ஸ் இருக்கும். தொண்டை, மூட் கொஞ்சம் மாறும்.



அவ்வளவுதான். இன்றைக்கு அப்படி இல்லையே? தீட்சிதர் தினத்தன்று, சமீபத்தில் சஞ்சய் கச்சேரி செய்தார். ஒரு வாக்கேயக்காரரின் நினைவு தினம் என்றால் அவருடைய கீர்த்தனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாட வேண்டும். அன்றைக்கு அவர் கீர்த்தனைகளை நன்றாகப் பாடினார். ஆனால் ஸ்வரம் அதிகமாக இருந்தது! இதையும் எழுதியிருக்கிறேன்.

விஜய் சிவா, பாம்பே ஜெயஸ்ரீ, உன்னிகிருஷ்ணன் - இவர்களின் ஒவ்வொரு கச்சேரியையும் விளாசித் தள்ளுகிறீர்களே, ஏன்?

ரொம்ப லைட்டாக, லைட் மியூசிக் மாதிரி பாடினால், வேறு எப்படி எழுதுவது? ஆழம் இருக்க வேண்டாமா? வார்த்தைகளை ரொம்பவும் அழுத்தி அழுத்திப் பாடினால் அழகே போய் விடுகிறது. பாட்டை ரசிக்க முடிவதில்லை. இதைத்தான் குறைகளாக எழுதுகிறேன். அதனால்தான் குறைகளை எழுதுகிற மாதிரி இருக்கிறபோது, முன்னுரை மாதிரி நான் என்ன எதிர்பார்க்கிறேன் என்பதை, என் அபிப்ராயமாக முன்னாலேயே எழுதுகிறேன். எனக்குத் தனிப்பட்ட கலைஞர் எவர் மீதும் காழ்ப்பு உணர்ச்சி கிடையாது. நன்றாக இருந்தது என்றால், வீணாகக் குறை சொல்லுவதும் இல்லை.

நீங்கள் எந்த மாதிரிக் கச்சேரியை எதிர்பார்க்கிறீர்கள்?

கச்சேரிக்குப் போனால், மனசுக்கு ஒரு நிம்மதி வர வேண்டும். எம்.எஸ்., எம்.டி. ராமநாதன் கச்சேரிகள் அப்படி இருக்கின்றன. கச்சேரியில் விறுவிறுப்பும் குறையக் கூடாது. விச்ராந்தியாகவும் இருக்க வேண்டும். கைத் தட்டலை எதிர்பார்த்துக் கச்சேரி செய்யக் கூடாது. சுருதி சுத்தமும், வாக்குச் சுத்தமும் அவசியம். சாந்தம் மிக முக்கியம்.

உங்கள் விமர்சனங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டவை என்கிறீர்களா?

என்னுடைய விமர்சனங்களில் எனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கு இடமே கிடையாது. நான் கேட்கிற அன்று அந்தக் கச்சேரி எப்படி அமைகிறதோ, அதைப் பொறுத்துத்தான் விமர்சனம் எழுதுவேன். கச்சேரி நன்றாக அமைய வேண்டுமே என்றுதான் நானும் எதிர்பார்ப்போடு போகிறேன். குறை கூறும் நோக்கோடு நான் எழுதுவதில்லை. எனவே, என் விமர்சனங்கள் நடுநிலையாக இருப்பதாகத்தான் நான் நினைக்கிறேன்.

சந்திப்பு : **சாருகேசி**

படங்கள் : **வெங்கடேஷ்**



மனம் உருகுதே

29

"ஆஹா... இது ராதாகிருஷ்ணனுக்கும் வசதி. நிதானமா நிலம் வாங்கி திடமா அஸ்திவாரம் போட்டு, மெல்ல மெல்ல வீடு கட்டி, கிரஹப்பிரவேசம் பண்ணி அப்புறம் வீடு எப்படி இருக்கும்னு பார்த்து, அங்கங்க ஏதாவது சிரமம் இருந்தா அதை யும் சரி பண்ணி நிம்மதியா குடி போகலாம். இல்லை, ஒண்ணுக் குப் பத்து கட்டின வீடா பார்த்து, எது பிடிச்சிருக்கோ அங்க குடி போகலாம்."

சங்கரய்யர் வட இந்திய பனியாவிடம் உற்சாகமாகப் பேசி



னார்.

ராதாகிருஷ்ணன் வீட்டு நடுக்கூடத்தில் சகலமும் கையெழுத்தாயிற்று.

எல்லோரும் போன பிறகு ரேவதியும் ராதாகிருஷ்ணனும் தனித்து விடப்பட்டார்கள். "இதுல சங்கரய்யருக்கு என்ன லாபம்? கமிஷன் இருக்குமே" அடிக்குரலில் கேட்டார்.

"அவரைப் போய் கமிஷன் வாங்கறவர் மாதிரி எப்படி உங்களால யோசிக்க முடியறது? சங்கரய்யர்னா குதர்க்கமாகவே யோசனை பண்றதுக்கு நீங்க ஏன் முயற்சி பண்றேள்? அந்த விதத்துல அவரோட நீங்க போட்டி போடறேள். அல்லது அவர் உங்களோட போட்டி போடறார். எல்லாரையும் அரவணைச்சுண்டு போற அவரோட நல்ல குணம், எல்லாருக்கும் உதவி செய்யணுங்கற அந்த ஆவல் உங்களுக்குப் புரியவே இல்லையா? இத்தனை ஜனம் ஓடிவருதே, ஏன்னு யோசனை பண்ணிப் பார்த்தேளா. அந்த ருக்மணி அவர் வீட்ல வேலைக்காரி மாதிரி இருக்கா. அவளுக்குக் கல்யாணமாகி ரெண்டு பசங்க இருக்கு. பள்ளிக்கூடத்துல கொண்டு போய் குழந்தைகளை விட்ட கையோட, இந்தப் பக்கம் ஓடி வந்து இங்க இருக்கற எல்லா வேலையையும் தானா இழுத்துப் போட்டுண்டு செய்யறா. இனி வாழ்க்கையே இல்லை. எல்லாம் முடிஞ்சு போச்சுன்னு கிடந்தவளாம். சின்னதா ஒரு தப்புப் பண்ணி, அது பெருசாகி நிறைய அவமானத்துல தத்தளிச்சு, இனிமே கல்யாணம் ஆகாதுங்கற இடத்துக்கு எல்லாரும் முடிவு பண்ணி.... அப்படி இல்லைன்னு சொல்லி இவர் பார்த்து, பண்ணி வச்ச கல்யாணமாம். குழந்தை பிறக்காதுன்னு யாரோ சொல்ல, இல்லை பிறக்கும்ன்னு இவர் சொல்லி ஒண்ணுக்கு ரெண்டு குழந்தையா பெத்துண்டிருக்கா. மூணு மணிக்கு குழந்தைகள் பள்ளிக்கூடம் விட்டுத் திரும்பறபோது அதுங்களைக் கூட்டிண்டு வந்து அதுக்கப்புறம்தான் அவ வீட்டு வேலையை ஆரம்பிப்பாளாம்.

"ருக்மணியோட புருஷன் வீட்டுக்குள்ள படியேறினவுடனேயே இன்னிக்கு சங்கரய்யர் வீட்டுக்குப் போனியா? அப்படின்னுதான் கேட்பாராம். போகலைன்னு சொன்னா வருத்தப்படுவாராம். நமக்கென்ன பண்ணினார்னு கேட்காதிங்கோ. இவ்வளவு காசு வரும்னு நான் நினைக்கவேயில்ல. இந்த வீட்டை விட்டுப் போறதுல வருத்தமாயிருந்தாலும் வெறுமனே அனுப்பலை. கையில காசோட அனுப்பறான். இது நல்ல காசு. நாம எங்கேயாவது சென்னைக்கு ஒதுக்குப்புறமா நல்ல வீடு கட்டிண்டு நிம்மதியா இருக்க முடியும். சங்கரய்யருக்கு கமிஷன்; இதெல்லாம் மனசுக்குள்ள நினைக்கக் கூடாது. எப்போதாவது பேச்சா வெளிய வந்துடும். அது நமக்குக் கஷ்டத்தைக் கொடுத்துடும்.

"உங்களை நம்பி, உங்களைப் பார்த்து அந்த

பணியா இன்னும் ஒரு வருஷம் இருன்னு சொல்லலை. சங்கரய்யர் மேல உண்டான நம்பிக்கை. சங்கரய்யருடைய ஆள் நீங்கங்கறதுனால உண்டான நம்பிக்கை. ஒரு வருஷம் இருங்கன்னு சொல்றான். மனிதர்களுக்கு மனிதர்கள்மேல நம்பிக்கை வரணும்னா இன்னொரு மனிதன் சொல்ல வேண்டியிருக்கு. ஒருத்தன் நல்லவன்னு முகத்தைப் பார்த்துத் தெரிஞ்சுக்க முடியலை. ஜாதகம் பார்த்துப் புரிஞ்சுக்க முடியலை. இன்னொரு மனுஷன் இவன் ரொம்ப நல்லவன்னு சொன்னா சந்தோஷமாக இருக்கு. சரின்னு உடனே தலையாட்டறாங்க. அப்படிச் சொல்ற மனுஷன் சத்தியத்துக்குக் கட்டுப்படறவனா இருக்கறதப் பார்த்தவுடனே நம்பிக்கை இன்னும் அதிகமாகறது.

சங்கரய்யரால இதுவரைக்கும் நமக்கு நிறைய நல்லது நடந்திருக்கு, இனியும் நடக்கும்."

ராதாகிருஷ்ணனின் மனைவி ரேவதி பேசிக்கொண்டிருக்கும்போதே டெலிபோன் அடித்தது.

ராதாகிருஷ்ணன் எடுத்தார்.

"வரேனே... உடனே வரேனே. ரேவதியையும் கூட்டிண்டு வரவா. வரேனே. ஒண்ணும் வேலையில்லை. கம்பெனியைத்தான் மூடிட்டானே. சும்மா உட்கார்ந்துண்டு பேசிண்டிருக்கோம். ஆஹா... நிச்சயமா வரேன்."

பரபரப்பாக ராதாகிருஷ்ணன் பேசி முடிக்க, "யாரு, சங்கரய்யரா" என்று ஆவலாக ரேவதி கேட்டாள்.

சங்கரய்யர் அழைப்பதாக விவரம் சொன்னதும், அடுத்த பத்து நிமிடத்தில் இரண்டு பேரும் மிகச் சீராக உடுத்திக் கொண்டு சங்கரய்யர் வீட்டுக்குள் படியேறினார்கள்.

அன்றைக்கு விசேஷமாக இருபது பேர் கூட்டம் ஒன்று சங்கரய்யரின் எதிரே உட்கார்ந்திருந்தது. உட்கார்ந்திருந்த எல்லோரும் இளைஞர்கள், யுவதிகள்.

"இவா எல்லாரும் காலேஜ் ஸ்டூடண்ட்ஸ். ஜர்னலிசம் படிக்கறாளாம். கடவுள் என்கிற விஷயம் பத்தி பேட்டி எடுக்கறதுக்காக எங்கிட்ட வந்திருக்கா. இது நியாயமா?"

"கடவுளைப் பத்தி தெரிஞ்சுக்க உங்ககிட்டதான் வர முடியும். கடவுள்கிட்டயா போக முடியும்?"

ரேவதி சொல்ல, அங்குள்ள இளைஞர்களும், யுவதிகளும் வாய் விட்டுச் சிரித்தார்கள்.

"அப்போ என்ன சொல்றீங்க? இவர்தான் கடவுள்னு சொல்றீங்களா, இல்லை. இவர் ரெப்ரெசன்டேஷன்னு சொல்றீங்களா?"

பின்னாலிருந்து சற்று உயரமான அடர்த்தியான மீசை வைத்த இளைஞன் கேள்வி கேட்டான்.

"கடவுள் அவதாரம்னு சொல்றேன். கடவுள் இங்கு வந்து சங்கரய்யராகப் பிறந்திருக்கார்னு சொல்றேன்."

ரேவதி திடமாகப் பேசினாள்.

ராதாகிருஷ்ணன் அவளை வியப்போடு பார்த்தார்.

"அதை அவரில்ல சொல்லணும்."

அதே பையன் உரத்த குரலில் பேசினான்.

"அவர் ஏன் சொல்லணும். நான்தான் சொல்லுவேன். என்னை மாதிரி இருக்கறவங்க சொல்லுவாங்க" என்று சொல்ல ருக்மணி கைகொட்டி ஆதரித்தாள்.

> "முன்னாள் அமைச்சரா இருக்கறதுல சந்தோஷப்படறீங்களா... ஏன்...?"
> "எப்ப பதவி போகும்னு பயந்துகிட்டே இருக்க வேண்டாம் இல்லையா...!"
> – தமிழ்

"கடவுள் அவதாரமா அல்லது கடவுள் தன்மை கொண்ட மனிதரா?"

ஒரு பெண் குரல் உயர்த்தி கேள்வி கேட்டது.

"இந்த ரெண்டுக்கும் என்ன பெரிய வித்தியாசம் இருக்கு. அப்படியே வித்தியாசம் இருந்தாத்தான் என்ன? அது உங்க பார்வை. இது என்னுடைய பார்வை."

ரேவதி மீண்டும் தெளிவாகப் பதில் சொன்னாள்.

"ஒரே ஒரு கேள்வி. கடவுள் உண்டா அதுக்கு பதில் சொன்ன பிறகுதானே அவதாரம்கற விஷயம் பத்திப் பேச முடியும்."

அதே இளைஞன் மீண்டும் பேசினான்.

அவன் கடவுள் மறுப்பு இயக்கத்தைச் சேர்ந்தவன் போல் இருக்கிறதே என்று ராதாகிருஷ்ணன் நினைத்துக்கொண்டார்.

"இந்தக் கேள்வியே முட்டாள்தனம்."

ராதாகிருஷ்ணன் பதில் சொல்ல ஆரம்பித்தார்.

எல்லோரும் அவரை நோக்கித் திரும்பினார்கள்.

"அவர் பேர் ராதாகிருஷ்ணன். இவங்க பேர் ரேவதி. ராதாகிருஷ்ணன் மனைவி. ராதாகிருஷ்ணன் எக்ஸ்போர்ட் கம்பெனியில மேனேஜர்" என்று சொல்லி சங்கரய்யர் அறிமுகப்படுத்தினார்.

கூட்டத்திலுள்ளவர்கள் கை கூப்பினார்

கள்.

"கடவுள் இருக்காரான்னு கேள்வி கேட்காத. தேடிப்பாரு. உனக்குக் கிடைக்கலையா, இல்லைன்னு சுத்தமா நம்பு. இருக்கிறார்னு சொல்றவங்கிட்ட கேள்வி கேட்டா, உனக்குக் கடவுள் தெரிஞ்சுடுமா. கடவுள் தெரியணும்னா நீ தேடணும். ஒண்ணு கடவுள் இருக்கார்னு நம்பு. இல்ல, கடவுள் இல்லைன்னு இரு. கடவுள் இருக்கிறாரான்னு கேள்வி கேட் காதே."

"நான் இல்லைன்னு சொல்றேன். இருக்கார்னு சொல்றவர்கிட்ட கேள்வி கேட்கறேன்."

"அவர்தான் இருக்கார்னு தெள்ளத் தெளிவா இருக்காரே. அப்புறம் என்ன கேள்வி."



"இல்லாத விஷயத்தை இருக்குன்னு சொல்றாரே."

"அவர் சொல்லலாமில்லை, நீங்கதான் இருக்கற விஷயத்தை இல்லைன்னு சொல்றீங்கன்னு."

மறுபடியும் அந்த மாணவர்கள் சிரித்தார்கள்.

"இது விதண்டாவாதம்."

"ஆமாம். இதை நீ இப்படித் தொட்டீன்னா, விதண்டாவாதமாத்தான் போகும். நீ கடவுளை உணர்ந்த விதம் எப்படி அப்படின்னு என்னைக் கேளு. நான் அதுக்கு பதில் சொல்றேன். அல்லது யார் நம்பறாங்களோ அவங்களைக் கேளு. ஆளுக்கொரு விதமா பதில் சொல்லுவாங்க. ஏனெனில் கடவுள் எல்லோருக்கும் ஒரே விதமாகக் காட்சி அளிப்பதில்லை. கடவுள் என்பது ஒரு சத்திய உணர்வு. அதை வெளிப்படுத்துகிறபொழுது, எங்களோடு பகிர்ந்து கொள்கிற பொழுது, என் மனம் விதம்விதமான விஷயங்களை உங்களுக்குச் சொல்ல முற்பட்டு ஒரு கலவையாக வந்து நிற்கும். சொல்லப்படாதவரை கடவுள் என்பது உருவம். உருவே இல்லையென்று சொல்லுகிற பொழுதுகூட, அப்படிப் பேசுகிறவர்கள்கூட ஒரு உருவத்தைத்தான் இறுக்கப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். கடவுள் நின்ற இடம், இருந்த இடம், கிடந்த இடம் என்று ஏதோ ஒரு கட்டடத்தைத் தங்களுடைய வழிபாட்டுத் தலமாக மாற்றியிருக்கிறார்கள். கடவுளை வழிபடுகிற ஆலயத்தை தங்களுடைய சின்னமாகப் பொருத்திக் கொள்கிறார்கள். உன்னை நீ உருவமாகக் கொண்டுள்ள வரையில் உருவமற்றதை வணங்கவே முடியாது."

"கடவுளை வணங்க எது சரியான வழி?"

"நீங்கள் எதைப் பின்பற்றுகிறீர்களோ, எதைப் பின்பற்ற வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றுகிறதோ அதுவே சரியான வழி. இன்னவிதமாக வணங்குவதுதான் சரி என்று எவர் சொன்னாலும் அது முட்டாள்தனமாகப் போகும்."

"ஸாரி ஸாரி என்று சொன்னால் போதும். வேறு எதுவும் செய்ய வேண்டாம் என்று ஒருவர் பத்திரிகையில் பேட்டி கொடுத்திருக்கிறாரே."

"இதுவும் தவறு. கடவுள் இன்னது என்று கண்டு கொண்டவன் இந்த வழியில் போங்கள். இவ்விதமாகக் கடவுள் இருப்பார் என்று சொன்னதேயில்லை. கடவுள் என்பது பற்றி யாருக்கு கிஞ்சித்தும் தெரியாதோ அவர்கள் தான் கடவுள் இது, கடவுள் இன்னவிதம், கடவுளுக்கு இது போதும் என்றெல்லாம் சொல்லுகிறார்கள்."

"சரி, கடவுள் என்பதுதான் என்ன?"

"அதைத்தான் கேட்காதீர்கள் என்று அவர் சொல்லுகிறார். ராதாகிருஷ்ணன் சொல்வது மிகச் சரி. கடவுள் எப்படி இருப்பார் என்று எவர் கேட்டாலும் அவருக்குப் பதில் சொல்பவர் தவறாகத்தான் பதில் சொல்லுவார். பதில் சொன்னவர் சரியாகச் சொன்னாலும் கேட்டுக் கொள்பவருக்குத் தவறாகத்தான் தோன்றும். ஏனெனில் இது பரிமாறிக் கொள்ளுகிற விஷயமில்லை. உன் வீட்டு வைக்கோல் போரில் நெருப்பு பிடித்ததே. நெருப்பு எப்படி எரிந்தது என்றால், என்ன சொல்ல முடியும். வினாடிக்கு வினாடி மாறிக் கொண்டிருக்கின்ற நெருப்பை எப்படி வர்ணிக்க முடியும். தகதகவென்று எரிந்தது என்று சொன்னால் அது போதுமா, அப்போது கேட்பவர் நெஞ்சில் ஒரு நெருப்பு தோன்றும். அது இவர் பார்த்த நெருப்பல்ல. அவரே அதற்கு முன்பு பார்த்த நெருப்பு. எங்கோ, எப்பொழுதோ பார்த்த நெருப்பு. ஆக, சாதாரணமாக நெருப்பு என்கிற விஷயத்தையே, நம்மால் துல்லியமாக, பார்த்ததை பார்த்தவிதமாக வெளியே சொல்ல முடியவில்லை. நமக்குச் சொல்லத் தெரியவில்லை. பரிமாறிக் கொள்ள முடியவில்லை. தொடர்பு சாதனம் இங்கு அத்தனை குப்பையாக

இருக்கிறபொழுது மொழி, கதை, கட்டுரை எல்லாம் பலவீனமாக இருக்கிறபொழுது, கடவுள் என்கிற விஷயத்தைப் பற்றி எப்படி பரிமாறிக் கொள்ள முடியும். அதை நீங்கள் தான் உணர வேண்டும்."

"சரி, அப்போது உங்களுடைய வேலை என்ன?"

வேறொரு இளைஞன் கேட்டான்.

"கடவுளைத் தேடுகின்ற வழி என்ன என்று ஒரு கேள்வி வருமல்லவா. அதற்குச் சொல்லிக் கொடுப்பது."

"அதுதான் ஹரி ஹரி என்று சொன்னால் போதுமென்று சொல்கிறார்களே."

"அவர் அது மட்டும் சொல்லவில்லை. ஹரி ஹரி என்று சொன்னால் போதும். ஸ்ரீவித்யையோ, ஆத்ம விசாரமோ, வேறு வித வழி பாடுகளோ வேண்டாம் என்றும் சொல்கிறார்."

"இது மகாபாரதம். நானும் அந்தக் கட்டுரையைப் படித்தேன். மிகத் தவறான வழியில் அவர் பதில் அமைந்திருக்கிறது. சனாதன தர்மத்தின் அத்தனை வேதங்களும் ஆத்ம விசாரத்தைப் பற்றித்தான் பேசுகின்றன. ஆத்ம விசாரப்படவில்லையெனில், நான் யார் என்ற கேள்வி இல்லையெனில் வேறு என்ன செய்தும் புண்ணியமில்லை. ஸ்ரீ வித்யை என்கிற அற்புதமான ஒரு வழி. மந்திர ஜபங்களும், யந்திர பூஜையும் நிறைந்த அந்த வழி, உங்களுக்கு ஆத்ம விசாரத்தைக் கொண்டு வந்து கொடுக்கிறது. ஆத்ம விசாரத்திலெல்லாம் நாட்டம் செலுத்தாதீர்கள் என்று எவர் சொன்னாலும் அது அபத்தம்; தற்குறித்தனம்."

சங்கரய்யர் பேச்சில் மெல்ல ஒரு கோபம் கொப்பளித்தது.

"தன்னை விசாரித்தல், தான் யார் என்று அறிதல், தன்னை அறிதல் மூலமாக அடுத்து இருக்கின்ற ஜனங்களின் இருப்பைப் பார்த்தல், அவரும் நானும் ஒன்றே என்று தெளிதல், சகலமும் ஒரே விஷயம் பிளவுபட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுதல். இதைச் சத்தியமாக, நேரடியாக, தெளிவாக, முழுமையாக அனுபவித்தல், இந்த அனுபவத்தைத் தான் பலரும் நாடிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

அதற்குப் பல வழிகள் இருக்கின்றன. இசை தொழுதலும், சிலுவையை வணங்குவதும் மற்ற எல்லா மதங்களும் சொல்லுகின்ற கடவுள் தேடும் வழியும், ஆத்மவிசாரத்தைத் தான் நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆத்ம விசாரம் வேண்டாம் என்று யார் சொன்னாலும் அது அபத்தத்தின் உச்ச கட்டம். ஆத்ம விசாரம் எல்லோருக்கும் வராது என்று சொன்னாலும் அதுவும் முட்டாள்தனம். இங்கு நடக்கின்ற கடவுள் வழிபாடு எல்லாமுமே ஆத்ம விசாரம் கற்றுக் கொடுப்பதைத்தான் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன."

சங்கரய்யர் வேகமாகப் பேசினார்.

(தொடரும்)

ராஜா படம்!

சேதுவில் 'விக்ரமை'யும், நந்தாவில் 'சூர்யா'வையும் பேச வைத்த இயக்குனர் பாலா, 'பிதாமகனி'ல் இருவரையும் சேர்த்து களமிறக்குகிறார். "விக்ரம், சூர்யா படமாக இருக்குமா? இல்லை, இயக்குனர் பாலா படமாக இருக்குமா?" என்று கேட்டால், "இல்லை; நிச்சயம் இது இளைய ராஜா படமாகத்தான் இருக்கும்" என்று ஒரே போடு போடுகிறார். "முழுக்க முழுக்க கிராமத்துக் கதை. தமிழ் சினிமாவில் இதுவரை பார்த்திராத கேரக்டர்களை இதில் பார்க்கப் போகிறீர்கள்" என்கிறார் பாலா. நெசமா?

— அப்பு





கல்கி


ChennaiOnline
all @bout the city.



கல்கி
சென்னை ஆன்லைன்
இணைந்து வழங்கும்

இசை விழா
தொகுப்பு







visit @: www.chennaionline.com/musicseason2002

சுகமான சவாரிக்கு...!






சன் டீ.வி.யில் ஒரு சுவாரஸ்யமான கதையைச் சொன்னார் தென்கச்சி சுவாமிநாதன். "இந்த வாழ்க்கையே அநித்யம்" என்று அடிக்கடி தத்துவம் பேசும் ஒருவனிடம் கடவுள் வந்து "என்னுடன் மேலே வந்து விடுகிறாயா?" என்று பல்வேறு கால கட்டங்களில் கேட்க, "எனக்கொரு குழந்தை பிறக்கட்டும், வந்துடறேன்", "பையனுக்குக் கல்யாணமாகட்டும் வரேன்", "தாத்தா வானதும் வந்துடுவேன்" என்று தட்டிக் கழித்துக் கொண்டே வந்தானாம். மிகவும் வயதானவுடன் இயற்கையான மரணம் சம்பவிக்க, நாயாய்ப் பிறவி எடுத்தானாம் அவன்! அப்போதும் கடவுள் அவனிடம் அதே கேள்வியைக் கேட்க, "ராத்திரியிலே என் பேரப்பிள்ளைங்க கடையைச் சரியா பூட்டறாங்களான்னு சந்தேகமா இருக்கு. நான் காவல் காக்கணும். மத்தபடி இந்த உலக வாழ்க்கையிலே எனக்குப் பிடிப்பில்லே" என்று பதில் வந்ததாம்!

இது நாம் கேள்விப்பட்ட, தென்கச்சியார் சொல்லாத (?) ஒரு கதை : "எனது சின்ன குடிசையில் எட்டுப் பேர் வசிக்க வேண்டியிருக்கிறது" என்று ஒரு சாமியாரிடம் துக்கப்பட்டுக் கொண்டானாம் ஒருவன். "உன்னிடம் இருக்கும் மாடுகளையும் இரண்டு நாள் உன் குடிசைக்குள்ளேயே தங்க வைத்துக்கொள்" என்றாராம் சாமியார். வேறு வழியில்லாமல் அதையும் செய்து முடித்தவனிடம் "இப்போது அந்த மாடுகளை வெளியே விட்டுவிடு" என்றாராம் சாமியார். அடுத்த நாள் அவரிடம் ஓடி வந்த அந்தப் பரிதாபத்துக்குரியவன் "சாமி, இப்ப என் குடிசையிலே எங்க எட்டுப் பேருக்கும் ஏராளமான இடமிருக்கு" என்றானாம் ஆனந்தம் பொங்க. அதுபோல்தான் இருந்தது ஜெயா டீ.வி.யில் பேட்டி கண்ட சென்னைவாசிகளின் கருத்து. அடைமழையால் பாதிக்கப்பட்ட சாலைகளில் அங்கங்கே சீர் செய்தவுடன் "சாலைகள் இப்ப அருமையா இருக்குங்க" என்றார்கள் ஆனந்த வெள்ளம் பொங்க. போதாக்குறைக்குச் சென்னை மாநகராட்சி ஆணையர் கலைவாணன் வேறு "சுகமான சவாரிக்குச் சென்னை சாலைகள்" என்பதாக வர்ணித்தார்!

முன்பெல்லாம் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சியின் போது அப்துல் ஹமீதின் முகத்தில் எந்தக் கவலை ரேகையும் தெரியாது. ஆனால் சமீபத்தில் ஓர் இதழில் 'சரக்கு வச்சிருக்கேன் போன்ற மிக விரசமான அர்த்தம் கொண்ட பாடல்களுக்கு ஒரு அண்ணனும் தங்கையுமே மேடையில் ஆடிய அவலம் குறித்து' அவர் மிகவும் வருத்தப்பட்டதைப் படித்தபிறகு, மேற்படி நிகழ்ச்சியில் கைகால்களை ஆட்டியபடி, பலவித சமீபப் பாடல்களைப் பாடும்போது அவர் முகத்தில் ஒரு துக்கத் திரையைக் காண முடிகிறது.

- சேனல் பாய்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்



யசோதைக்குத் தன் வாயினுள் வையம் முழுவதையும் காட்டிய எம்பெருமான், அதற்கப்புறம் திருதராஷ்டிரனிடம் தூது போகிறபோது மீண்டும் தன்னை வெளிப்படுத்தினான். விச்வரூபத்தைக் காட்டினான்.

வேறு ஒருத்தராலேயும் பார்க்க முடியவில்லை அந்த விச்வரூபத்தை - திருதராஷ்டிரனுக்கு மட்டும் திவ்யமான நேத்திரத்தைக் கொடுத்துப் பார்க்கச் செய்தான் பரமாத்மா.

நான் குருடனாகப் போய்விட்டேனே! குருடனாகப் போய்விட்டேனே என்று திருதராஷ்டிரன் வருத்தப்பட்டானாம். அந்த நேரத்தில் பரமாத்மா சொன்னான் : "குருட்டுத்தனமும் நல்லதுதான்! எல்லோரும் திரௌபதி வஸ்திராபஹரணம் பண்ணுகிறபோது பார்த்துக் கொண்டிருந்தார்கள்; உனக்குக் கண்ணில்லாததனாலே நீ பாராது போனாய். நீதான் உத்தமமான ஆத்மா!" என்றான்.

குருடும் செவிடுமாக இருந்தால், அனாவசியமானவற்றின்பால் இந்த இந்த்ரியங்கள் ஈடுபடாமல் இருக்க முடிகிறது!


அப்படிப்பட்ட திருதராஷ்டிரனுக்குப் பார்வையையும் கொடுத்து விச்வரூப தரிசனமும் அளித்தான் பெரும் சபையிலே.

மறுபடியும், தானே ரிஷீகேசன் என்று காட்டுகிற ரீதியிலே, கீதையின் பதினோராவது அத்தியாயத்திலே, அர்ஜுனனுக்கு எதிரில் மறுபடியும் விச்வரூபம்.

இவ்வாறாக பரமாத்மா கிருஷ்ணன், சின்ன வயதிலிருந்தே தன்னைக் காட்டிக் கொண்டே வந்தான்.

ஆகவே எல்லா கர்மாக்களினாலும் பரிபூரணமாய் ஆராதிக்கப்படக்கூடியவன், எல்லா இடங்களிலும் நிறைந்து வியாபித்து நிற்பவன் எம்பெருமான்தான்.

குறையொன்றுமில்லை



எல்லாவற்றையும் விழுங்கி நிற்பவன் அவனே – அது பித்ரு கர்மாவாகட்டும், யக்ஞகர்மாதிகளாகட்டும் – ஹவிஸ்ஸையும் கவ்யத்தையும் உண்பவன் அவன்தான்.

அவனுக்கு ஏற்றாற்போல் நாம் விதவித மாய்ப் பண்ணிச் சமர்ப்பிக்கிறோம். பித்ரு கர்மாக்களின்போது பித்ருக்களை உத்தேசித்துப் பண்ணுகிறோம். அதிலும் எம்பெருமான்தான். யக்ஞகர்மாதிகளில் தேவதைகளை அழைத்துச் சமர்ப்பிக்கிறோம். அதையும் எம்பெருமான் தான் ஏற்கிறான். திருப்தி அடைவது அவன் தான்.

ஆகையினால் 'சர்வ கர்ம சமாராத் யத் வேன பரமாத்வத்வம்' அவனிடத்திலே.

அதற்கு மேல் அவனிடத்திலே பார்த்தோமானால், தன்னுடைய திவ்ய திருமேனி மட்டுமின்றி, அனைத்தையும் தனக்குச் சரீரமாக உடையவன் பரமாத்மா. எல்லாவற்றுக்கும் அந்தராத்மாவாக இருப்பதனாலே, அவன் பரமாத்மாவாகிறான்.

அதற்கும் மேலே, அவனிடத்திலே சத்ய காமத்வம், சத்யசங்கல்பத்வம் என்கிற உயர்ந்த லட்சணங்கள் இருப்பதனாலே, எடுத்த காரியத்தை நிறைவேற்றுவான். அவன் எண்ணம் வீணாவதில்லை – இந்த உயர்ந்த குணங்களும் அவனிடத்தில் விசேஷமாக அமைந்திருக்கின்றன.

அதற்கும் மேலே, முமுக்ஷுபாஸ்பத்வம் என்ற லட்சணம். மோக்ஷத்தை விரும்பக் கூடியவர்கள் உபாஸிக்க வேண்டிய மூர்த்தியாய் அவன் இருக்கிறான்.

அதனால்தான் முமுக்ஷுபாஸ்ய தேவதை யார் என்பதை ஆதிசங்கர பகவத் பாதாள் ந்ருசிம்ஹ தாபனீய உபநிஷத்தில் எடுத்துக் காட்டுகிறார்.

அதையே எல்லா ஆசார்யர்களும் விசேஷமாக வலியுறுத்துகிறார்கள். ராமானுஜர் என்ன, சுவாமி தேசிகன் என்ன, உபநிஷத் பாஷ்யகாரர்களென்ன, மாத்வாச்சார்யர் என்ன... எல்லோருமே மோக்ஷத்தை அளிக்கக் கூடிய தேவதை யார் என்றால், 'நரசிம்ஹன்' என்று காட்டுகிறார்கள்.

நாரசிம்ஹ வபு ஸ்ரீமான் என்று சஹஸ்ர நாமத்திலே பின்னாலே வருகிறது.

இந்த நரசிம்ஹன் இருக்கிறானே, அவன் ரொம்பப் பெரிய தேவதை. சாமானியர்களால் ஆராதிக்க முடியாது.

அதனால்தான் பரமாத்மா அஹோபில க்ஷேத்திரத்திலே, ஆதியிலே அறுநூறு வருஷங்களுக்கு முன்பு, உயர்ந்த அந்த ஸ்ரீநிவாஸாசார்யாருடைய கனவிலே தோன்றினார்.

திருநாராயணபுரத்திலே, ஆத்ரேய கோத்ரத்திலே, கிடாம்பி வம்சத்திலே அவதரித்தார் ஸ்ரீநிவாஸாசார்யார். அவர் பிரும்மச்சாரியாக

> ''ஆபீசுக்குப் போக குதிரை வாங்கியிருக்கீங்களா...! எதுக்கு சார்?''
>
> ''பஸ்சுல உட்கார்ந்து போனாலும் குதிரைச் சவாரி பண்றமாதிரிதான் இருக்கு. அதுக்கு குதிரையிலேயே போகலாமேன்னு தான்!''
>
> – சீர்காழி வி. ரேவதி

வாழ்ந்து வந்தார். அவர் ஸ்வப்பனத்திலே தோன்றி, அவரை அஹோபிலத்துக்கு வரவழைத்து, பகவானே சன்னியாசியாக நின்றான். ஒரு சன்னியாசிதான் மற்றொரு சன்னியாசிக்கு சன்னியாசத்தைக் கொடுக்க முடியும். அங்கே முதல் சன்னியாசி யார் என்றால், பகவானேதான்; நரசிம்ஹனேதான். அவனே காஷாயம், த்ரிதண்டம் எல்லாவற்றையும் அவருக்குக் கொடுத்து, அவரை ஆசார்யர் ஆக்கி, அந்த உயர்ந்த ரீதியிலே தன்னை ஆராதிக்கும் படியாகப் பண்ணி விட்டான்.

தன்னை ஆராதிக்க துரியாசிரமம்தான் உயர்ந்த நிலை என்பதைக் காட்டிக் கொடுத்தான். அன்றைய தினத்திலிருந்து இந்த க்ஷணம் வரையில் நாற்பத்தைந்து மகான்களாலே, இந்த அறுநூறு ஆண்டுக் காலத்திலே விசேஷமாக ஆராதிக்கப்பட்டு வருகிறான் மாலோலன் என்கிற அந்த நரசிம்ஹன்.


நரசிம்ஹ ஆராதனம் என்பது பழுது படாமல் நடக்க வேண்டும். அதிலே தோஷம் சம்பவிக்கக்கூடாது. எந்தவித லோபங்களும் இருக்கக்கூடாது.

அதனால்தான் அத்தகைய நரசிம்ஹன் திருவடியிலே சரணாகதம் பண்ணு; அப்படிப் பண்ணினால், திரும்பி வருதல் இல்லாத நித்யானந்தத்தைக் கொடுக்கிறது என்கிறார்கள்.

அஹோபிலத்து ஆசார்யர்கள் எல்லாருமே நரசிம்ஹ உபாஸனை பண்ணுவதிலே கைதேர்ந்தவர்கள்; உயர்ந்தவர்கள்.

அஹோபில மடத்து நாற்பதாவது சுவாமி ரங்கநாத சடகோப யதீந்த்ர தேசிகர் – காரைக்குறிச்சி பெரிய அழகிய சிங்கர் என்று பெயர்; அவர் திருமுகமண்டலத்தைப் பார்த்தாலே நமக்கெல்லாம் ஒரு பீதி ஏற்படும் – அவ்வளவு நரசிம்ஹ உபாசனை! திரையைப் போட்டு விட்டு, உள்ளுக்குள்ளே வெள்ளி மண்டபத்திலே, மாலோலனோடு பேசுவார் அவர்! திருக்கச்சி நம்பி என்பவர் காஞ்சிபுரத்திலே அந்த தேவாதிராஜனோடு பேசினார். அந்த மாதிரி நரசிம்ஹனோடு பேசினார் ரங்கநாத சடகோப தேசிகர். பகவானும் அவரோடு பேசினான். மந்திர சித்தி வாய்க்கப் பெற்றவர் அவர்.

மடத்து யானை மதம் பிடித்து ஓடி வருகிறது. எல்லாரும் ஓடிப் போய் விட்டார்கள்; அப்போது சுவாமி த்ரிதண்டத்தைக் கையிலே



வைத்துக் கொண்டு, அந்த நரசிம்ஹ தீர்த்தம் - திருமஞ்சனம் பண்ணிய தீர்த்தத்தை அப்படியே கையிலே வைத்துக் கொண்டு போகிறார். வேகமாக வந்து கொண்டிருந்த யானை, இவரைப் பார்த்தவுடனே அப்படியே நின்று விட்டது. நின்று, பின்னங்கால் இரண்டையும் மடக்கி வைத்துக் கொண்டு, துதிக்கையைத் தூக்கி, 'நரசிம்ஹா!' என்று மூன்று முறை கத்தியது.

"ஏனடா! என்ன உனக்கு?..." என்று அதைத் தடவிக் கொடுத்து, பெருமாள் தீர்த்தத்தை வாயிலே கொடுத்தார். அதனுடைய மதமெல்லாம் அடங்கிப் போய்விட்டது!

அறுபது – எழுபது ஆண்டுகளுக்கு முன் நடந்தது இது. சமீப காலத்திலே வாழ்ந்த ஒரு மகான், நரசிம்ஹ உபாஸனையினாலே உயர்ந்து நின்றார். எத்தனையோ நல்ல காரியங்கள் அவராலே நடந்திருக்கின்றன.

ஆதலால், முமுக்ஷுக்களாகி, மறுபடியும் திரும்பி வருதல் இல்லாத நித்யானந்தத்தை அடைய வேண்டுமானால், அவன் திருவடிகளைத்தான் பற்ற வேண்டும்.

முமுக்ஷுபாஸ்ய தேவதையாக அவன் இருப்பதனாலே, அவனே பரமாத்மா, அவனுக்கு நிகர் இல்லை என்பது காட்டித் தரப்படுகிறது.

மேலும் ஒரு லட்சணம் உண்டு : அபஹத பாப்மத்வம் – எந்த கர்மாவும் அவனிடத்திலே ஒட்டிக் கொள்வதில்லை. ஒன்றில் இருக்கிற குண–தோஷங்கள் அவனிடத்தில் வந்து சேருவதில்லை. குண தோஷங்களுக்கு அப்பாற்பட்டவனாக அவன் இருக்கிறான்.

அடர பொன் முடியானை, ஆயிரம் பேரானை
சுடர் கொள் சுடர் ஆழியானை, இடர் கடியும்
மாதா பிதுவாக வைத்தேன் எனது உள்ளே
யாது ஆகில் யாதே இனி!

என்று நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியிலே சொல்கிறார். பெரிய திருவந்தாதியை அதர்வண வேதம் என்பார்கள்.

அவன் தோற்றத்தைக் கண்டே அவன் பரமாத்மா என்று தெரிந்து கொள்ளலாமே, என்கிறது இந்தப் பாசுரம்.

அந்தத் திருவபிஷேகத்தைப் பாருங்கள். தகத்தகாயமாக ஜொலிக்கிற அந்தத் திருமுடியைப் பாருங்கள்....

முடிச்சோதியாய் உனது முகசோதி மலர்ந்ததுவோ!
அடிச்சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ!

– இன்னொரு இடத்திலே, திருவாய்மொழியிலே அதே நம்மாழ்வார் சொல்கிறபோது, அந்த முகத்திலே இருக்கும்படியான ஜோதி, வடிவழகு இருக்கிறதே, அது அவ்வளவு தூரம் சென்று தங்கிப் பிரகாசிக்கிறதோ, அடியிலே இருக்கிற புகர் தாமரையாய் அலர்ந்ததுவோ! ஏ திருமாலே நீ சொல்! என்று அவனிடமே கேட்கிறார்.

ஜோதியிலே பெரிய ஜோதி அந்த எம்பெருமான். அதனால்தான் முண்டகோ பநிஷத் என்கிற உபநிஷத், சுவேதாசுவேதர உபநிஷத் – இதெல்லாம் சொல்கிறது,

'அவனுடைய ஒளியினால் ஒளியே ஒலி பெறுகின்றது' என்று.

அவனிருக்கிற இடத்திலே அக்னியினால் என்ன செய்ய முடியும்? சூரியனால் என்ன செய்ய முடியும்? சூரியனால் என்ன காந்தியைக் கொடுக்க முடியும்...? சர்வ சராசரங்களுக்கும் ஒளியைக் கொடுக்கிறவன் அவன் தான் என்று இந்த வாக்கியம் சொல்கிறது: 'அவன் கிரீடத்தைப் பாருங்கள். அதைப் பார்த்தாலே சர்வ லோகத்துக்கும் அவன் சக்கரவர்த்தி என்று தெரிகிறது. அவன் கையிலே சுடர் ஆழியை வைத்துக் கொண்டிருக்கிறான், அதைப் பாருங்கள். இதையெல்லாம் விட்டு விடுங்கள்... இதை வைத்துக் கொண்டு அவன் பரமாத்மா என்று நீங்கள் உணர வேண்டாம். ஆயிரம், திருநாமங்கள் வைத்துக் கொண்டிருக்கிறானே... அதை வைத்துத் தெரிந்து கொள்ளுங்கள்!

இங்கே, பேராயிரம் உடையோனை, நம் துக்கத்தைப் போக்குபவன் அவன் என்று உணர்ந்து, மாதா பிதாவாகவே என்னுள்ளே வைத்துள்ளேன். அவன் என்னுள்ளே இருக்கிற வரைக்கும் எனக்கு என்ன குறை? நான் என்ன பண்ண வேண்டும்! வேறு என்ன வேண்டும் எனக்கு!' என்று மார் தட்டுகிறார் ஆழ்வார்.

(வளரும்)

ஜூனியர் பயோடேட்டா

பாடகர்கள் தங்கள் பயோடேட்டாவை சபாக்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்க, ஜூனியர்களின் பயோடேட்டாவை நாங்கள் தேடினோம்...



• ரஞ்சனி, அன்னப் பூர்ணாவுடன்

பெயர் - அன்ன பூர்ணா

செல்லப்பெயர் - பூர்ணா

வயது - ஒண்ணே முக்கால்

படிக்கும் வகுப்பு - இல்லே!

பள்ளி - அப்படீன்னா?

எடை - 14 கிலோ

பிடித்த உணவு ஐட்டம் - சிப்ஸ், மிக்ஸ்சர்

அடம் பிடிப்பது - தான் பாடினால் எல்லோரும் கை தட்ட வேண்டும்

ஆனந்தமளிப்பது - ரைம்ஸ் பாடுவது

தயக்கமின்றிச் செய்வது - பூச்சிகளை 'டெர்ம்'மென அடிப்பது

பயப்படுத்தும் விஷயம் - தனிமை

அடிக்கடிப் பயன்படுத்தும் வாக்கியம் - 'எல்லாரும் க்ளாப் பண்ணுங்க'

டி.வி. நிகழ்ச்சிகளில் பிடித்தது - வீட்ல டி.வி போடுவது அரிதாம்.

அம்மாவின் பெயர் - திருமதி ரஞ்சனி (பாம்பே ரஞ்சனி - காயத்ரி சகோதரிகளில் ஒருவர்)

பெயர் - வாசுதேவ் கிருஷ்ணா

செல்லப் பெயர் - கிருஷ்ணா

வயது - ஐந்து

படிக்கும் வகுப்பு - யூ.கே.ஜி

பள்ளி - லேடி ஆண்டாள்

எடை - 20 கிலோ

பிடித்த உணவு ஐட்டம் - ரசம் சாதம், சாக்லேட்ஸ்டிக்

அடம் - ஸ்பைடர்மேன், சூப்பர்மேன் உடைகளை அடிக்கடி அணிந்துகொள்ள

ஆனந்தமளிப்பது - கிரிக்கெட், சைக்ளிங், ஸ்போர்ட் வாசிப்பது

பயப்படுத்தும் விஷயம் - இடி, மின்னல்

அடிக்கடி பயன்படுத்தும் வாக்கியம் - 'ஓ மை காட்'

டி.வி. நிகழ்ச்சிகளில் பிடித்தது கார்ட்டூன்கள், இசை நிகழ்ச்சிகள்

அப்பாவின் பெயர் - உன்னிகிருஷ்ணன்

பெயர் - லட்சுமிப்ரியா

செல்லப் பெயர் - ஸ்வாதி (பிறந்த நட்சத்திரமும்கூட)

வயது - மூன்றரை

படிக்கும் வகுப்பு - எல்.கே.ஜி

பள்ளி - ஹிண்டு வித்யாலயா

பிடித்த உணவு ஐட்டம் - நூடுல்ஸ், ஓமப் பொடி

அடம் பிடிப்பது - சாப்பிட

ஆனந்தமளிப்பது - பஜன்ஸ் பாடுவதும், டூவீலரில் போவதும்


தயக்கமின்றிச் செய்வது - தண்ணீரில் ஆட்டம் போடுவது

பயப்படுத்தும் விஷயம் - மொட்டைத் தலை (ஆளவந்தான் பார்த்ததிலிருந்து)

டி.வி. நிகழ்ச்சிகளில் பிடித்தது - விளம்பரங்கள்

அம்மாவின் பெயர் - டாக்டர் ஆர். ஹேமலதா, வயலின் கலைஞர்)

பெயர் - சுஷாந்த்
செல்லப் பெயர் - சுஷி
வயது - இரண்டு
பள்ளி - மான்டிசரி உயர் நிலைப் பள்ளி
பிடித்த உணவு ஐட்டம் - ரவாகேசரி
அடம் பிடிப்பது - தூங்க மாட்டேன் என்று



• லட்சுமிப்ரியாவுடன் அப்பா அம்மா

ஆனந்தமளிப்பது - சிங்கம், கரடி, சிம்பன்ஸி போன்ற வன விலங்குகளின் படங்கள்.

பயப்படுத்தும் விஷயம் - சிலசமயம் மேற்படி படங்கள்

அடிக்கடிப் பயன்படுத்தும் வாக்கியம் - 'உன்னை அடிச்சுக் கட்டி மேலே தொங்க விடட்டுமா?''

டி.வி நிகழ்ச்சிகளில் பிடித்தது - கார்ட்டூன், படையப்பா (எந்தப் படத்தில் ரஜினி வந்தாலும் அவர் பெயரே படையப்பாதான்)

அப்பாவின் பெயர் - சஞ்சய் சுப்ரமணியன்.



• அப்பா, அம்மாவுடன் வாசுதேவ் கிருஷ்ணா

பெயர் - அக்ஷய் வெங்கட்
செல்லப் பெயர் - அப்பு
வயது - ஆறு
படிக்கும் வகுப்பு - ஒண்ணாங்கிளாஸ்
பள்ளி - பத்மா சேஷாத்ரி, கே.கே. நகர்
எடை - 18 கிலோ
பிடித்த உணவு ஐட்டம் - மைலோ

அடம் பிடிப்பது - ஷூஸ்தான் வேணும், செப்பல் வேணாம்.

ஆனந்தமளிப்பது - குட்டிக் கார்கள்

பயப்படுத்தும் விஷயம் - இருட்டு

அடிக்கடிப் பயன்படுத்தும் வாக்கியம் அம்மா, மைலோ வேணும்.

டீவி நிகழ்ச்சிகளில் பிடித்தது - கார்ட்டூன்கள்.

பெயர் - சேத்னா
செல்லப்பெயர் - சேத்து
வயது - எட்டு
படிக்கும் வகுப்பு - மூணாங்கிளாஸ்
பள்ளி - பத்மா சேஷாத்ரி, கே.கே.நகர்
எடை - 25 கிலோ
பிடித்த உணவு ஐட்டம் - குலோப் ஜாமூன்

அடம் பிடிப்பது - எங்காவது அழைத்துச் செல்வதாகக் கூறிவிட்டால் அழைத்துச் சென்றேயாக வேண்டும்.

ஆனந்தமளிப்பது - கோகுலம் போன்ற குழந்தைகளுக்கான புத்தகங்கள்.



• சேத்து, அப்புவுடன் காயத்ரி வெங்கட்ராகவன்

பயப்படுத்தும் விஷயம் - ஆசிரியர்கள், குறைவான மதிப்பெண்கள்

அடிக்கடி பயன்படுத்தும் வாக்கியம் - 'அம்மா, டீச்சர்' என்ன சொன்னாங்கன்னா...

டீ.வி நிகழ்ச்சிகளில் பிடித்தது - எதுவும் பிடிக்காது. புக்ஸ்தான் பிடிக்கும்.

அப்பு, சேத்னா இருவரின் அம்மா பெயர் - காயத்ரி வெங்கட்ராகவன்.

— ஜி.எஸ்.எஸ்



அண்டை வீட்டு வம்பு!

கலர் மாறும் தலைமுடி!

● கர்நாடக விவசாயத் துறை அமைச்சர் ராஜூ கௌட, திடீர் திடீரென தகவல்களை அள்ளி வீச திக்குமுக்காடிப் போகிறார் முதல்வர் கிருஷ்ணா!

"காட்டிலிருக்கும் நாகப்பாவுக்கு வீட்டில் சமைத்த உணவுகள் போகின்றன. நாவிதர் போய் வருகிறார். மருந்துகளும் வேளாவேளைக்கு அவர் வாய்க்குள்... இப்படி எல்லோருமே சுளுவாகப் போகும்போது நம்மால் மட்டும் போய் லபக்கென்று அவரை மீட்க முடியாதா?" என்று அதிரடியாகக் கேட்டிருக்கிறார்.



● கலாம்

எரிச்சலடைந்த முதல்வர், "இப்படி அமைச்சர்கள் பொறுப்பற்றுப் பேசுவதையெல்லாம் நம்பக் கூடாது. நான் அவருடைய பேச்சு குறித்து விளக்கம் கேட்டிருக்கிறேன்" என்றார். பல வருடங்களுக்கு முன் ராஜூ கௌடா தேர்தலில் நின்றபோது பல விதங்களிலும் உதவியிருக்கிறான் வீரப்பன் என்றொரு பேச்சு!

● வண்ணத் திருவிழா (ஃபெஸ்டிவல் ஆஃப் கலர்ஸ்) தற்சமயம் பெங்களூரில் நடை பெறுகிறது. இது ஹோலி பண்டிகை அல்ல! ஹேர் கலரிங்! தலைமுடிக்குச் சிவப்பு, வயலட், கோல்ட்... என விதவிதமான கலர்கள். லக்மே பியூட்டி சலூன் இதை டிஸம்பர் இறுதி வரை நடத்த இருக்கிறது. இன்றைய இளம் பெண்கள் தலைமுடியில் சில கற்றைகளில் மட்டுமே கலரிங் செய்து ஹைலைட் பண்ணுகிறார்கள். பெரிசுகளின் சாய்ஸ் முழு தலைமுடிக்கும் சாயம்தானாம்! இவர்களின் இலக்கு 16-35 வயதுள்ள பெண்கள். பொதுவாகவே ஃபேஷனில் மற்ற நகரங்களை விட முன்னணியில் நிற்கும் பெங்களூர், தற்சமயம் மேலும் வண்ணமயமாகக் காட்சியளிக்கிறது. தலைமுடி கறுப்புக் கலரைத் தவிர வேறு எந்தக் கலரிலும் இருக்கலாம். அதான் ஃபேஷன் ஸ்டேட்மெண்ட் என்கின்றனர் பெங்களூர் குஜிலி கும்பல்கள்... அதுங்க சொன்னா சரியா தாம்பா இருக்கும்!

● மைசூர் செக்ஸ் ஊழல் பற்றித்தான் எங்கும் பேச்சு. இதில் பல சட்ட வல்லுநர்கள், நீதிபதிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக தகவல். உண்மை என்னவென்று போக போகத்தான் தெரியும். மைசூரிலிருக்கும் ரிஸார்ட்டில் நீதிபதிகள் திருவிளையாடலில் ஈடுபட்டிருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. அங்கு ஒரு கணவன் மனைவி சாப்பிட வந்திருந்தனராம். மனைவிக்கெதிரான டேபிளில் ஒரு நீதிபதி பிடிவாதமாக அமர, கணவன் எதிர்த்திருக்கிறார். சண்டை வலுத்தது. "நான் ரொம்ப பெரிய ஆளு..." என்று குதிக்க, அதற்குள் போலீஸ் வந்து... எல்லாமே வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

கர்நாடக ஹைகோர்ட் விசாரணையைத் துவங்கியுள்ளது. சீஃப் ஜஸ்டிஸ் என்.கே. ஜெயின் பொதுமக்களிடம் ஈ-மெயில் மூலமாக தங்கள் கருத்துக்கள், சாட்சியங்களை அனுப்புமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

பெண் வழக்கறிஞர்கள் உண்மை நிலை என்ன என்பதை, கூடிய சீக்கிரம் வெளி உலகிற்குத் தெரிவிக்க வேண்டுமென துடிக்கிறார்கள். பல என்.ஜி.ஓக்கள் அப்துல் கலாமிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். ரெயின்போ ஃபோரம் என்ற அமைப்பு, நீதிபதிகள் இரண்டுமுறை முறைகேடாக நடந்தும் (ஒரு முறை லலித் மஹல் பாலஸ், இன்னொரு முறை இலங்கையில்) அதை கப்சிப்பாகக் கண்டுகொள்ளாமல் விட்டது ஏன் என்று கேட்டிருக்கிறது.

- லதா சேகர்

இவங்களெல்லாம் கூந்தலுக்கு
என்ன தைலம் போடுறாங்க?

தேவமருந்து-19

என்னைச் சந்திக்கும் பெண்களில் நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதம் பேர் தவறாமல் கேட்கும் கேள்வி என்ன தெரியுமா? "தலைமுடி கொட்டுதே டாக்டர். ஏதாவது தைலம் தர்றீங்களா?" என்பதுதான்.

கூந்தல் வளம் தரும் அற்புதமான தைலம் ஒன்றின் செய்முறை பற்றி இந்த வாரம் விளக்கினால், பலருக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

நீலிபிருங்காதி தைலம்

தேவையான பொருட்கள்

நல்லெண்ணெய்

(அ) தேங்காய் எண்ணெய் - 2 லிட்டர்

அவுரி இலைச்சாறு, மூடக்கத்தான் சாறு, நெல்லிக்காய் சாறு, கரிசலாங்கண்ணி சாறு, ஆட்டுப்பால், பசும்பால், எருமைப்பால், தேங்காய்ப்பால், எல்லாமே ஒரே அளவாக இருக்க - மொத்தமாக ஒரு லிட்டர் அளவு எடுத்துக் கொள்ளவும். அதிமதுரம், அஞ்சனக்கல், குந்துமணி தலா ஐந்து கிராம், இரும்புப் பொடி, மாம்பருப்பு, தானிக்காய் தோல், வகைக்கு எட்டு கிராம் எடுத்து வெந்நீரில் ஊற வைத்து, மை போல அரைக்கவும்.

இரும்புச் சட்டியில் நல்லெண்ணெய், பால் கலந்த மூலிகைச் சாறு, அரைத்த விழுது சேர்த்து நிதானமான தீயில் கண்டக் காய்ச்சவும். நுல அம்சம் கண்டியதும், தைலம் பிரியத் தொடங்கும். மணல் மணலாகப் பிரிவது நல்ல பதம். இறக்கிவிட்டு, ஆற வைத்து, பத்திரப்படுத்தவும்.

நீலி பிருங்காதி தைலத்தை, தேய்த்தும் குளிக்கலாம். கூந்தல் வாரவும் பயன்படுத்தலாம். சீதள வீரியமானது என்பதால், குளிர்ச்சி தேகம் உடையவர்கள் அதிகமாகப் பயன்படுத்தக் கூடாது. சளி பிடிக்கும்.

தொடர்ந்து பயன்படுத்தினால், பொடுகு, முடி உதிருதல், கண் எரிச்சல், செம்பட்டைத் தலைமுடி, பித்தக் கொதிப்பு, தலைவலி, தூக்கமின்மை போன்ற பற்பல பிரச்னைகள் தீர்ந்து போகும்.

இனி, விஷயத்துக்கு வருவோம்.

நாம் உண்ணும் உணவு எத்தகைய தன்மை உடையதோ, அது போலத்தான் நம்முடைய தன்மைகளும் இருக்கும். பரம்பரையாகவே சிலர் சாத்விகமா இருக்கிறதைப் பார்த்தோம்னா, அவங்க உணவும் மரபு ரீதியாகவே சாத்விகமா இருக்கிறதுதான் காரணம்.

'உணவு' என்பது உடம்பை போஷாக்கு செய்வதற்கு மட்டுமில்லாமல் மனநிலையையும் நிர்ணயிக்கிற விஷயமா இருக்கறதனாலே, உணவுப் பழக்கங்களில் கண்டிப்பாக கவனம் செலுத்தணும்.

ஒருவன் பால், நெய், காய், கனி, கீரை, பருப்பு வகை போன்றவற்றை, மிகச் சரியான அளவில் சாப்பிட்டு வருவானென்றால் அவனுடைய மனநிலை அமைதியாக இருக்கும்.

பதற்றமில்லாமல், நிதானமாக இருப்பான்.

காரம், புளி, உப்பு, எண்ணெய்ப் பலகாரங்களை அதிகமாகச் சாப்பிடறவனின் மனநிலை, ராஜஸிகமாக இருக்கும். ஆசாபாசங்கள் நிறைந்தவனாக, உணர்ச்சி பூர்வமாக இருப்பான்.

மலிந்தது, புளித்துப் போனது, பழையது கெட்டுப்போனது போன்றவற்றைச் சாப்பிடுபவன் தாமஸிகமாக இருப்பான். தாமஸிகம்னா மந்தம். எது நல்லது எது கெட்டதுன்னு முடிவு எடுக்க முடியாத ஒரு டல்னெஸ் இருக்கும்.



ஆறும்

ஆயுர்வேத சிகிச்சைக்கே அக்னி சிகிச்சைன்னுதான் பெயர்.

பிராணிகளுடைய வயிற்றில் இருக்கக்கூடிய அக்னிக்கு, 'ஜடராக்னி'னு பெயர். 'ஜடர்' என்றால் வயிறு. ஜடராக்னியுடைய செயல்பாட்டைப் பொறுத்தே ஆரோக்கியம் அமைகிறது.

அந்த அக்னி எதைப் பொறுத்திருக்கிறது என்றால், உணவைப் பொறுத்திருக்கிறது.

நாம் சாப்பிடும் பொருட்கள்,

டாக்டர் எல்.மகாதேவன்



சரியா இருக்கா?

அக்னியினாலே 'பாகம்' செய்யப்பட்டு, அன்ன ரஸமாக மாறுகிறது. அதுதான் முதல் ரஸ தாது. இதைத்தான் 'பிளாஸ்மா' என்கிறோம். இந்த ரஸ தாதுவிலிருந்துதான் மற்ற ரத்தம், மாமிஸம், மேதஸ், அஸ்தி, மஜ்ஜா, சுக்லம் போன்ற தாதுக்கள் எல்லாம் உருவாகின்றன.

உண்ணும் உணவு எப்படி இருக்கணும்? அறுசுவை நிரம்பியதாக இருக்கணும். மதுரம், அம்லம், லவணம், திக்தம், கடு, கஷாயம்னு அறுசுவைகள் சமமா இருக்கணும்.

'மதுரம்'னா இனிப்பு. (பால், நெய், சர்க்கரை), 'அம்லம்'னா புளிப்பு (எலுமிச்சை, மாதுளை) 'லவணம்'னா உப்பு. திக்தம்னா கசப்பு (பாகல், சுண்டை) 'கடு'னா காரம் (மிளகு, மிளகாய்) கஷாயம்னா துவர்ப்பு (தேநீர், தேன், வாழைக்காய்) இப்படி, ஆறுவிதமான சுவைகளும் கொண்ட உணவாகச் சாப்பிடணும்.

மதுர ரஸம், பூமியும் ஜலமும் கொண்டது. இனிப்பு சாப்பிட்டால், உடம்பில் கபத் தன்மை கூடும். வாதத் தன்மையும், பித்தத் தன்மையும் குறையும். மதுர ரஸம் சாப்பிட்டா புலன்களுக்குத் தெளிவைத் தரும். பிறந்ததிலிருந்து எல்லாருக்கும் பிடிக்கிற ரஸம் மதுர ரஸம்தான். இனிப்பு, தாதுக்களுக்குப் புஷ்டி தரும். 'குரு'ங்கிற குணமுண்டு. கொஞ்சம் ஹெவி. 'ஸ்நிதம்' என்றால் எண்ணெய்ப் பசை கொண்டது. தாய்ப்பால் அதிகரிக்கக் கூடிய தன்மை உடையது. அடபதியன் கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு போன்ற இனிப்புச் சுவை மிக்கவற்றை, பாலில் போட்டு, காய்ச்சிக் குடித்தால், பிரசவித்த பெண்களுக்குத் தாய்ப்பால் அதிகரிக்கும். மதுர ரஸம் ரொம்ப அதிகமாகச் சாப்பிட்டால் அதனால் கபம் கூடி, கொழுப்புச் சத்து உருவாகி, சில நோய்களும் வரலாம். உடல்பருமன், சர்க்கரை நோய், ஜீரண சக்திக் குறைவு போன்றவை ஏற்படலாம். சிலவகைத் தேன், மலை வாழை, சிற்றாமுட்டி, அதிமதுரம், கரும்பு, பேரீச்சை எல்லாம் மதுர ரஸம் அதிகமாகக் கொண்டவை.

இரண்டாவது ரஸம் அம்லம் அக்னியாலேயும், பூமியினாலேயும் ஆனது. புளிப்பு ரஸம் வாதத்தைக் குறைக்கும். பித்தத்தையும், கபத்தையும் கூட்டும். எண்ணெய்ப் பசையுண்டு. கொஞ்சம் உஷ்ண வீரியம் - லகுவானது. வாயுவைக் கீழ் முகமாக வெளியேற்றும் தன்மை உண்டு. சில வாத நோய், கண் நோய்களுக்கு புளிப்பைக் குறைத்துக் கொள்ளச் சொல்வது இதனால்தான். நெல்லி, மாதுளை, புளி, புளி வஞ்சி, தயிர், மாம்பழம் போன்றவை அம்ல ரஸம் கொண்டவை.

அடுத்து வருவது லவணம். இது ஜலம், அக்னி குணங்களாலானது. வாயில் நீர் சுரக்க வைக்கும் ரஸம். அன்னங்களுக்கு ருசியைக் கொடுப்பது. எண்ணெய்ப் பசை உண்டு. அதிகமாக உப்பு சேர்த்துச் சாப்பிட்டால், இளநரை, சரும நோய், ரத்த நோய் போன்ற நோய்கள் ஏற்படும்.

மற்ற மூன்று ரஸங்களை அடுத்த இதழில் பார்ப்போம்.

மேஷம்



மனத்தில் தெளிவும் அமைதியும் இருந்தாலே வேலைகள் சுறுசுறுப்பாக நடக்குமே! சுழற்றிவிட்ட பம்பரம்போல காரியங்கள் நடக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். 'என்னவோ வர்றதெல்லாம் கைக்கும் வாய்க்கும்தான் சரியா இருக்கு' என்று புலம்பிக் கொண்டிருப்பவர்கள்கூட, 'உம்... பரவாயில்லை. நாலு காசு கிடைச்சு, திருப்தியா இருக்கு' என்று சந்தோஷப் பட்டுக் கொள்வார்கள். உத்தியோகஸ்தர்கள் எல்லா வகையிலும் முன்னேற்றம் அடைவார்கள். கொடுக்கல் வாங்கல் சுமூகமாக இருக்கும்.

ரிஷபம்



''அடடா... ஏற்கெனவே பிரச்னை. இதுலே சனி பகவான் வேறு 2ல் உலவணுமா?'' என்று நொந்து போகாதீர்கள். சுப பலன்கள் நடக்கும். திருமணம், புதுமனை புகுவிழா போன்ற மங்களகரமான காரியங்கள் நடக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டிலிருந்து வரும் நல்ல செய்திக்காக, காத்திருப்பீர்களேயானால், அந்த விஷயம் ஜெயமாக முடிந்தது என்றே வைத்துக் கொள்ளலாம். நல்லவர்கள் சகவாசம் நன்மை தரும். பெண்களுக்கு உற்சாகமான மனநிலைமை இருக்கும்.

மிதுனம்



''என்னோட திறமையை யாரும் புரிஞ்சுக்கவே மாட்டேங்கிறாங்களே...'' என்று சோகப்பாட்டு பாடிக் கொண்டிருந்தீர்கள் இல்லையா? விடுங்க கவலையை. கலைத் துறையினருக்கு இந்த வாரம் ஏற்றம் தரும். அற்புதமான காலமாக அமையும். இயந்திரம், இண்டஸ்ட்ரீஸ், ரசாயனம், மருந்து, உணவு, ஆடை அணிகலன், அழகு சாதனங்கள் போன்றவை ஆதாயம் கொண்டு வரும். கடவுள்மீது பாரத்தைப் போட்டு விட்டு, காரியங்கள் செய்யுங்கள். நல்லதே நடக்கும்.

கடகம்




''அப்பாடா.. ஒரு தொல்லை தீர்ந்தது''னு பெருமூச்சு விடும்போது, இன்னொரு புதுத் தொல்லை ஆஜராகி அவஸ்தைப் படுத்திக் கொண்டிருந்தது இல்லையா? பூர்வ புண்ணியஸ்தானத்தில், புதன் கேதுவுடன் கூடி, குரு பார்வை ஏற்படுவதினால் மறைமுக, நேர்முக எதிர்ப்புகள் விலகி, குதூகலமானச் சூழ்நிலை அமையும். சகல காரியங்களாலும் வெற்றி உண்டாகும். புதிய பொருள் சேர்க்கை, சுப மங்கள காரியம் உண்டாகும். ஸ்ரீ சத்யசாயி பாபாவை பிரார்த்தனை செய்யுங்கள். மனம் அமைதி பெறும்.

சிம்மம்



எடுத்த எடுப்பிலேயே சொல்லிவிட்டால், பெண்கள் மிகுந்த உற்சாகத்தோடு பணியில் இறங்கி விடுவார்கள். எடுத்த காரியங்களில் வெற்றி, தெய்வீக ஈடுபாடு, புண்ணிய ஸ்தல யாத்திரை, சுப காரியங்களில் பங்கேற்க புதிய பொருள் சேர்க்கை என மகளிருக்கு அதிர்ஷ்டமான வாரம். மாணவர்கள் உழைப்புக்கும், திறமைக்கும் உரிய பயனை முழுமையாகப் பெறுவார்கள்.ஸ்பெகுலேஷன் வகையறா அளவான பலன் தரும். எனவே, அகலக்கால் வைக்க வேண்டாம். ஏற்றுமதி இறக்குமதி வகையில் அனுகூலமான திருப்பம் உண்டாகும்.

கன்னி



உத்தியோகத்தில் குழப்ப நிலை, தொழிலில் மந்த நிலை, வழக்கு விவகாரங்களில் இழுபறி என்று முன்னுக்குப் போகவிடாமல் இழுத்தடித்துக் கொண்டிருந்த நிலைமை மாறும் காலம் வந்தாச்சு. புதிய முயற்சிகள் திட்டமிட்டபடி நடக்கும். சிலருக்குப் புதிய வேலை வாய்ப்புகள் கூடிவரும். வியாபாரிகள் கடன் தொல்லைகள் நீங்கி மன அமைதி பெறுவார்கள். குல தெய்வப் பிரார்த்தனை நிறைவேற்ற விரும்புபவர்களுக்கு இதுவே தக்க சமயம். குடும்ப ஒற்றுமை பலப்படும்.

நடக்குமென்பார்; நடக்கும்!




கன்னி ராசிக்காரரான கஞ்சிரா புருஷோத்தமுக்கு காலம் மாறப் போகுதாமே!

துலாம்



"வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும்; அதை வாங்கித் தந்த பெருமை யெல்லாம் உம்மைச் சேரும்" என்று நீங்கள் ராசிநாதன் சுக்கிரனையும், ஜென்ம ராசியில் ஆட்சி பெற்று விளங்கும் செவ்வாயையும் போற்றிப் பாராட்டுங்கள். உண்மையிலேயே, எடுத்த காரியங்களில் வெற்றி, எதிர்பாராத தன வரவு, தெய்வீக ஈடுபாடு என ஆதாயமான பலன்கள் நடக்கும். உத்தியோகஸ்தர்கள், அலுவலகப் பணியானர்கள் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். பொன், வெள்ளி, நவரத்தினம் வகையறா லாபம் கொழிக்கும்.

மகரம்



மனை, வீடு, ரியல் எஸ்டேட், இனங்களில் நல்ல முன்னேற்றம் தெரியும். உத்தியோகஸ்தர்களுக்கும் அதிர்ஷ்டமான வாரம்தான். மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். புதிய உத்தியோக முயற்சிகள் வெற்றி பெறும். வெளிநாடு செல்வதற்கு முயற்சி செய்து வருபவர்களுக்கு, பயணம் கூடி வரும். சுய தொழில் அல்லது வியாபாரம் செய்பவர்கள் முன்னேற்றம் அடைவார்கள். பொருளாதார நிலையில் திடீர் உயர்வு ஏற்படும். சொத்து சம்பந்தமான வழக்குகளில் சாதகமான திருப்பங்கள் கொண்டு வரும்.

விருச்சிகம்



"எலி வளையா இருந்தாலும் தனி வளை வேணும்''னு புது வீடு கட்டும் முயற்சியில் படு தீவிரமா இறங்கியிருப்பீங்களே.. பாராட்டுகள்.. நிச்சயம், விக்னம் இல்லாது, புதுமனை புகு விழா நல்லபடியே நடக்கும். சுய தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு இதுவரை இருந்து வந்த போட்டி, பொறாமை எல்லாம் நீங்கி, ஆரோக்கியமான சூழ்நிலை நிலவும். கலைத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு மாமூலான பலன்கள் தடைபடாது. கிரக வழிபாடு செய்யுங்கள். மங்களம் பெருகும்.

கும்பம்



'முரசொலியும்', 'நமது எம்.ஜி.ஆரும்' போல எதிரும் புதிருமாக இருந்த கணவன் - மனைவியின் உறவு நிலையில் மெச்சத்தக்க மாறுதல் உண்டாகும். தடைபட்டுக் கொண்டிருந்த திருமணம் போன்ற சுபகாரியங்கள் இனிதே நடக்கும். குடும்பத்தில் குதூகலம் நிறைந்திருக்கும். ஆரோக்கிய நிலையில் பெரிய மாற்றமிருக்காது என்றாலும், வீண் மருத்துவச் செலவுகள் ஏற்படாது. உத்தியோகத்தில் சகல வகையிலும் மேன்மை ஏற்படும்.

தனுசு



குடும்பத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் நிறைந்திருக்கும். பண வசதி சரளமாக இருக்கும் என்பதால், புதிய உற்சாகத்துடன் வளைய வருவீர்கள். உடல் ஆரோக்கியம் கொஞ்சம் மக்கர் செய்யலாம். எனவே, உடல் நலத்தில் கவனம் தேவை. பெண்களுக்குப் புதிய பொருள் சேர்க்கை உண்டாகும். சண்டை, சச்சரவு, மனஸ்தாபம் காரணமாக இதுவரை குடும்பத்தை விட்டுப் பிரிந்திருந்தவர்கள், சமாதானம் அடைந்து ஒன்று கூடுவார்கள். மாணவர்களுக்குச் சிறப்பான காலம். சிலர் வெளிநாடு போகும் அதிர்ஷ்ட வாய்ப்பு பெறுவார்கள்.

மீனம்



அலுவலகத்தில் ஒற்றுமை, சக ஊழியர்களின் ஒத்துழைப்பு, விரும்பிய இடத்துக்கு மாறுதல், பதவி உயர்வு என மனத்துக்குப் பிடித்த நிகழ்வுகள் நடக்கும். பொன், வெள்ளி, நவரத்தினம், ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்கள் எதிர்பாராத லாபம் கொண்டு வரும். தொழில் நிமித்தமாகப் பயணம் செய்ய வேண்டி வரும். அந்தப் பயணமும் அனுகூலம் உண்டாக்கும். புனிதப் பயணங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். பெண்களுக்கு உற்சாகமான வாரம்.

டிசம்பர் 4 முதல் 10 வரை

அக்னிசர்மா பக்கம்



“கர்நாடக இசை கத்துக்கணும்!”

“இந்தியாவிலுள்ள எல்லா மொழியிலேயும் பின்னணி பாடிட்டேன். இருந்தாலும், ஏதோ ஒரு தாகம் மனசுல இருந்துட்டே இருக்கு” என்கிறார் மகாலட்சுமி ஐயர்.

சமீபத்தில் சென்னை வந்திருந்த அவரைச் சந்தித்த போது உற்சாகமாகக் கொஞ்சம் தமிழிலும், மிச்சம் ஆங்கிலத்திலும் பேசினார்.

“நாங்க வேலை நிமித்தம் மும்பையில் செட்டிலான தமிழ்க் குடும்பம். அம்மாவுக்கு நல்ல குரல்வளம். அப்பாவும் நல்ல இசைப் பிரியர். கல்பனா, ஷோபா, பத்மினி, மகாலட்சுமி என்று நாங்கள் நான்கு சகோதரிகள். சின்ன வயசிலேயே எல்லாருக்கும் பாட்டு சொல்லிக் கொடுத்தாலும் எனக்கு மட்டுமே அதிக ஆர்வம் இருந்ததால், இன்று பாடகியாகிட்டேன்” என்கிறார் மகாலட்சுமி.

“பெங்களூரில் உலக அழகிப் போட்டி நடைபெற்றபோது, அதற்குப் பின்னணி இசை அமைக்கும் பணியைச் செய்தவர் இளையராஜா. அப்போது அவரோட அறிமுகம் கிடைச்சு ‘பூந்தோட்டம்’ படத்தில் பாட அழைப்பு வந்தது.

“ஏ.ஆர்.ரஹ்மானிடம், ஒரு நண்பர் என்னை அறிமுகம் செய்து வைத்தார்.

மூன்று நான்கு மாதங்கள் கழித்து, ‘தில்சே’ படப்பாடலில் நாலைந்து வரிகளை மட்டும் பாடுகிற வாய்ப்புக் கொடுத்தார். சிறிய அளவிலான வாய்ப்பு என்றாலும், அது எனக்கு ஒரு நல்ல பெயரைப் பெற்றுத் தந்தது. அதன்பின் ‘முதல்வன்’, ‘கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்’ என்று தொடர்ந்து என்னைப் பாட வைத்தார். முதல்வன் படத்தில், ‘குறுக்கு சிறுத்தவளே’ பாடல் எனக்கு இத்தனைப் புகழ் வாங்கித் தரும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.

“ஹேராம் படத்தில், இளையராஜா, மராத்தியலாவணி பாணி பாடலை பாடச் செய்தார். தொடர்ந்து தேவா, எஸ்.ஏ.ராஜ்குமார், வித்தியாசாகர் என்று தமிழின் பிரபல இசையமைப்பாளர்களிடம் பாட வாய்ப்புகள் கிடைத்தன. தமிழில் மட்டும், ஐம்பது பாடல்கள் பாடிவிட்டேன். இருந்தாலும் கர்நாடக இசை கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை இன்னுமிருக்கிறது.”

- மௌலி

படம் : யோகா

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Pvt. Ltd.
Editorial Team : C. Egnath Raj, Anuradha Sekhar, C.Jesudoss. Layouts : S.Stephen, P.R. Rajan.
Editor : Seetha Ravi.
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Half Yearly Subscription : India : Rs. 165/-
Overseas (Air Mail) Annual : 62 U.S. Dollars, Srilanka Rs.2000/-

Registered with the Registrar of Newspaper of India under No 1041/57 " Registered No TN / Chief PMG-141 / 2002 "
Licensed to post without prepayment under PMG's Licence No WPP 37 " Registered as a Newspaper in Srilanka

